
பழநித் தல வரலாறு



அருள்மிகு


தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,

பழநி.

உ

சிவகுகமயம்

பழனித் தலவரலாறு



அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,

பழநி – 624 601.

திண்டுக்கல் மாவட்டம்

முதல் பதிப்பு 1958
திருத்திய பதிமூன்றாம் பதிப்பு அக்டோபர் 2017

விலை ₹ ரூ.60/-

பதிப்புக்குழு

முதன்மைப்பதிப்பாசிரியர்கள் :

சீ. செல்வராஜ், எம்.ஏ., பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர் / தக்கார்.
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழனி.

இரா. மேனகா
உதவி ஆணையர் / நேர்முக உதவியாளர்,
துணை ஆணையர் (முழு கூடுதல் பொறுப்பு)
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழனி.

துணைப்பதிப்பாசிரியர்கள் :

முனைவர். பெ. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எச்டி.,
மேனாள் ஆய்வுத்தகைசால் பேராசிரியர்,
தமிழ்த்துறை - அய்வு மையம்,
அருள்மிகு பழனியாண்டவர் கலை,பண்பாட்டுக் கல்லூரி,
பழனி.

இரா. முருகானந்தம், எம்.ஏ., எம்.பில்., பி.எட்.,
தலைமையாசிரியர்,
அர்ச்சகர் பயிற்சி நிலையம்,
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழனி.

347

பதிப்புரை

பழனித்திருக்கோயில் தமிழகத்திலேயே பெரும் சிறப்பு வாய்ந்த திருக்கோயிலாகும். பழனிமலைக்கோயிலில் முருகப்பெருமான் ஞானதண்டாயுதபாணியாக வரம் தரும் வள்ளலாக எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்து வருகின்றார். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானை "குருமூர்த்தம்" என்று ஆன்மீக அன்பர்கள் கூறுவர்.

தமிழ்நாட்டில் மிகச்சிறந்த "வேண்டுதல் தலமாக"ப் பழனி முருகன் கோயில் விளங்கி வருகின்றது. வேண்டுவோருக்கு வேண்டுவனவற்றை வழங்குபவர் முருகப்பெருமான் என்று பழந்தமிழ் இலக்கியமான திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

மலைக்கோயிலின் அமைப்பும் அழகும் கண்டு இன்புறத்தக்கனவாகும். மலைக்கோயிலினுள், மேற்கு நோக்கிய திருக்கோலத்தில் கனிவாய் முறுவலுடன் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஞானதண்டாயுதபாணியை வழிபடும் பக்தர்கள் தங்கள் கவலைகள் நீங்கப்பெறுகின்றனர்.

பல்வேறு பகுதிகளிலிருந்து திரளான பக்தர்கள், நாள்தோறும் பழனியாண்டவரை வழிபட வருவதால் இத்திருக்கோயில் எப்போதும் விழாக்கோலம் பூண்டிருக்கும்.

பழனிமலைக்கோயிலில் நாள்தோறும் ஆறுகாலப் பூஜைகள் நிகழ்கின்றன.

மலைக்கோயிலில் முக்கியமான திருவிழா நாட்களைத்தவிர பெரும்பாலான நாட்களில் "தங்கரத உலா" நடைபெறும். அருள்மிகு சின்னக்குமாரர் தங்கரதத்தில் உலாவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமையும். ஆறுபடை வீடுகளுள் மூன்றாவது படைவீடான திருஆவினன்குடி பழனித்தலத்தில் அமைந்துள்ளது. திருஆவினன் குடியின் சிறப்பினை நல்லிசைப் புலவர் நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் போற்றிப் பாடியுள்ளார்.

அருளாளர் அருணகிரிநாத சுவாமிகள் பழனித்தலத்தின் மீது 97 திருப்புகழ்ப் பாடல்களை அருளியுள்ளார். "அதிசயம் அனேகமுற்ற பழனிமலை என்றும், பதினாலுலகோர் புகழ் பழனி" என்றும் அருளாளர் அருணகிரிநாதர் பழனித்தலத்தின் பெருமையைப் போற்றிப் பாடியுள்ளார்.

பழனித்தலத்தின் வரலாற்றினைப் பக்தர்கள் அறிந்து கொள்ளும் வகையில், திருக்கோயில் சார்பில் இந்நூல் வெளியிடப்படுகின்றது. இந்தத் தலவரலாற்று நூல் மெய்யன்பர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று கருதுகின்றேன்.

சீ. செல்வராஜ், எம்.ஏ., பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர் / தக்கார்,
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழனி - 624 001.

பொருளடக்கம்

இத்திருக்கோயில் பற்றிய விவரங்கள்
அறியத் தொடர்பு கொள்ள வேண்டிய

இணையதளம் : www.palanimurugantemple.tnhrce.in

மின் அஞ்சல் : palanimurugan@tnhrce.org

உ
சிவகுகமயம்

1.பழனித்தல வரலாறு

படிக்கின்றிலை பழனித் திருநாமம் படிப்பவர்தாள்
முடிக்கின்றிலை முருகா என்கிலை முசியாமலிட்டு
மிடிக்கின்றிலை பரமானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின்றிலை நெஞ்சமே தஞ்சமேது நமக்கினியே

- கந்தரலங்காரம்

திருமலையின் சிறப்பு

திருவருள் ததும்பியது தமிழகம். இங்கு இறைவன் அருள் விளக்கம் மிகுதியும் பெற்ற திருத்தலங்கள் பல உள்ளன. அவற்றுள்ளே தொன்மைச் சேரனும், தென்னவனாகிய பாண்டியனும் ஒருங்கு போற்றிய கொங்கு வைகாவூர் நாட்டுப் பழம்பதியாகிய பழனி காலவரையறைக்குட்படாத பழமையும், பெருமையுமுடையது. இன்னும், தமிழ் இலக்கியங்களில் **"சித்தன் வாழ்வு"** எனச் சிறப்பிக்கப் பெற்றது. மலைமேல் மருந்தாகிய ஞானதண்டாயுதபாணியின் அருள் திருமேனியை நிர்மாணித்த காலம் காலவரையறையில் அகப்பட்டதன்று. அத்திருமேனியைத் தரிசித்த பேறு மக்களின் பிறவிப்பணியையகற்றி உலகப் பெரும்பேற்றில் இன்றும் என்றும் ஈடுபடுத்துவது.

திருமலையின் அமைப்பு

பழனிப் பொருப்பினின்றும் சுமார் நான்கு கி.மீ தூரத்தில் மேற்கு மலைத்தொடரின் ஒரு பகுதியாகிய கொடைக்கானல் மலையும் மற்றும் பலமலைத்தொடர்களும் பச்சைப் பசேலெனத் தோன்றி வெள்ளிய முகில்கள் மேலே தவழ்வனவாய் விளங்குகின்றன. இப்பழனிமலைக்குச் சிறிது அணித்தே மற்றுமோர் சிறு குன்று இடும்பன் மலை எனப் பெயர் பெற்று நிற்கின்றது. இவை கடல் மட்டத்திற்கு மேல் 1068 அடி உயர்ந்துள்ளவை. இதனையடுத்து இடும்பன் குளம் 147 ஏ.61 செ. நிலப்பரப்புள்ளது. பழனிமலையின் உச்சியில் அதன் மணிமுடி போல் முருகன் திருக்கோயில் விளங்குகின்றது.

உ. தொல்லியல் ஆய்வில் பழனி

* தமிழகத்தின் மிக முக்கியமான முருகன் கோயில்களுள் பழனிகோயிலும் ஒன்று. ஆறுபடை வீடுகள் முருகனுக்குரியவை. அவற்றில் திருஆவினன்குடி எனும் பெயர் கொண்ட இப்படைவீடும் அடங்கும். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் கேரளம் முதலான அண்டை மாநிலங்களிலிருந்தும் திரளான மக்கள் இத்திருத்தலத்திற்கு வந்து செல்கின்றனர். பெருங்கற்காலச் சின்னங்களான கற்பதுக்கை, முதுமக்கள் தாழி போன்றவை பழனியைச் சுற்றியுள்ள கிராமங்கள் பலவற்றில் கண்டறியப்பட்டுள்ளன. எனவே பெருங்கற்காலந்தொட்டே (கி.மு.500) இப்பகுதியில் மக்கள் வாழ்க்கை இருந்துள்ளது உறுதிப்படுத்துகிறது.

பெருங்கற்காலத்திற்குச் சமகாலமாகக் கருதப்படும் சங்ககால இலக்கியங்களில் பழனியும், அதனை ஆண்ட அரசர்களும் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. இவ்வூரின் பழம்பெயர் பொதினி என்றும், இப்பகுதியை ஆண்ட மன்னன் ஆவியர் குடியைச் சேர்ந்த வேள் ஆவிக்கோப்பெரும்பேகன் என்றும் அறிகிறோம். இவனைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் பலபடப் பேசுகின்றன.

"வண்டுபடத் தலைந்த கண்ணி ஒண் கழல்
உருவக் குதிரை மழவர் ஒட்டிய
முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட்டு யானைப் பொதினி ஆங்கண்" (அகம் பாடல். 1. 1-4 அடி)

என்று ஊரும் மன்னனும் அகநானூற்றில் குறிக்கப்படுகின்றனர். பொதினி என்பது பழச்சாறு எனவும் பனை அல்லது தென்னையிலிருந்தும் கிடைக்கும் பதனி என்றும் பொருள் கொள்ளத்தக்கது.

"முழவு உறழ்திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி" (அகம் 61 - அடி 15-16)

எனவும் பேசப்படும் பொதினியே பின்னாளில் பழனி என மருவியுள்ளது.

---

*திண்டுக்கல் மாவட்டத் தொல்லியல் கையேடு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 2007
பொதுப்பதிப்பாசிரியர் : முனைவர் சீதாராம் குருமூர்த்தி இ.ஆ.ப

பிற்காலத்தில் முருகன் தலமாகச் சிறப்புற்ற போது அறுபடை வீடுகளுள் ஒன்றாக இது கருதப்பட்டது. பழம் ஒன்றின் காரணமாகப் பெற்றோரைப் பிரிந்த முருகக்கடவுள் தனக்கென ஒரு ஊரை உருவாக்கிக் கொண்டு பழனி! எனப்பெயரிட்டதாகப் பழனித்தலபுராணம் மூலம் அறியலாம்.

கடையெழு வள்ளல்களில் ஒருவன் பேகன். இவன் குளிரால் நடுங்கி நின்ற மயிலுக்குப் போர்வை தந்தவன் என்று இவன் கொடைத்தன்மை விதந்து பேசப்படும். கொடைத்தன்மையில் எப்படிச் சிறந்தவனோ அத்தன்மை போல் வீரத்திலும் சிறந்தவன் என்று புறநானூறு கூறும் மேலும் பேகனை கபிலர், வன்பரணர், அரிசில் கிழார் பெருங்குன்றூர்க் கிழார் ஆகிய சங்கப் புலவர்கள் பாடிய பாடல்கள் புறநானூற்றில் (143, 144, 145, 146, 147) இடம் பெற்றுள்ளன. மற்றொரு ஆவியர் குடித்தலைவன் பதுமன் என்ற பெயர் கொண்டுள்ளான்.

இப்பகுதியில் ஆவியர்குடி என்னும் தனி இனக்குழுவினர் மிகுதியாக இருந்துள்ளனர். எனவே அவர்களின் தலைவன் ஆவியர் கோமான் எனப்பெயர் பெற்றுள்ளான். ஆவி நாடு என்றும் இந்நிலப்பரப்பு அழைக்கப்பட்டுள்ளது. பிற்காலக் கல்வெட்டுகளில் வைகாவி நாடு, வையாவி நாடு, வைகாவூர் நாடு என்றும் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இதனையொட்டியே இப்பகுதி வையாபுரி நாடு என்றும், தற்போது பழனி நகரின் நடுவில் அமைந்துள்ள குளம் வையாபுரிக் கண்மாய் என்றும் பெயர் வழங்குகிறது. ஆயர் இனக்குழுமக்கள் பழனியின் மற்றொரு பகுதியில் வாழ்ந்துள்ளனர். அவர்கள் வாழ்ந்த நாடு அண்டை நாடு என வழங்கப்பட்டுள்ளது.

பதிற்றுப்பத்தின் நான்கு, எட்டாம் பத்துக்களுக்குரிய பதிகங்கள் வேள் ஆவிக்கோ பதுமன் சேரரோடு மணவினைத் தொடர்பு கொண்டிருந்தான் எனக்கூறுகின்றன. சேரர்க்கும், ஆவியர்க்கும் இடையே இருந்த மண உறவால் பழனிமலைப் பகுதியில் சேரர் ஆதிக்கம் இருந்தது. கலையமுத்தூரில் கிடைத்த ரோம நாணயங்கள் சங்க காலத்திலேயே இப்பகுதி வணிகவளமும் செல்வச்செழிப்பும் மிக்கது என்பதைப் புலப்படுத்துகின்றன.

திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டு இலக்கியங்களுள் முதலில் வைத்து எண்ணப்படினும் அதன் காலத்தைக் கடைச்சங்ககாலத்திற்கும் பிந்தியதாகவே கருதுவர். தொடக்க காலத்தில் மலையே கோயிலாகக் கருதிவழிபடப் பட்டிருக்கலாம். அறுபடை வீடுகளில் அடங்கிய திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருத்தணி ஆகிய இடங்களில் கி.பி.8-9 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பாண்டியர், பல்லவர் கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கல்வெட்டுச் சான்றுகள் அவ்வக்கோயிலின் காலத்தை உறுதிப்படுத்த உறுதுணைபுரிகின்றன. ஆனால் பழனியிலுள்ள உள்ள தண்டாயுதபாணி என்னும் முருகன் கோயிலில் அத்தகைய முற்காலக் கல்வெட்டுக்கள் கிடைத்தில. எனவே, இக்கோயிலின் காலத்தைக் கணிப்பதில் சிரமம் உள்ளது.

தற்போது மலைமீது அமைந்துள்ள கோயிலின் கட்டுமானம் பிற்காலப்பாண்டியர் காலத்ததே என கணிக்கத்தக்கதாய் உள்ளது. மேலும், கோயில் கருவறையின் வடபுறச்சுவரில் இடம் பெற்றுள்ள சடையவர்மன் வீரபாண்டியன் கல்வெட்டும் இக்கோயில் இம்மன்னன் காலத்திற்குச சிலகாலம் முன்னதாகக் (கி.பி.13 ஆம் நூற்றாண்டு) கட்டப்பட்டிருக்கலாம் எனக்கருத இடமளிக்கிறது.

இங்குள்ள கோயிலின் கருவறைச் சுவர்களில் நான்கு கல்வெட்டுகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இவற்றில் ஒன்று கிருஷ்ணதேவராயர் காலத்தைச் சேர்ந்தது (கி.பி. 1520). இக்கல்வெட்டில் தான் ஸ்ரீ பழனிமலை வேலாயுதசாமி எனப் பெயர் இடம் பெறுகின்றது. மற்ற கல்வெட்டுக்கள் இக்கோயில் இறைவனை (முருகனை) இளைய நயினார் என்றே சுட்டுகின்றன (சிவபெருமானின் இளைய மகன்). பரிபாடல் காலத்திலேயே இத்தகைய கருத்து இருந்துள்ளது.

இங்குக் கருவறையில் அமைக்கப்பட்டுள்ள முருகன் ஆண்டியின் கோலத்தில் கையில் கோல் (தண்டு) ஒன்றை வைத்துள்ள நிலையில் உள்ளார். ஆனால் இச்சிற்பம் மற்ற சிற்பங்களைப் போல கல்லால் செய்யப்பட்டதல்ல. ஒன்பது வகையான மருத்துவப் பொருட்களைச் (நவபாசாணம்) சேர்த்து உருவாக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், முன் மண்டபம் ஆகிய அங்கங்களுடன் பிற்காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும். காலப்போக்கில் பல புதிய கட்டுமானங்கள், மண்டபங்கள், திருச்சுற்று ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

பழனித்தலம் அமைவிடம்

பழனித்தலம் சேரர், கொங்கு நன்னாட்டைச் சேர்ந்ததன் காரணமாக முன்பு கோவை மாவட்டத்தின் பகுதியாக இருந்தது. இவ்வூர் திண்டுக்கல் மாவட்டத்தில் பழனித் தாலுகா என்ற பகுதிக்குத் தலைநகராக விளங்கி வருகிறது. தென் இந்திய நேர் இருப்புப் பாதையில் திண்டுக்கல்லிருந்து போத்தனூர் கிளைப்பாதை பிரிந்து, பழனி வழியாகப் பாலக்காடு, கோயம்புத்தூர் செல்லும் இரயில் வசதியுள்ளது. இவ்வூரிலிருந்து கோவை, மதுரை, கொடைக்கானல், கரூர், ஈரோடு, தாராபுரம், பாலக்காடு முதலிய பல இடங்களுக்கும் பேருந்து வசதியுள்ளது. நாகர்கோயில், கோவை, சேலம், இராமநாதபுரம், தஞ்சை, குருவாயூர் முதலிய ஊர்கட்குச் செல்ல தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து விரைவு வண்டி வசதிகள் உள்ளன. இத்தலத்தின் மேற்கே 2 கி.மீ. தொலைவில் சண்முக நதி உள்ளது. புனித தீர்த்தமாக இது விளங்குகிறது. பாலாறு, வரத்தாறு, பொருந்தலாறு, சுருளியாறு, கல்லாறு, பச்சையாறு எனப்படும் **ஆறு நதிகள் இணைந்து சண்முக நதி** என்னும் பெயருடன் விளங்குகிறது.

பழனி மலையும், இடும்பன் மலையும்

புராண வரலாறு : பழனி மலையும் இடும்பன் மலையும், சிவகிரி, சத்திகிரி எனக் கயிலாயத்திலிருந்ததாகவும், சிவபெருமான் அவைகளை அகத்திய முனிவருக்குக் கொடுக்க, அவைகளைப் பொதிகைக்குக் கொண்டு போக நினைத்து அவர் இடும்பாசுரனுக்கு ஆணையிட அவைகளைக் கொண்டுபோகும் வழியில் களைப்படைந்து இப்போதிருக்கும் இடத்தில் இடும்பன் இறக்கி வைக்க அங்கு முருகன் கருணையினால் இவ்விடமே பொருந்தியதென்றும், இடும்பன் அதன் காரணம் நோக்கும் போது சிவகிரியின் மீது முருகன் கனிவாய்ச் சிறுவனாகக் குரா மரத்தின் கீழ்த் தோன்றவும், அசுரனுக்கும், இளஞ்சேய்க்கும் போர் நிகழவும், அசுரன் உயிர் நீப்ப, இடும்பியின் முறையீட்டால் உயிர் மீண்டும் பெறவும், அவன் பெற்ற இரு வரத்தால் ஆண்டவன் மலையில் இடும்பன் சந்நிதி என்ற இடத்தில் வாயில் காவலனாக ஒரு இடம் பெற்றுத்தான் இரு மலைகளையும் எடுத்துவந்தது போன்று காவடியுடன் தமது பிரார்த்தனைகளைக் கொண்டு வரும் அடியார்கள் முருகன் அருள்பெற வேண்டுமென்ற பிரார்த்தனையும் கை வரப்பெற்றானென்பதும் பழநிப் புராணக்கூற்று.

3. மலைக்கோயிலின் காலம்

மலைக்கோயிலின் காலம் காலவரையறைக்கு உட்படாததாக உள்ளது. பழனியாண்டவர் கோயில் கொண்டருளும் திருக்கோயில் சேர மன்னரால் அமைக்கப்பெற்றது என்பர். இதனை,

"சேரர் கோன் கட்டிவைத்த சீராலயம் வெளியில்
நேரிலகு மண்டபமும் நீள்சுற்று மாமதிலும்"

- என்று இப்பகுதியை ஆட்சி செலுத்திய குறுநில மன்னர், விசயகிரித் துரையவர்கள் கூறிய சமயமாலைப் பாடலும்,

"சிவகிரிக் கட்புவனம் உய்யச்சேரர் கோன் புரிதருபச் சிமத்துவார
நவமணிப்பொன் சினகரத்து ஞான கருணாநிதியாய் நவைதீர் அன்பர்
தவவுருச்சித்து உபசரிக்கும் சமயங்கள் தொறும்பல சுந்தர சொரூபம்
உவகை முற்றக்காட்டி யிருளோட்டி யொளிர்செழுஞ் சுடரைஉள்ளிவாழ்வோம்"

- என்று மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பாடலும் இதுபற்றிக் கூறுவதாகும். மலைக்கோயிலிற் சேர மன்னர் உருவம் பொறிக்கப்பெற்ற சிற்பங்களும் அமைந்துள்ளன. முருகப்பெருமானைப் பற்றிக் கூறும் மெய்க்கீர்த்திகளும் இம்முறையை விளக்கிக் கூறுவனவாகும். இதனையே தமிழ்நாடு அரசு தொல்பொருள் வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம், பழனி வரலாற்று ஆவணங்கள் ஆகிய நூல்கள் தெறிவிக்கின்றன.

மலை ஏறும் போது எதிர் நிற்கும் முதல் சிற்றாலயம் சேர விநாயகரதாகும். அதன் வாயிலிலுள்ள ஒரு தனிக் கற்சிலையில் சேரர்கோன் தன் குதிரை மீது செல்லும் தோற்றம் பொறிக்கப்பட்டுள்ளது. தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி வெள்ளை யானையின் மீது கைலாயம் செல்ல, அவர் தோழராகிய இச்சேரமானே தனது குதிரையின் மீது அமர்ந்து அவரைப் பின்தொடர்ந்து சென்று கைலாயம் அடைந்து இவ்வூனுடம்பினுடன் கைலாயபதியின் அருள் பெற்றனர். இவ்விருவர் காலம் 9 ஆம் நூற்றாண்டென ஆராய்ந்துள்ளனர். ஆதலின் சேரமானால் தொடங்கப்பெற்ற இவ்வாலயம் நாளடைவில் பாண்டியர்களாலும், கொங்குச் சோழர்களாலும், பல பக்தர்களாலும் புதுப்பிக்கப்பட்டும் பல மண்டபங்கள் நூதனமாக அமைக்கப்பட்டு இக்காலத்தே தோன்றும் அளவு பெருகியுள்ளது.

4. மலைக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள்

மலையில், பழனிப்பெருமான் கருவறையின் தெற்கு வடக்குச் சுவர்களிலும், வியாழவரிசைகளிலும் மூன்று பக்கங்களிலும் எட்டுக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை 13 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த கோனேரின்மை கொண்டான் வீரபாண்டிய தேவன், 15 ஆம் நூற்றாண்டின் மைசூர், வீரநஞ்சைய உடையார், விஜயநகரத்து கிருஷ்ண தேவராயர் ஆகியோரதும் சில சமீபகாலத்தவையுமாகும். மேற்குறித்த அரசர்கள் ஆண்டவருக்குரிய அன்றாட வழிபாட்டிற்குரிய பொருள்களுக்காக நன்செய், புன்செய், முதலிய நிலங்களும், திருநந்தா விளக்கு, திருவமுது, திருமஞ்சனம் பூமாலை முதலியவைகளுக்காக நிபந்தனைகளும் ஏற்படுத்தியமை அக்கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

பழனிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கர்ப்பக்கிருஹத்தின் வெளிப்புறச் சுவரில் உள்ள கல்வெட்டு வாசகங்களின் சுருக்கம்

கல்வெட்டு எண் - 1

கி.பி.1300-ல் பாண்டிய அரசன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் என்பவன் பழனி சுப்பிரமணிய சுவாமிக்குத் தன் பெயரால் ஒரு விசேஷ சந்தி பூஜை செய்ய ஏற்பாடு செய்தான். அதற்கு 'அவணிவேந்த ராமன் சந்தி' என்று பெயர். இந்தப் பூஜைக்கு வேண்டிய அமுதுபடி சாத்துப்படிகளுக்காக ஒரு ஊரையே தானமாகக் கொடுத்தான். இந்த ஊருக்கு 'அவணி வேந்த இராமநல்லூர்' என்று பெயர். இந்த ஊர் வைகாவூர் பெருமலைக்கு வடக்கிலும், கொண்டை ஆற்றுக்கும், அணைக்கு மேற்கிலும் இருந்தது. பிற எல்லைகளும் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. இதைக் கல்வெட்டு கூறுகிறது. கல்வெட்டு இறுதியில் முற்றிலுமாக எழுதப்படாமல் நின்று விட்டது. அக்காலத்தில் பழனிமலை வைகாவூர் நாட்டைச் சார்ந்ததாக இருந்தது. வைகாவூர் நாடு என்பது நாட்டுப்புறத்தைக் குறிக்கும். இந்தக் கல்வெட்டு ''கோனேரின்மை கொண்டான்'' என்பதால் அரசனே இந்த ஆணையைக் கொடுத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு எண் - 2

கி.பி.1316ல் ஆண்ட ஜடாவர்மன் வீரபாண்டியன் என்பவன் பழனி மலை சுப்பிரமணிய பிள்ளையார் கோயிலுக்கு 22 வேலி, ஒரு மாநிலம் தானமாகக் கொடுத்திருக்கிறான். இந்த நிலத்து வருவாயைக் கொண்டு அமுதுபடி, சாத்துப்படி முதலிய செலவுகள் செய்து கொள்ளக் கொடுக்கப்பட்டது. இந்த நிலத்திற்கு இடும்பன் குளம் என்றும் குன்றன்வயல் என்றும், வீரசோழ மண்ணரை என்றும் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இந்நிலம் இடும்பன் குளத்திற்கு மேற்கும், ஊர் வாய்க்காலுக்கு வடக்கும், சுப்பிரமணிய சுவாமி திருமஞ்சனக் குளத்திற்குக் கிழக்கும், பேச்சி மலைக்குத் தெற்கும் உள்பட்டு இருந்தது. இந்த நிலத்தில் இருந்து வரும் வருவாய் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. இந்தத் தானத்தைக் கோயில் கல் சுவரிலும், ஒரு செப்புப் பட்டயத்திலும் எழுதிக் கொள்ள ஆணையிடப்பட்டது. இந்தக் கோயில் வழிபாடு செய்பவர்களும் மண்டப முதலிகளும் காக்க வேண்டும் என்று கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டு எண் - 3

கி.பி.1316ல் ஆண்ட ஜடாவர்மன் வீரபாண்டியன் பழனி மலை சுப்பிரமணிய பிள்ளையார் கோயிலுக்கு ஒரு நிலம் தானமாகக் கொடுத்தான். கொடுக்கப்பட்ட நிலம் பழனி ஊர் வாய்க்காலுக்கு மேற்கு, வாணன் ஆற்றுக்கு வடக்கும், பிரும்ம குளத்திற்குப் போகிற வழிக்குக் கிழக்கும், பழனி ஊர் வாய்க்காலுக்கு தெற்கும் இடைப்பட்டிருந்தன. இந்த எல்லைக்குள்ளாக லஷ்மிநாராயணப் பெருமாள் நிலமும், ஏற்கனவே சுப்பிரமணிய சுவாமிக்குக் கொடுத்த விளை நிலமும், இருந்தன. அவை போக மீதி நிலம் இப்போது தானமாகக் கொடுக்கப்பட்டது. இந்த நிலத்து வருவாய்களாகப் பொன், நெல் முதலியவைகள் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன. இவற்றில் இருந்து திருப்பணி, அமுதுபடி சாத்துப்படி முதலிய நடத்திக் கொள்ள ஆணையிடப்பட்டது. இந்த ஆணையில் ஆளுந்தூர் உடையான், காணிங்கராயன் என்ற இருவர் கையெழுத்திட்டுள்ளனர்.

கல்வெட்டு எண் - 4

1318ல் ஜடாவர்மன் வீரபாண்டியன் என்பவன் காலத்தில் சுந்தரபாண்டியநல்லூரைச் சேர்ந்தவர்கள் இக்கோயிலுக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள். அதை இக்கோயில் பண்டாரத்தார்கள் (பொக்கிஷதாரர்கள்) பெற்றுக் கொண்டனர். சுந்தரபாண்டிய

நல்லூர் காடு, புன்செய், குடியிருப்பு, குளம், மரம், கிணறு முதலிய அனைத்தும் தானமாகக் கொடுக்கப்பட்டன. இந்தக் கல்வெட்டுச் சாசனத்திற்குத் திருநட்டப்பெருமாள், நையாதேவர், முடிகொண்ட பல்லவராயன், சண்டராதி, ரிஷபதேவன், சோழநாட்டு ஆள்வான், முடிகொண்ட சோழ பட்டன், சேமன், தில்லை சிங்கதேவர், நாராயண தேவன், பிள்ளை நாடாழ்வான், பல்லவரையன் முதலிய ஊர் பிரதிநிதிகள் கையொப்பம் இட்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்ல இந்தப் பத்திரத்தை ஆறுமுக பிச்சன் என்பவன் எழுதினான்.

கல்வெட்டு எண் - 5

விஜயநகர மாமன்னர் மல்லிகார்ஜூனன் என்பவன் ஆண்ட காலத்தில் 18.10.1471 இல் (விளம்பி வருஷம் கார்த்திகை மாதம் 5-ஆம் தேதி, சுக்லபட்சம், பஞ்சமி, வெள்ளிக்கிழமை, சூரிய கிரஹணத்தன்று) சகல லோகத்திற்கும் தம்பிரானார் நைனார். இளைய தனை நைனார் (பழனி சுப்பிரமணிய சுவாமி இவ்வாறு அவ்வூர் கல்வெட்டில் கூறப்படுகிறது). மூன்று சந்நிதிகளில் பூஜையும், மகாபூஜையும் நடக்கவும், திருஅமுது, திருநந்தா விளக்கு, திருமாலை, திருமஞ்சனம் முதலியவைகளுக்காகவும், வைகாவூர் நாட்டு **'இரவிமங்கலம்'** என்ற ஊர் தானமாகக் கொடுக்கப்பட்டது. இந்த இரவிமங்கலம் கொழுமம் போகும் பெருவழிக்குத் தெற்கிலும், பன்றி மலை வழிக்கு மேற்கும், பன்றி மலைக்கு வடக்கும், ஆற்றுக்கு கிழக்கிலும் இடைப்பட்டிருந்தது. அவற்றைச் சேர்ந்த நன்செய், புன்செய் அனைத்தும் மானியமாகக் கொடுக்கப்பட்டது. அவைகளைப் பழனி சுப்பிரமணியசுவாமி கோயில் ஸ்தானீகர்கள் காத்துக் கொடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கல்வெட்டு கூறியது. இந்தப் பத்திரத்தில் வைராகராயர், சேரமான் தேவர், மங்களராயர், திருநட்டப் பெருமாள், ரிஷபதேவன் ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர்.

கல்வெட்டு எண் - 6

வீரநஞ்சண்ண உடையார் காலத்தில் (ருத்ரோத்காரி வருஷம், தை மாதம் 22-ஆம் தேதி அபரபட்சம், வெள்ளிக்கிழமை, ரேவதி நட்சத்திரம், பஞ்சமி திதியன்று) சுப்பிரமணிய சுவாமிக்கு (நாயனார் இளையநாயனாருக்கு) வைகாவூர் நாட்டு கலயன்புத்தூர் சபையைச் சார்ந்த பெரிய பெருமாள் நம்பி திருஆழ்வார் தானம் கொடுத்தார். கல்வெட்டு முற்றிலும் எழுதப்படவில்லை.

கல்வெட்டு எண் - 7

விஜயநகரப் பேரரசன் கிருஷ்ணதேவ மகாராயன் காலத்தில் 13.11.1520 (விக்கிரம வருஷம் சித்திரை மாதம் 10ஆம் தேதி சுக்ல பட்சம், நவமி திதி, ரேவதி நட்சத்திரத்தன்று) கிருஷ்ண தேவராயரின் மந்திரி கொண்டயநரசய்யரின் அதிகாரி கொண்டய தேவமகாராஜா என்பவர் பழனி மலை வேலாயுதப் பெருமாளின் (சுப்பிரமணிய சுவாமிக்கு) நிலம் தானமாகக் கொடுத்ததைக் கல்வெட்டு கூறுகிறது. கல்வெட்டு முற்றிலும் எழுதப்படவில்லை.

கல்வெட்டு எண் - 1


எஸ்.ஐ.ஐ. தொகுதி 17, எண் 401. எ.ஆர்.இ.பிஎண்.371/1904

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவன சக்ரவர்த்தி கொ௳ (ன்ர௳)
   மல்கொண்டான் வைகாவூர் நாட்டுப் பழனியில் சுப்பிறம்
   மண்ணியப் பிள்ளையார் கொயில் தானாத் (தாற்) கு
   இப்பிள்ளையாற்கு நம்பெ-
2. ரால் அவனிவென் த (ராமன் ச) ந்திக்கும் அமுது (படிக்கும்)
   சாத்துப்படிக்கும் உள்(ளி)ட்ட விஞ்சனத்துக்கும் (இ)ன்னாட்டில்
   ஐய பொயிலான அவனிவெந்த ராமநல்லூர் தெவதானமாக மு(தல)
   டங்க இறையிலியாகத் தந்தொம்.
3. இவ்வூற்கு நான் கெல்லை... கீழ்பாற்கெல்லை... கொண்டை
   ஆற்றுக்கும் அணைக்கும் மெற்கும் ௳(த)ன்பாற் கெல்லை
   வைகாவூர் பெருமலைக்கு வடக்கும் மெல் பாற்கெல்(லை)...
   ங்கரைக்கு கிழக்கும் வ-
4. (டபாற்௳) கல்லை ஆ(ற்று)..... (தெற்கு) (வி) ளைநிலத்துக்கு
   (த்) ..... இன்னான் கெல்(லை)க்கும் பட்ட தெவன் பதி உட்பட
   நன்செ(ய்) புன்செயலத் (தம்) (முற்றுப்பெறாதது)

கல்வெட்டு எண் - 2

எஸ்.ஐ.ஐ. தொகுதி 17, எண் 402. எ.ஆர்.இ.பிஎண்.372/1904

1. ஸ்வஸ்த்ஸ்ரீ திருபுவன சக்ரவத்தி கொனெரின் மெல்
   கொண்டான் வீரபாண்டிய தெவற்கு பதினைஞ்சாவதுக்கு
   எதிர்.....வைகாவூர் நாட்டுப் பழனியில் மலையில் சுப்பிரமண்யப்
   பிள்ளையார் கோயிலில் தெவர் மைமிகளுக்கு இப்பிள்ளையார்க்கு
   அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட வெஞ்சனத்துக்கும் பலபடி நிமித்
   (த)த்துக்கும் பழனியில் இடும்பன் குளமா(ன) குன்றன் வயலான
   விரசோழன் மன்னறையிய வடக.


அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
பழநி

2. ரைக்கு நான்கெல்லையாவது (கிழ்) பாற்கெல்லை இக்குளத்துக்கு மெற்கும் மெ(தன்பா)ற் கெல்லை ஊர் வாய்க்கா(லுக்கு) வடக்கும் மெல்பாற்கெல்லை பிள்ளையார் திருமட..... க்கு கிழக்கும் வடபாற்கெல்லை பெய்ச்சிமலைக்குங் காட்டுக்கும் தெற்கும் இந்நான்கெல்லைக்குட்பட்ட நிலம் இருபத்திரண்டு மா அரைக்(கா)ணியும் குடுத்து இந்நிலத்துக்கு வருங்(குடி) மை, பாட்டங் காத்திகைப் பச்சை, அந்தராயம், உள்ளி

3. ட்டவையும் மற்றும் எப்பெற்(ப)ட்டவணைத்து வற்கமும் கழித்து வரியில் ..... கிலிங் கழிக்க சொல்..... படிக்கு இவ்வொலை பிடிபடாகக் கொண்டு கல்வி... ாள்க. இவை பெரிய உடையார் எழுத்து இவை.. ர பாண்டியச் சொமிதெவன் எழுத்து யருவதுக்கு எதிராமாண்டு ள்... ஙளபக துல்யம் உ மண்டபத்து முத(லிகள்) ரட்சை ஸ்ரீ (ரு)த்திரர் ஸ்ரீ மாகேசுவரர்ரட்சை உ

கல்வெட்டு எண் - 3

எஸ்.ஐ.ஐ. தொகுதி 17, எண் 403. எ.ஆர்.இ.பிஎண்.373/1904

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச்சக்கரவர்த்தி கொனெரின்மை கொண்டான் விரபாண்டியதெவதற்கு யாண்டு பதினைஞ்சாவதின் எதிர் யாண்டு அஞ்சாவது வை(க)ாவூர் நாட்டுப் பழனி(யி)ல் மலையில் சுப்பிரமண்யப் பிள்ளையார் கொயிலில் தெவர் கைமிகளுக்கு இப்பிளையார்க்கு இடு(ம்)பன்குளமான (கு)ன்றன் வயலான விரசோழன் மன்னறையில் இதன் கரைக்கு நான் கெல்லை யாவது கிழ்பார்க் கெல்லை இக்குளத்தில் நிர் கொவைக்கும் பழனி ஊர் வாய்க்

2. காலுக்கும் மெற்கும் தென்பாற்க் கெல்லை வறளன் ஆற்றுக்கு வடக்கும் மெலபார்க்கெல்லை பிரமழுனத்துக்குப் பொகிற வழிக்குக் கிழக்கும் வடபாற்க் கெல்லை பழனி ஊர் வாய்(க்) காலுக்குத் தெற்கும் இந்நான் கெல்லைக்குட்பட்ட நிலத்தில் இலஷ்மி நாராயணப் பெருமாள் திருவிடையாட்டம் நிலம் ஒரு மாநிக்கி நின்ற நிலத்தில் பழந் தெவதானமான நிலம் அரை மாவும் நிக்கி நிக்கி நின்ற நிலமும் புன்செயும் சித்திரை மாதம் முதல் இந்நாயினாற்குத்

3. திருப்பணிக்கும் அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட பாலபடி நிமிந்தங்களுக்கும் குடுத்தொம் இக்குளத்துக்கு இறுப்பினபடியாலுள் (ள பொன்னும் நெல்லு(ம்) காரத்திகைப் பச்சை அந்தராயம் உள்ளிட்டவையும் மற்றும் எப்பெற்பட்டவனைத்து வற்கமும் கழித்து வ(ரியி)லார் கணக்கிலும்

கழிக்கச் சொன்னெம் இப்படிக்கு இவ்வொலை சாதனமாகக் கொண்டு இக்குளம் சந்திராதித் தவற் செல்வதாக கல்லிலும் செம்பில்லும் வெட்(டி)க் கொள்க. இவை ஆளந்தா

4. குடையான் எழுத்து உ இவை காலிங்கராயன் எழுத்து (உயாண்டுபதி) லைஞ்சாவ (தி)ன் எதிர்யாண்டு ஐஞ்சாவ(து) (நா)ள் நணைத் ஸ்ரீ மகேசுவரர் ரட்சை

கல்வெட்டு எண் - 4

எஸ்.ஐ.ஐ. தொகுதி 5, எண் 287. எ.ஆர்.இ.பிஎண்.611/1893

1. ஸ்ரீ கொச்சடைபன்மரான திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விரபா
2. ண்டியதெவற்கு யாண்டு இருபத்திரண்டாவது ஆனி மீ
3. வைகாவி நாட்டுஆய்க்குடியில் சுந்தர பாண்டிய நல்லூர்க்
4. காரணவ ரொம் நாயனார் பண்டாரத்தார்க்கு விடுதிட்டுக்குடுத்-
5. தபரிசாவது எங்கள் காணியான னன்னிலம் நாவிற் றொருபத்
6. ருமா விதில் நாங்கள் முன்னால் தெவதானமாகவிட்ட கார்மரு(நி)
7. லம் ஒருமா முக்காணியும் ஒருபத்தறை ருலம் நாலு மாவும் ஆ
8. க னிலம் அஞ்சுமா முக்காணியும் நிக்கி நிலம் நாவிற்றைஞ்சி மாக் கா
9. ணியும் இதுக்கடைப்பான சுந்தரபாண்டிய நல்லூருங்காடுகளும்
10. புன்செய்களும் குடிஇருப்புக்களும் தொட்டங்களும் குளங்களில்
11. ஊரவர்களும் மெனெக்கின மரமும் கினெக்கின கிணறுகளும் மற்றும் எ.
12. ப் பெறப்பட்ட சமஸ்தா பிராப்திகளும் இற்றைநாளால் எங்கள்
13. மையாவெ விட்டு விடுதிட்டுக்குடுத்தொம் நாயனார் பண்டா
14. ரத்தார்க்கு இக்காரணவரொம் இப்படிக்கு காரணவர் அமை
15. ஞ்ச மைக்கு திருநட்டப் பெருமாள் எழுத்து
16. இப்படிக்கு இவை குயினாதெவர் எழுத்து இப்படிக்கு இவைமுடி

17. கொண்டப் பல்லவரையன் எழுத்து இப்படிக்கு கண்டாரதித்தப்ப
18. ல்லவரையன் தற்குறி மாட்டெறிந்தென் ரிஷப தெவன் எழுத்து ஒல
19. க்கச் சொழ நாடாழ்வான் தற்குறி மாட்டெநந்தென் முடிகொண்ட
20. சொழ பட்டென் எழுத்து இப்படிக்கு இவைசெமன் எழுத்து
21. இப்படிக்கு தில்லை சிங்கதெவர் தற்குறி மாட்டெறிந்தான்
22. ஈனா ர ராயணதெவன் எழுத்து இப்படிக்கு பிள்ளை நாடாழ்வான் எழு
23. த்து இப்படிக்கு பல்லவராயன் எழுத்து, இப்படிக்கு இவர்கள் சொ
24. ல்ல இவ்விடுதிட்டு எழுதினமைக்கு இவ்வூர் மகேஷ்வரரால் அது
25. முகப் பிச்சன் எழுத்து உ

கல்வெட்டு எண் - 5

எஸ்.ஐ.ஐ. தொகுதி 286, எண் 401. எ.ஆர்.இ.பிஎண்.610/1893

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமஹா மண்டலெசுர ஹரி யராய விபா
2. டன்பாஷெக்கு தப்புவராயர் கண்டஸ் கண்ட
3. நாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் பூர்வபச்சி
4. மஉத்தர தக்ஷனாதிபதி மஹாராயர் தெவராய மல்லிகாச்
5. சுனராயர் பிது விராச்சியம் பண்ணி அருளா நின்ற காலத்து
6. சிராயதா... கள் அரியரா.... ஊமாயராய உடையரா....
7. பிறதுவிராஜ்ஜியம் பண்ணி அருளாநின்ற விளம்பி ஹ காத்
8. திகை மாதம் 5 தீ மதிரான்பக்கம் பஞ்சமி மூலம் கிழமை வெள்ளிப் பொழுதில்
9. சூரிய கிரணம் புண்ணிய காலத்தில் தாரபூறுவ -
10. மாகத் தன்ம சாதனம் பண்ணிக்குடுத்தபடியாவது சகல
11. லொகத்துக்கும் தம்பிரானார் நயினார் இளைய நயினா(ர்)க்கு
12. திறி சந்தியா காலமும் மஹாபூசையாக நடக்கத்தக்கதா
13. க திருமுன் அமுது திரு நந்தா விளக்கு திருமாலை திருமஞ்
14. சனம் முதலாய் உள்ள வைய் பொகத்துக்கும் நம்ப
15. பரிகாரம் கொயில் பரிசல பரிச் சின்னத்(து)க்கு நடக்க

16. வெண் வைய்காவூர் நாட்டு இரவி மங்கலம் மெ
17. பாற்கெல்லை எல்லை ஆறு கிழக்கு வடபாற் கெல்லை
18. கொழுமத்திற்குப் பொற பெருவழிக்
19. கு தெற்கு கிழ் பாற் கெல்லை பன்றி மலைக்கு வ
20. ழிக்கு தெற்கு தென்பாற்கெல்லை பன்றிமலைக்
21. கு வடக்கு ஆக இன்னான் கெல்லையும் நஞ்சை புஞ்சை
22. யும் சறுவமானியம் ஆக சந்திராதித்தவரை நடக்கும்
23. படிக்கு கற்பித்த அளவுக்கு இந்தநிதி நிற்செபம் செல..
24. பாரான முதலாய் உள்ள சறுவ சுவாமியளும் இந்த
25. கொயிலுக்குக டவ தானிகர் ஆகும் பண்ணிக் கொண்-
26. டு இம்மருசாதி நடத்தக் கடவராகவும்
27. இவ் வொ
28. லை பிடிப்பா
29. டாகக் கொ
30. ண்டு கல்லி
31. லும் ஞ் செம்
32. பிலும் வெ
33. ட்டிக் குடுத்
34. தொம் சந்தி
35. ராதிதவா
36. ..... கட
37. வராகவும் இ
38. ப்படி வயிரா
39. கராயர் எழு
40. த்து இப்படி
41. செரமனாதேவர்
42. எழுத்து மங்கா
43. ராயன் எழுத்து
44. ருத்ரமாஹேஸ்வரர்
45. ம(த)ன திரு நட்டப்
46. பெருமாள் எழுத்து
47. ரிஷப தெவன்

கல்வெட்டு எண் - 6

எஸ்.ஐ.ஐ. தொகுதி 5, எண் 285. எ.ஆர்.இ.பி.எண். 609/1893

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீமன் மஹாமன்டலிசுரன் அரி
2. ராய விபாடன் பாஷைக்கு தப்புவராயக கண் -
3. டன் ஸ்ரீ விர நஞ்சன உடையற்கு செல்லாநின் -
4. ற உதிகராற்காரி வருஷத்து தை மீ உயஉ
5. அபரபட்சத்து வெள்ளிக்கிழமை ரெ -
6. வதெயும் பஞ்சமியும் பெற்ற நாள் நாயினார் இளை
7. ய நாயினார்க்கு அமுது படிக்கு வைய்காவூர் நா -
8. ட்டு கலையன்புத்தூரில் சபையாரில் பெரிய
9. பெருமாள் நம்பி திருவாழி ஆழ்வாரெந் என்க-

(முற்றுப்பெறாதது)

கல்வெட்டு எண் - 7

எஸ்.ஐ.ஐ. தொகுதி 5, எண் 288. எ.ஆர்.இ.பி.எண்.612/1893

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஜயாப்து தயசாலிவாஹணச
2. காப்தம் ருவனசயஉ மெல் செல்லா நின்ற
3. விக்கிறம வருஷம் சித்திரை மீ 10 உ சுக்கிரவாரமும்
4. பெற்ற நவமி ரெபதி நட்சத்திரத்து நாள் மஹாராஜா
5. தி ராஜராஜ பரமேஸ்வர ஸ்ரீ வீரப்ரதாபஸ்ரீ கி
6. ருஷ்ணதெவ மஹா ராயர் ப்ரதிலி ராஜ்யம் பண்ணி
7. அருளா நின் கையில் மஹா மந்திரி செகரர..
8. கொண்டறரசையர் சமப்த ராஜ்யத்து
9. காவெரி வல்லவ கடக ரூறைகாரன் வி....வி
10. யிபகு உறையூர் புரவாதீஸ்வரன்..
11. வத்சிப பக்தி ஆராதகரான சென்....
12. கொண்டய தெவ மஹாராஜா ஸ்வஸ்தி
13. திபக் ஸ்ரீ பழனிமலை வெலாயுதப் பெருமாளுக்குத்
14. ரித்து சீர்மையான கரைவழி வைகாவூ...
15. நரிக்கரை பள்ளமும் கிழ்பாற்கெலை...

(முற்றுப்பெறாதது)

5. மலைக்கோயில் அடிவாரம் - கிரிவீதி

மலைக்கோயிலுக்குச் செல்வோர் முதலாவதாக அடிவாரத்திலுள்ள பாத விநாயகர் கோயிலை வலம் வந்து, கிரி வீதி சுற்றியும் மலை மேற்செல்லுவார்கள். பழனிக் குன்றினைச் சுற்றி அழகிய தொரு கிரிப்பிரகாரம் உண்டு. அது ஏறக்குறைய மூன்று கி.மீ. சுற்றளவுடையதாகும். இதன் இரு மருங்கிலும் அழகிய கடம்பு முதலிய பல வகை மரங்கள் செழித்தோங்கி உள்ளன. கிரியின் நாற்புற வீதியிலும் ஐந்து மயில் மண்டபங்களும், தொடர்ந்த வரிசையில் பொருந்திய பல மடாலயங்கள் முதலியனவும் சிறந்து விளங்குவனவாகும். இன்னும் ஆங்கு மதுரை வீரசுவாமி, ஐம்முக விநாயகர், சந்நியா ிப்பன், அழகிய நாச்சியம்மன் முதலியோர் ஆலயங்களும், நாக நாயக்கரது திருமூர்த்திகள், பிரமதீர்த்தம், நந்தவனங்கள், திருக்கோயில் கருணை இல்லம், நாதசுர தவில் பள்ளிகள், சாதுசுவாமிகளது சண்முக விலாசம் என்ற அன்னதான சமாஜ்மடம், அரிசன சேவா சங்கத்தாரது நந்தனார் விடுதி முதலியன உள. கிரிவலம் வந்ததும் அடிவாரப் பக்கத்தே மீனாட்சி அம்மையார் திருமண்டபம் காணத்தக்கது. இங்கே பழனி வைகாவூர் நன்னாட்டை ஆண்ட பாளையக்காரர்கள் அவர்களின் பத்தினிமார்கள் ஆகியவர்களின் உருவச்சிலைகள் திகழ்ந்தன.

மலைக்கோயில்

பழனிப் பெருமானது திருமலை ஊர் நிலப்பரப்புக்கு மேல் 450 அடி உயரமுடையது. ஏறிச்செல்லும் படிகள் 697 ஆகும். மலைக்கோயில் மேற்குத் திசையினை நோக்கியதாகும். திருவாயில் அடைந்த பின்பு கட்டைக் கோபுரவாயிலும், அதன் அணித்தான சுப்பிரமணிய விநாயகர் சந்நிதியும் இருமருங்கும் நாயக்கர் மண்டபமும் தோன்றும். இன்னும் வைசியர் மண்டபம் தாண்டி ஐந்து நிலை மாடங்கள் பொருந்திய இராசகோபுரம் கடந்து இரண்டாம் பிரகாரம் அடைவர். அங்கே 12 கற்றூண்கள் தாங்கிய பாரவேல் மண்டபம் முன்னே காட்சியளிக்கும். இது ஒரு அழகிய அணி மண்டபம் கற்றூண்கள் வேலைப்பாடுடையன. அவைகளுள் பீமசேனன் புருடா மிருகத்துடன் போராடும் காட்சியும் மற்றும் நாயக்கர், பாளையக்காரர், பலரது உருவச் சிலைகளும் குறிப்பிடத் தக்கன. இதனை ஒட்டி வாத்திய மண்டபம் உள்ளது. இதற்கு எதிரே தட்சிணா மூர்த்திக்கும், அதன் மருங்கே மலைக்கொழுந்து சிவன், அம்மனுக்குமாக மூன்று திருத்தளிகள் உள. **திருமலையின் இப்பாகமே இம்மலையின் சிகரமென்பர்.**

இதற்கடுத்த திருவாயில் துவாரபாலகர்கள் காப்புடையது. இங்கு நுழைந்ததும் மகா மண்டபம். இது பக்தர்கள் இருமருங்கிலும் இறைவனைத் தரிசித்து ஈடுபடுதற்கமைந்தது. இம்மண்டபத்தின் 12 கற்றூண்களும் மிக வேலைப்பாடுடையன, உள் நுழைந்ததும், இடப்பக்கத்திலேயே கல்மேடை மீது நடராசர், சிவகாமியம்மை, திருவுருவங்களுள்ளன. பின்னும் அதற்கடுத்து ஆண்டவன் பள்ளியறையும், சண்முகநாதர் திருச்சந்நிதியும், அதனையடுத்து திருவுலாப்போதரும் சின்னக்குமரர் திருச்சந்நிதியையும் போற்றி ஆண்டவனை அணுகும் அணி திகழ் மண்டபத்தில் முருகப் பெருமான் சந்நிதியை அடையலாம்.

திருமுருகன் சந்நிதி

இதுதான் ஆண்டவனது கருவறைக்கடுத்த முன்னணி மண்டபமாகிய அர்த்த மண்டபத்தின் திருவாயில், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியை

பிடர்பிடந்த புன்குஞ்சியும் பெருகிய கருணைக்
கடலலம்பு கண்களுங் கவினொழுகிய முகமும்
வடிவுநூலு மார்புங்கை யொண்கோலும் வயங்க
நெடியகோ வணவுடையு டனின்றது கண்டான்

எனப் பழநித் தலபுராண ஆசிரியர் பாலசுப்பிரமணியக் கவிராயர் போற்றுகின்றார்.

மேற்கு நோக்கிய நிலையில் இறைவன் காட்சியளிக்கின்றான். அவ்வண்ணலின் இணையற்ற திருமுகமும் அருள் கனிந்த திருநோக்கமும், புன்னகை தவழும் திருவாயும், மதாணி துலங்கும் திருமார்பும், ஒல்லிய அரையின் வைத்த இடக்கரத்தின் செவ்வியும், ஞானதண்டமேந்திய வலத்திருக்கரத்து எழிலும், திருத்தாள்களின் பொலிவும், திருத்தண்டைகளின் அழகும் காண்போரைப் பரவசம் அடையச் செய்யும். அன்பர்கள் பலப்பலவான திருக்கோலங்கள் புனைந்து நோக்குந் தோறும் புதிய திருமுக மண்டலப் பிராகாசத்துடன் ஆண்டவர் விளங்குகின்றார். பழனிமுருகன் திருவுரு நவ பாஷாணத்தால் போகர் உருவாக்கியது என்று செவிவழிச்செய்திகள் வழங்குகின்றன. யுகங்கள் பல கடந்து நிற்கும் நவபாஷாணக் கட்டினால் செய்யப்பட்ட திருமேனி மீது அபிஷேகிக்கப்பெறும் பால், தேன், சந்தனம் முதலிய பொருள்களை உட்கொள்பவர் தமக்குள்ள பல நோய்கள் நீங்கப் பெற்று

நலம்பெறுவதாக நம்புகின்றனர். எண்ணற்ற பிறவிகளை எடுத்துழலாமல் பிறவித்தளையினையே அறுக்கும் ஆண்டவன் உடற்பிணியை அறுப்பது வியப்போ?

தமிழ் அருச்சனை

இறைவனின் திருவருட் குணநலன்களையும், அரும்பெரும் பண்பு நலன்களையும், திருநாமச் சிறப்புக்களையும், அருளாளர்கள் அருளிச் செய்த பாடல்களிலிருந்து - பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் மந்திரச் சொற்களைக் கொண்டு 108 போற்றி எனவும், 1008 போற்றி எனவும் தமிழில் படைத்து, இறைவனைத் தமிழில் அருச்சிக்கும் வழிபாட்டு முறை தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் செய்விக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்க்கடவுள் என்னும் சிறப்பிற்குரியவன் முருகக் கடவுள், முருகன் கோயில்களுள் பழனித் திருக்கோயில் தமிழகத்திலேயே முதன்மையான திருக்கோயிலாக விளங்குகின்றது. இத்தகைய சிறப்பிற்குரிய அருள்மிகு பழனியாண்டவருக்கு 1008 போற்றி தமிழ் அருச்சனை முறை 19.10.1997 ஆம் நாள் முதல் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. பக்தர்கள் பழனி முருகனின் அருளியல் தன்மைகளை உணர்ந்து வழிபாடு செய்யும் பொருட்டு, தமிழ் அருச்சனை நூல் ஒன்றினைத் திருக்கோயில் நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

மலைச்சுற்றுக் கோயில்கள்

இக்கோயிலின் தென்பாகத்தில் கன்னிமார் என்னும் சப்த கன்னிகைகளின் சந்நிதியும், கோபுர வாயிலை அடுத்து வடபுறம் ஈசுவரன், அம்மன் கோயிலும், கோயில் உட்பிரகாரத்து ஈசானிய மூலையில் நவவீரர்களுக்குச் சந்நிதியும் உள்ளன. இப்பிரகாரத்தின் தென்பாகத்தில் கைலாசநாதருக்கு ஒரு திருதளியும் அதற்கடுத்து சண்டேசுவரர் திருச்சந்நிதியும், தென்மேற்கு மூலையில் புவனேசுவரி அம்மை திருச்சந்நிதியும் உள்ளன.

சித்தர்களின் குரு :

மலைக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமிக்கு, சித்தநாதன் என்ற திருப்பெயரும் உண்டு. மனிதரும், தேவரும், முனிவரும், சித்தரும், முத்தரும் ஞானதண்டாயுதபாணியை வழிபட்டு அருள்பெற்று வருகின்றனர். அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சித்தர்களுக்கு எல்லாம் குருவாக

விளங்கி வருகின்றவர். மலைக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பழனியாண்டவர் குருமூர்த்தம் ஆவார். வேண்டிக்கொள்கின்ற பக்தர்களுக்கு வேண்டும் வரங்களையும், ஞானத்தையும் வழங்குபவர். அகத்திய முனிவருக்கு மூலமந்திரங்களையும், உபதேசங்களையும், அட்டமாசித்திகளையும் அளித்தவர்.

அருளாளர் அருணகிரிநாத சுவாமிகளுக்கு அவரது நாவில் முருகப்பெருமான், வேல்கொண்டு ஓம் எனும் பிரணவ மந்திரத்தை எழுதியவர். நயன தீக்கை அளித்தவர். திருப்புகழ் பாட, அடி எடுத்துக் கொடுத்தவர். (கல்பம் வென்ற சித்தர்கள், கல்பம் என்பது பல நூறு ஆண்டுகள் கொண்ட காலம் ஆகும்). பலநூறு ஆண்டுகளைக் கடந்தும், எப்போதும் அழியாது வாழ்ந்து வரும் சித்தர்கள் ஆவர். கல்பம் வென்ற சித்தர்களும், எட்டுத்திக்கில் உள்ள சித்தர்களும், நிஷ்டையில் ஈடுபட்டுள்ள சித்தர்களும், தேவர்களும், நெடுந்தொலைவிலிருந்து மணம் வீசும் மலர்களைக் கொணர்ந்து ஞான தண்டாயுதபாணிக்கு, மலர் அர்ச்சனை செய்து வழிபட்டதாக, அருணகிரி நாதர் திருப்புகழில் குறிப்பிட்டுள்ளார்.

பழனிமலை மீது உட்பிரகாரத்தென்மேற்கு மூலையில் அருளாளர் போகர் திருச்சந்நிதியும் உள்ளது. மலைக்கோயிலின் வெளிப்பிரகாரத்தில் ஆனந்த விநாயகர் எழுந்தருளியுள்ள மகாமண்டபத்தில் 5.7.2000 ஆம் நாள், பழனித்திருக்கோயில் நிர்வாகம், பதினெண் சித்தர்களுக்கும் திருவுருவச்சிலையை நிறுவியள்ளது. இவர்களைப் பற்றிய விவரங்களும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

6. மலைக்கோயிலில் நடைபெறும் நாள் வழிபாடு

விளா பூஜை	- காலை	6.40 மணி	- சாது சந்நியாசி
சிறுகாலசந்தி	- காலை	8.00 மணி	- வேடர்
காலசந்தி	- காலை	9.00 மணி	- பாலசுப்பிரமணியர்
உச்சிகாலம்	- பகல்	12.00 மணி	- வைதீகாள்
சாயரட்சை	- மாலை	5.30 மணி	- இராஜ அலங்காரம்
இராக்காலம்	- இரவு	8.00 மணி	- வெள்ளை சாத்துப்படி (புஷ்ப அலங்காரம்)

விசுவரூப தரிசனம் (காலை 6.00 மணி) :
அதிகாலையில் நிகழும் பூஜை விசுவரூபதரிசனம் ஆகும்.

துவார விநாயகர் தீபாராதனையும், பள்ளியறை தீபாராதனையும் செய்யப்படுகின்றது. பழனி முருகப் பெருமானின் விசுவரூபதரிசனம் காண்பது மிகுந்த நன்மையளிக்கக்கூடியது என்றும், வேண்டிக் கொண்ட வேண்டுதல்கள் நிறைவேறும் என்று பக்தர்கள் கருதுகின்றார்கள். அதிகாலை நேரத்தில் மலையேறிச்சென்று, மலைமீது வீசும் மலைக்காற்றினை நுகர்ந்து கொண்டு பழனியாண்டவரை வழிபடுவது உடலுக்கும் உள்ளத்துக்கும் உகந்தது ஆகும்.

இராக்கால சந்தனம், கோவண தீர்த்தம் இரவில் சாத்தப்பட்ட மலர்கள், பழங்கள் முதலியன பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படும்.

1. விளா பூஜை : (காலை 7.15 மணி)

ஆத்மார்த்த மூர்த்திகளை ஆண்டவர் திருமுன்பு வைத்துப் புண்ணியாக வாசனம் செய்து, நான்கு திக்கிலும் புனித நீர் தெளித்துப் பின், அர்த்த மண்டபத்திலுள்ள சொக்க விநாயகருக்கு அபிடேக அலங்காரம் செய்து, ஆண்டவருக்கும் ஆத்மார்த்த மூர்த்திக்கும் பூஜை செய்யப்படும்.

ஆண்டவர் கோயில் கொண்டு விளங்கும் கருவறையில், ஆண்டவருக்கு இடது பக்கத்தில் மரகதலிங்கம் ஈசுவரனும், அம்பிகையும், சாலக்கிராமமும் ஒரு பேழையில் வைக்கப்பட்டுள்ளன. விளா பூஜையின் போது, ஆண்டவர் முதலில் தாமே தம் ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஈசுவரனைப் பூசித்து வழிபடுவதாகக் கொள்வது ஐதீகம்.

அதனால், இக்காலத்தில் செய்யப்படும் அபிடேகங்கள் முதலில் ஆத்மார்த்த மூர்த்திக்கும் அடுத்து ஆண்டவருக்கும் செய்யப்படும். சிறப்பாக (தனுர் மாதமாகிய மார்கழி மாதத்தில் மட்டும் (காலை 4.30 மணி) உஷக்கால பூஜையிலும், (காலை 6.40 மணி) விளா பூஜையிலும் இருமுறை ஆத்மார்த்த பூஜை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. மார்கழி மாத பூஜையின் போது தும்பை பவளமல்லி திருநீற்றுபச்சிலை பூஜை செய்வது குறிப்பிடத்தக்கது. ஏனைய காலங்களில் ஆத்மார்த்த மூர்த்திக்குத் தனி அபிடேகம் இல்லை. அபிடேகம், அலங்காரம், அர்ச்சனை ஆனபின், ஆத்மார்த்த மூர்த்திக்கும் உற்சவராகிய சின்னக்குமாரர்க்கும் தூப தீப நைவேத்யமும், ஏக தீபாராதனையும் செய்யப்பட்டு அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கப்படும்.

மூலவருக்கும் சுத்தான்னம் நெய்யுடன் கூடிய புளியில்லா பொரித்த கூட்டு, சுக்கு சர்க்கரை நைவேத்யமாகப் படைக்கப்படும். சொக்கவிநாயகருக்கும், ஆன்மார்த்த மூர்த்திக்கும் சர்க்கரைப் பொங்கல் நிவேதனமாகப் படைக்கப்படும். பழனியாண்டவருக்கு காவியுடையோடு கூடிய வைதீக சாதுசந்நியாசி அலங்காரம் செய்யப்படும்.

2. சிறுகால சந்தி : (காலை 8.00 மணி)

ஆண்டவருக்கு அபிடேகம், அலங்காரம் அர்ச்சனைக்குப் பின் நைவேத்யம், ஏக தீபாராதனை காட்டிப் பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கப்படுகின்றது. ஆண்டவருக்கு மிளகு சம்பா சாதம், வெண்ணெய், கோதுமை ரொட்டி நைவேத்யமாகப் படைக்கப்படுகின்றது. சிறு காலசந்தி பூஜையின்போது வள்ளி தெய்வானை சமேத சண்முகர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கும் காலபூஜை நடைபெறுகின்றது.

(குறிப்பு : ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பழனிப்பகுதியை நிருவகித்த ஆங்கிலேய அதிகாரிக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது. வயிற்று வலி தீரவில்லை, அவரால் உண்ண முடியவில்லை. வயிற்றுவலியை தீர்த்தருளுமாறு பழனியாண்டவரை அவ்வதிகாரி வேண்டிக்கொண்டார். அவ்வாறு தீர்ந்தால், தாம் உண்ணும் உணவை பழனியாண்டவருக்குப் படைப்பதாக வேண்டிக்கொண்டார். பழனியாண்டவர் ஆங்கிலேய அதிகாரியின் தீராத வயிற்றுவலியை தீர்த்து அருளினார். அன்று முதல், காலசந்தி பூஜையின்போது வெண்ணெய்யும், நெய்யால் சுடப்பட்ட ரொட்டியும் ஆண்டவருக்கு நைவேத்யத்துடன் சேர்த்துப் படைக்கப்பட்டு வருகின்றது).

சிறுகாலசந்தியின்போது பழனியாண்டவருக்கு **வேடர் வழவில்** அலங்காரம் செய்யப்படும்.

3. கால சந்தி : (காலை 9.00 மணி)

சிறுகால சந்தி பூஜையைப் போலவே அபிடேகம், அலங்காரம் வழிபாடு நிகழும். வெண்பொங்கல் நைவேத்யமாகப் படைக்கப்படும். பழனியாண்டவருக்கு **பாலசுப்பிரமணியர்** அலங்காரம் செய்யப்படும்.

4. உச்சிக்கால பூஜை : (பகல் 12.00 மணி)

ஆண்டவருக்கு அபிடேகம், அலங்காரம், அர்ச்சனைக்குபின் தளிகை நைவேத்யம் செய்து, சோடச தீபாராதனையும், உபசாரங்களும் செய்யப்பட்டுப் பக்தர்களுக்குப பிரசாதம் வழங்கப்படும்.

தயிர் சாதம், புளி சாதம், பால் பாயாசம், சுத்தான்னம் நைவேத்யமாகப் படைக்கப்படும்.

உச்சிக்காலத்தில் ஆண்டவர் திருமுன்பு யகஞோபவீதம், வேதபாராயணம் செய்வித்து, பூணூல் அணிவித்து வைதீக அலங்காரத்தில் மணி மகுடம் சூட்டப்படும். வைதீகாள் அலங்காரத்தில் காட்சியளிக்கும் பழனியாண்டவருக்கும், கட்டியம் கூறுதல், திருப்புகழ் இசைத்தல், வேதம் ஓதுதல், நாதஸ்வர மங்கள இசை வழங்குதலும் நடைபெறும். சிறப்பு நாட்களில் கந்தபுராணம் சொல்லுதலும் நிகழும்.

காட்டப்படும் சோடச உபச்சாரங்கள் :

அலங்கார தீபம், பஞ்சமுக தீபம், சர்ப்ப தீபம், மயூர தீபம், குக்குட தீபம், கஜதீபம், புருஷாமிருக தீபம், பூரண கும்ப தீபம், கற்பூர தீபம் போன்ற தீபங்களும் மந்த்ர புஷ்பாஞ்சலி, குடை, வெண்சாமரம், விசிறி, கண்ணாடி, கொடி, ஆலவட்டம் போன்ற உபச்சாரங்கள் செய்வித்து மஹாதீபாராதனை நடைபெறும்.

பழனியாண்டவருக்கு **வைதீகாள் (பாலசுப்பிரமணியர்)** அலங்காரம் செய்யப்படும்.

5. சாயரட்சை பூஜை : (மாலை 05.30 மணி)

ஆண்டவருக்கு அபிடேகம், அலங்காரம், அர்ச்சனைக்குப்பின் சோடசதீபாராதனையும் உபசாரங்களும் நடைபெற்று பின், பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கப்படும்.

புளி சாதம், சர்க்கரைப் பொங்கல், சுண்டல் நைவேத்யமாகப் படைக்கப்படும்.

பழனியாண்டவருக்கு **இராஜ அலங்காரம்** செய்யப்படும்.

6. இராக்கால பூஜை : (இரவு 08.00 மணி)

ஆண்டவருக்கு அபிடேகம், அலங்காரம், அர்ச்சனைக்குப்பின் நைவேத்யம் செய்து ஏக தீபாராதனை முடிந்தபின் பக்தர்களுக்குப் தேனும், தினைமாவும் பிரசாதமாக வழங்கப்படும். இராக்கால பூஜையின் போது வள்ளி தெய்வானை சமேத சண்முகர், சின்னக்குமாரர் ஆகியோர் மூர்த்திகளுக்கும் தளிகை நைவேத்யத் தீபாராதனை நடைபெறும்.

சுத்தான்னம், அப்பம், வடை, தேன்குழல், பால், இளநீர், தேன்தினைமாவு, நெய், திராட்சை, மலைவாழைப்பழம், தாம்பூலம், நைவேத்யமாகப் படைக்கப்படும்.

இராக்கால பூஜையின் போது மட்டும் சந்தன அபிடேகம் செய்வது குறிப்படத்தக்கது.

மலர் அலங்காரம் :

இராக்கால பூஜையின் போது பழனியாண்டவருக்கு முல்லை, இருவாட்சி, சண்பகம், பவளமல்லி, மல்லி, நந்தியாவட்டை முதலிய மணம் கமழும் மலர்களைக்கொண்டு மலர் அலங்காரம் செய்யப்படுகின்றது. பழனியாண்டவருக்கு கண்ணி உள்ளிட்ட பல்வேறு மாலை வகைகள் அணிவிக்கப்பெறுகின்றன. பழனியாண்டவரின் திருக்கழுத்தில் மனோரஞ்சிதப்பூ, பன்னீர்ப்பூ, பிச்சிப்பூ, நந்தியாவட்டை போன்ற மலர் மாலை அணிவக்கப்படும். இராக்காலப் பூஜையின் போது அர்த்த மண்டபம் முழுவதும் நறுமணம் கமழும். பழனியாண்டவருக்கு இராக்கால பூஜையின்போது செய்யப்பெறும் மலர் அலங்காரம், மரபு வழிப்பட்டது ஆகும். "**மணங்கமழ் தெய்வத்து இளநலங்காட்டி**" என்று திருமுருகாற்றுப்படை முருகப்பெருமானைப் போற்றுகின்றது. பழனியாண்டவரை இராக்கால பூஜையின்போது காண்பது கண்கொள்ளாக்காட்சியாக அமையும்.

இராக்கால பூஜை முடிந்ததும் பக்தர்களுக்குத் தேன், தினைமாவு, சந்தன தீர்த்தம் பிரசாதமாக வழங்கப்படும்.

இராக்கால சந்தனம் :

ஆண்டவரின் திருமேனியில் இராக்கால பூஜையின் போது சந்தனம் சாத்துவர். திருமேனியில் சாத்துப்படி செய்த சந்தனம் மறுநாள் காலையில் விசுவரூப தரிசனத்தின் போது பக்தர்களுக்கு அருட்பிரசாதமாக வழங்கப்படுகின்றது. இச்சந்தனம் இராக்கால சந்தனம் என்று தொன்று தொட்டு குறிப்பிடப்பெறுகின்றது. தீராத நோய் தீர்த்தருளும் சந்தனமாக பழனிச்சந்தனம் விளங்குகின்றது.

"கிண்ணியிலே சந்தனமும்
கிளிமூக்கு வெத்திலையும்
அள்ளி அள்ளிப் பூஜை கொள்ளும்
ஆறுமுக வேலவரே"

- என்று பழனியாண்டவர் காவடிப்பாட்டு குறிப்பிடுகின்றது.

பள்ளியறை பூஜை :

இராக்கால பூஜை முடிந்ததும், தீபாராதனைக்குப்பின் சுவாமியை பள்ளியறைக்கு எழுந்தருளச் செய்வர். திங்கள், வெள்ளி, கார்த்திகை நாட்களில் சுவாமியின் திருவடி உட்பிரகாரத்தில் தங்கப் பல்லக்கிலும், மற்ற நாட்களில் நீராழிப் பத்தியில் வெள்ளிப் பல்லக்கிலும் ஆண்டவர் எழுந்தருளுவார்.

பழனியாண்டவர் திருக்கோயிலில் நாள்தோறும் இரவில் பழனியாண்டவர் பள்ளியறை ஊஞ்சலில் அமருகின்ற பொழுது, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிச் செய்த,

"இல்லறமும் துறவறமும் தூண்களாக
இகபர சாதனப் பொதுச்சீர் விட்டமாக
நல்லறமாகிய நான்கும் வடங்களாக
நழுவருஞ் சத்தியமதுவே பலகையாக
வல்ல சத்தி ஓராறும் போற்றி ஆட்ட
மாயன் மக்கள் இருவருடன் ஆடீரூசல்
பல்லவச் செஞ்சடைச் சிவனார் தவப்பேறான
பழனி நகர் குழகர் மகிழந்தாடீர், ஊசல்"

- எனும் ஊஞ்சல் பாடல் திருக்கோயில் ஓதுவாரால் பாடப்பட்டு வருகின்றது.

கார்த்திகைப் பெண்கள் அறுவரும் ஊஞ்சலை ஆட்ட, சத்தியமென்னும் பலகையில் நான்கு நல்லறமாகிய வடங்களோடு பிணைக்கப்பட்டு, இல்லறம் துறவறம் என்ற தூண்களின் துணைக்கொண்டு, இகபர சாதனைகளை விட்டமாகக் கொண்டு, வள்ளி தெய்வயானை என்ற மாயன் மக்கள் இருவரோடு பழனி நகரில் ஊஞ்சலாடுகிறார் முருகப்பெருமான்.

பழனியாண்டவர் பள்ளியறை புகுமுன் திருக்கோயிலின் அன்றாட வரவு, செலவு கணக்கு படிக்கப்படும்.

திருக்காப்பிடுதல் :

திருக்கோயில் ஓதுவார்கள் பள்ளியறை தாலாட்டுப் பாடி முடிந்ததும், கட்டியக்காரர் பழனியாண்டவர் மீது கட்டியம் கூறிய பிறகு நாதஸ்வர இசையில் ஆனந்த பைரவி ராகத்தில் ஊஞ்சல் பாடலும், நீலாம்பரி ராகத்தில் லாலி பாடலும் இசைக்கப்படும். பின்னர் மகா தீபாராதனை நடைபெறும். பைரவர் பூஜை முடிந்த பின்னர் சன்னதி திருக்காப்பிடப்படும். காலையில் திறக்கப்படும் திருக்கோயிலின் திருவாயில் இரவு பள்ளியறை பூஜைக்கு முன் சாத்தப்படுவது இல்லை. பகல் முழுவதும் இடைவிடாது பக்தர்கள் ஆண்டவனைக் கண்டு தொழுது மகிழலாம். கார்த்திகை முதலிய சிறப்பு நாட்களிலும், விழா நாட்களிலும் காலபூஜைகள் தொடங்கும் நேரம் மாறுபடும்.

7. பழனி பஞ்சாமிர்தம்


மலையும், மலை சார்ந்த பகுதி குறிஞ்சி நிலமாகும். குறிஞ்சி நிலக்கடவுளாக முருகப்பெருமான் வணங்கப்பட்டு வந்தார். முருகப்பெருமானை வணங்கும் மக்கள் இயற்கையாக கிடைக்கக்கூடிய மற்றும் விளையக்கூடியப் பொருட்களைக் கொண்டு இறைவனுக்கு அபிஷேகம் மற்றும் உணவு படைத்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டனர். மலைப்பகுதியில் கிடைக்கக்கூடிய தேன், பழங்கள் மற்றும் மலையடிவாரத்தில் உள்ள மருத நிலமான வயலும் வயல் சார்ந்த பகுதிகளில் விளையும் இயற்கைப் பொருளான சர்க்கரை மற்றும் பசுக்களில் இருந்து கிடைக்கும் பால், நெய் ஆகியவற்றைக் கொண்டு அபிஷேகம் மற்றும் பூஜைகள் செய்து வந்தனர். நாளடைவில் இந்த இயற்கை பொருட்களின் ஒரு திட்ட விகித கலவையே பஞ்சாமிர்தம் ஆனது. இப்பஞ்சாமிர்தத்தால் குறிஞ்சி நிலக்கடவுளான முருகப்பெருமானுக்கு ஆகம நூலான குமாரந்திரத்தில் குறிப்பிட்டுள்ள ஆகம விதிகளின்படி பஞ்சாமிர்தம் தயார் செய்து மூலவருக்கு அபிஷேகம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு அருட்பிரசாதமாக வழங்கப்பட்டு வருகிறது.

பஞ்சாமிர்த விதி

"பஞ்சகவ்யஸ்ய புரதஹா, பூர்வவது ஸ்தண்டிலம் பவேது
கோஷ்ட பாத்ராணி, மந்த்ராணி, பூர்வவது பரிகல்பயேது
மத்யே துக்தம், ததிப்ராசி, தக்ஷிணே கிருதமேவசா
உத்தரே மது ஸம்யோஜ்ய, சர்க்கரா பச்சிமே பவேது
கதலீ பநஸாம்ரஞ்ச, கந்தோதஞ்ச ததைவசா
அக்ன்யாதீசான பர்யந்தம், ஸ்தாபயேது விசேஷதஹ
கண்டபாவே க்ஷ்ஸாரந்து, மத்யபாவே க்ருதம்பவேது"

பொருள் :

பஞ்சகவ்யத்திற்கு முன்னால் கிழக்குப் பகுதியில் இலையில் அரிசிபோட்டு பதம் செய்து பாகம் பிரித்து பாத்திரங்கள் வைத்து மந்திரம் ஜெபித்துக்கொண்டு நடுவில் பால், கிழக்கில் தயிர், தெற்கில் நெய், வடக்கில் தேன், மேற்கில் சர்க்கரை. அக்னி திசையில் வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் ஆகிய கனிகளும், ஈசான திசையில் சந்தன நீரும் வைத்து நைருதியில் பழரசங்கள் வைத்தும், வாயு திசையில் நெய் வைத்தும் பூஜை செய்து விதிப்படி பஞ்சாமிர்தம் தயார் செய்யப்படுகிறது.



அருள்மிகு குழந்தை வேலாயுத சுவாமி,
திருஆவினன்குடி.

ஸ்ரீ சுப்ரமண்ய கல்பபூஜா விதாநம் :

"சர்க்கரா மது கோக்ஷீர பலசார க்ருதைர்யுதம்
பஞ்சாமிர்தம் ஸ்நாநமிதம் பாகுலேய க்ரஹாணபோ"

பொருள் :

சர்க்கரை, தேன், பசும்பால், பழங்கள், நெய் இவையோடு சேர்த்து பஞ்சாமிர்தம் அபிஷேகம் செய்யும் சமயம் பாகுலேயனாக கையில் தண்டு கொண்டு நின்ற கோலத்தில் தண்டாயுதபாணியாக ஏற்றுக்கொள்கிறார் பழனியாண்டவர்.

பஞ்சாமிர்த அபிஷேக பலன் :

நாட்டுச் சர்க்கரை, மலைப்பழம், பேரீட்சை, நெய், கற்கண்டு, தேன், ஏலக்காய் இவைகளை முறைப்படி கலந்து முறையான மந்திரம் ஜபித்து (ஸ்கந்தனுக்கு) பழனியாண்டவருக்கு அபிஷேகம் செய்யும் போது, பஞ்சமஹாபாதகம் எனும் ஐந்து விதமான பாதகங்கள் நீங்கி விடும். விரும்பிய பயனை அடைவார்கள் என ஸ்ரீ சுப்ரமண்ய கல்பபூஜா விதாநம் குறிப்பிடுகின்றது.

திருக்கோயில் அபிஷேக பஞ்சாமிர்தம் :

பழனி என்றாலே நினைவுக்கு வருவது அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியும், பஞ்சாமிர்தப் பிரசாதமும்தான். திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் நல்ல தரமான வாழைப்பழம், நாட்டுச்சர்க்கரை, நெய், தேன், பேரீட்சம்பழம், ஏலக்காய், கற்கண்டு ஆகிய பொருட்களைக் கொண்டு உரிய அளவீடுகளில், நவீன தானியங்கி இயந்திரம் மூலம் கலவை செய்து தரமான பஞ்சாமிர்தப் பிரசாதம் தயார் செய்யப்படுகிறது.

இத்திருக்கோயிலில் தானியங்கி இயந்திரம் மூலம் தயார் செய்யப்படும் பஞ்சாமிர்தத்தின் தரத்தினையும் மூலப்பொருட்களின் தரத்தினையும் கண்காணிக்க மைசூர் மத்திய அரசு நிறுவனமான CFTRI நிறுவனம் மூலம் பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு பஞ்சாமிர்தம் தயார் செய்யப்படுகிறது.

நாள் தோறும் ஆகம விதிப்படி தயார் செய்து மூலவருக்கு அபிடேகம் செய்யப்பட்ட பஞ்சாமிர்தமானது திருக்கோயிலில் தயாரிக்கப்படும் அபிடேக பஞ்சாமிர்தத்தில் கலக்கப்பட்டு பக்தர்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

8. பழனித்தலம் தரிசன முறை

பழனித்தல தரிசன முறையைக் கூறுவதான செய்யுளொன்று பாராட்டற்குரியதாகும். அது பின்வருமாறு:

தருமிரவி யுதயமது கண்டுவை காபுரி
தனைக்கண்டு சுத்தி கண்டு
சண்முகப் புனல்கண்டு நியமாதி கண்டுபின்
சரவணப் பொய்கை யாடி
அருள்பெருகு மாவினன் குடிகண்டு கைலாசர்
அம்மைபெரி யம்மையைக்கண்டு
அம் பொன்மலை கண்டதி லிடும்பர்சந் நிதிகண்டங்(கு)
அநேக கண் காட்சி கண்டு
கருணைகண் டருள்வள்ளி தெய்வானை யைக் கண்டு
களிகண் டிருக்கு முன் றன்
கமலபா தங்கண்ட பேரொருக் காலுமக்
காலனைக் கண்டிடு வாரோ?
பரிதிவலி கண்டவன் றனைவென்ற தம்பிதன்
பராக்ரமங் கண்டது ரையே
பழமறைசொ லியசீல தொழுவர்க ளநுகூல
பழனிமலை வடிவேலனே

- வடிவேலர் சந்நிதி முறை

அருள்மிகு திருவாவினன்குடித் திருக்கோயில்

நக்கீரர் போற்றிப்பாடிய திருஆவினன்குடி :

நல்லிசைப்புலவர் நக்கீரரால் இயற்றப்பெற்றது. திருமுருகாற்றுப் படை, திருமுருகாற்றுப்படையில் நக்கீரர், முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள ஆறுபடை வீடுகளைப் பற்றி விரிவாக விளக்குகின்றார். ஆறுபடை வீடுகளாவன 1.திருப்பரங்குன்றம், 2.திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்), 3. திருஆவினன்குடி, 4. திருஏரகம் (சுவாமிமலை), 5. குன்று தோறாடல், 6. பழமுதிர்ச்சோலை.

திருமுருகாற்றுப்படை முருக பக்தர்களால் பாராயணம் செய்யும் நூலாகும். திருமுருகாற்றுப்படையை நாள் தோறும் பாராயணம் செய்தால் முருகப்பெருமான் நம் கண் முன்னே தோன்றி, மனக்கவலையை நீக்கி, நாம் நினைத்ததை எல்லாம் வழங்குவார் என்று ஒரு பழம் பாடல் குறிப்பிடுகின்றது.

திருஆவினன் குடியின் சிறப்பு :

திருஆவினன்குடியில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானை வழிபட முதலில் முனிவர்கள வருகின்றார்கள். இவர்கள் மர உரியை ஆடையாகத் தரித்தவர்கள். மான் தோலைப் போர்த்தியுள்ளார்கள். பல நாட்கள் விரதம் இருந்ததால் (எலும்பு எழுந்து நடக்கும் யாக்கை போல் உள்ளார்கள்) காமமும், சினமும் நீக்கியவர்கள். கற்றவர்களுக்கு எல்லையாக விளங்குபவர்கள்.

முனிவர்களை அடுத்து, கந்தருவர்கள் வருகின்றார்கள். இவர்கள் யாழை இசைத்துக்கொண்டு இனிய பாடல்களால் ஆவினன்குடி முருகனைப் பரவுகின்றனர். இவர்களை அடுத்து திருமாலும், சிவபெருமானும், இந்திரனும் திருஆவினன்குடிக்கு வருகின்றனர். முப்பத்து மூவர் தேவரும், பதினெண்கணங்களும் வருகின்றனர். இவர்கள் அனைவரும் தன்னை வந்து காணும்படி முருகப்பெருமான் ஆவினன்குடியில் மடந்தையொடு எழுந்தருளியுள்ளார்.

அருணகிரிநாதர் போற்றிய பழனித்தலம் :

அருளாளர் அருணகிரி நாதசுவாமிகள் பழனித்தலத்தைப் பற்றி 97 திருப்புகழ்ப் பாடல்களை அருளியுள்ளார். பழனி முருகப்பெருமான் மீது 85 திருப்புகழ்ப் பாடல்களையும், ஆவினன்குடி முருகப் பெருமான் மீது 12 திருப்புகழ் பாடல்களையும் அருளியுள்ளார். அருணகிரி நாதர் திருப்புகழைப் பாடுவதற்கு முருகப் பெருமானே அடியெடுத்துக் கொடுத்ததாகக் கூறுவர். ஆவினன்குடி முருகப்பெருமானைப் போற்றிப்பாடும் போது, முருகப்பெருமான், அருணகிரிநாதருக்கு ஜெபமாலையை அளித்துள்ளார். அருணகிரிநாதர் பழனித்தலத்தில் நீண்ட நாட்கள் தங்கியிருந்ததை, அவர் அருளிய திருப்புகழ் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது. அருணகிரி நாதர் பழனித்தலத்தின் பெருமையினை "காசியில் மீறிய பழனாபுரி" என்றும் பதினாலுகோர் புகழ் பழனி என்றும் போற்றுகின்றார்.

"அதிசயம் அனேக முற்ற பழனிமலை" என்று அருளாளர். அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழில் குறிப்பிடுவதன் மூலம், பழனித்தலத்தில் பல அற்புதங்கள நிகழ்ந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது. அருணகிரி நாதர், கந்தர் அந்தாதி, கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், திருவகுப்பு, வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் முதலிய நூல்களை அருளியுள்ளார். "சந்தப் பாவல பெருமான் என்று அருணகிரி நாதசுவாமிகள் போற்றப்படுகின்றார்". அருணகிரி நாத சுவாமிகளுக்கு திருஆவினன்குடியில் தனிச்சன்னதி, திருப்புகழ் மண்டபம் ஆகியன அணி சேர்க்கின்றன.

திருஆவினன்குடி பெருமானுக்கு நாள்தோறும் ஆறு கால பூசனையும், மாதக்கார்த்திகைத் திருவுலாவுடன் மற்ற சிறப்புகளும் நடைபெறுகின்றன. பங்குனி உத்திரத் திருவிழா கொடியேற்றத்துடன் திருத்தேர் உலா நடைபெறுகிறது. இத்தல விருட்சம் நெல்லியாகும்.

07.09.2014-இல் மிகச்சிறப்பான முறையில் இத்திருக்கோயில் கும்பாபிஷேக வைபவம் நடைபெற்றது.

சரவணப் பொய்கை

திருவாவினன்குடிக் கோயிலின் வடகிழக்கில் சரவணப் பொய்கை அமைந்துள்ளது. முன்பு இது ஒரு கவலைக் கிணறாக இருந்தது. அதனைச் சட்டிச் சாமியார் என்ற பெரியார் யாசகம் செய்து புதுக்கினார். இப்போது இது ஒரு அழகிய தடாகம். சுற்றிலும் கைபிடிச் சுவரெடுத்துப் படிவரிசையும் கட்டப்பட்டுள்ளது. முருகப்பெருமானுடைய வரலாறு சுட்டும் வண்ண ஓவியங்களடங்கிய முகப்பு இப்போது கட்டப்பட்டுள்ளது. பழனி முருகனைத் தரிசனம் செய்வோர், இப்பொய்கையிலும் நீராடிச் செல்வர். காவடியெடுப்போர் இத்தலத்தினின்றும் தம்பிரார்த்தனைகளைக் கொண்டு செல்வர். இது திருக்கோயில் நிர்வாகத்திலிருக்கிறது. இதற்கு மின்சார மோட்டார் வைத்து பொய்கை நீரைத் தொட்டிகளில் நிறைத்து, ஆண்களும் பெண்களும் தனித்தனியே மறைவாக நீராட சவுகரியம் செய்யப்பட்டு இருக்கிறது.

அருள்மிகு பெரியநாயகியம்மன் திருக்கோயில்

பழனி நகரின் மேற்குப் பக்கத்திலே பெருமிதமாக விளங்குவது பிரஹந்நாயகி என்ற பெரிய நாயகியம்மையாரது திருக்கோயிலாகும். இக்கோயில் உண்மை, அறிவு, இன்ப வடிவினராகிய சோமாஸ் கந்த மூர்த்தியின் அருள் தத்துவத்தை விளக்குகின்றது. சந்நிதி அமைப்பு முறையில் முதலில் பெரிய நாயகியம்மையார், நடுவில் வள்ளி தெய்வானையுடன் முருகப் பெருமான், அதனை அடுத்து கைலாசநாதப் பெருமான் சந்நிதிகளாகவும் அமைந்துள்ளன. இவைகளுக்குத் தென்பாகத்தே அழகிய ஒரு பெருமண்டபத்தில் அருள்மிகு முத்துக் குமாரசுவாமி சந்நிதி உள்ளது. வடபாகத்தே தெற்கு நோக்கிய நடராசர் திருத்தளியும் சமீபகாலத்தே செட்டிநாட்டுத் தனவணிகர்களால் எடுப்பிக்கப்பட்டு 1907-ஆம் ஆண்டில் பிரதிட்டிக்கப்பட்டது.

பெரியநாயகியம்மன் திருக்கோயில் 16-ஆம் நூற்றாண்டிலே, மதுரை நாயக்கர் மன்னர் காலத்ததாகும், *''கல்வெட்டுக்கள் காணப்படவில்லை. நாயக்கர்களால் எடுப்பிக்கப்பெற்று பழனி, ஆயக்குடி, நெய்க்காரபட்டி நாயக்கர்கள் குடும்பத்தினரால் விரிவாகத் திருப்பணி செய்விக்கப்பெற்றதாகும். திருச்சந்நிதிகளின் எதிரேயுள்ள மண்டபத் தூண்களில் இக்கோயிலைச் சீர்திருத்திப் பெருக்கிய பல பெரியார்களின் உருவச்சிலைகளைக் காணலாம்.

இத்திருக்கோயில் கிழக்கு நோக்கியது. திருவாயிற் பெருங்கோபுரம் தென்னிந்தியாவில் பல இடங்களில் அரைகுறையாக விடப்பட்ட இராயகோபுரம் போல இங்கும் மேல் மாடங்களின்றிப் பாதியாக விடப்பட்டுள்ளது. இக்கோபுரம் விசய நகரத்தரசர்களுள் ஒருவரால் தொடங்கி, எக்காரணத்தாலோ நடுவில் நிறுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாயிலுக்கு முன்புள்ள நவரங்க மண்டபம் சிவகாசிக் கலகத்திற்குப் பின்னர், நாடார்குல மக்களால் அமைக்கப்பட்டதெனக் கூறுவர். ஆண்டுதோறும் இக்குலமக்கள் இங்கு குழுமி ஒரு பெருவிழாச் செய்கின்றனர். மண்டபத்தின் இரு மருங்கிலும், நிற்கும் தூண்களிலே அழகிய சிவத்திரு மேனிகளும், திருப்பணி செய்தார்தம் உருவங்களும் செதுக்கப் பட்டுள்ளன. அவற்றுள்ளே சிவபிரான் ஆடிய ஊர்த்துவத் தாண்டவக் கோலமும் அக்கூத்தினைக் காளியம்மை கண்டு அகந்தை ஒழிந்த நடனத் தோற்றமும் எதிரெதிரே அமைக்கப்பட்டுள்ளவை மிகவும் போற்றுதற்குரியவாகும்.

இக்கோயில் மண்டபச் சுவற்றில் நாயக்கர் கால ஓவியம் ஒன்று உள்ளது. இயற்கை வண்ணங்களால் தீட்டப் பெற்றது. மூன்று பத்திகளைக் கொண்டது. பாட்டுப் பாடுபவர்கள் இசைக்கலைஞர்கள், ஆடல் மகளிர் ஆகியோர்களைப் பற்றி இவ்வோவியம் எடுத்துரைக்கின்றது. இத்தலவிருட்சம் வில்வமாகும்.

1.7.1998 ஆம் நாள் இத்திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது.

---

* பழைய பார்வதி கொற்றி பெரியநாயகி பெற்ற பழநி மாமலையுற்றபெருமாளே என அருணகிரிநாதர் கூறுதலை நோக்குக.

** இக்கோயில் படிவரிசையில் 1907 வருஷம் நவம்பர் மாதம் 25 (பிலவங்க கார்த்திகை 10 உ). அருள்மிகு முத்துக்குமாரசாமி சந்நிதியில் மதுரை மேலப்பேட்டை, கீழப்பேட்டை ஷத்திரிய நாடார்களானவோர்கள் திருப்பணி தளவரிசை, படி, யானை வகையறா உபயம் என்ற கல்வெட்டு காணப்படுகிறது.

அருள்மிகு பெரியாவுடையார் திருக்கோயில்

கண்ணுக்கினிமையும், அழகும், தெய்வீகமும் நிரம்பிய இடங்கள் பல பழனியைச் சூழ உள்ளன. அவற்றுள் ஒன்று பெரியாவுடையார் திருக்கோயில் ஆகும். இது பழனிக்கு வடக்காகப் பழைய தாராபுரம் வழியில் மூன்று கி.மீ. தொலைவிலும் திண்டுக்கல்லிருந்து பொள்ளாச்சி செல்லும் இருப்புப் பாதையில் சண்முகநதி ரயில் பாலத்தை அடுத்தும் இருப்பதாகும். இக்கோயில் சண்முகநதியின் கிழக்குக் கரையில் அமைந்துள்ளது. இத்தெய்வீகமான ஆறு கொடைக்கானல் மலைத்தொடரின் அழகிய பூம்புரை முதலிய பள்ளத்தாக்குகளில் வீழ்ந்து வரும் அருவிகள் சேர்ந்து பாய்வது. பழனி உடுமலைப்பேட்டை பெருவழியில் குறுக்கிடும். இந்நதியின் தென்பாகத்திலுள்ள ஒரு பகுதியிற்றான் பழனிக்கு வரும் பக்தகோடிகள் திரளாக வந்து நீராடி இறைவனுக்குக் காவடி எடுத்துச் செல்வது வழக்கமாகும். இந்த நீராடும் துறை பழனியிலிருந்து சுமார் இரண்டு கி.மீ தொலைவில் உள்ளது.

அருள்மிகு பெரியாவுடையார் திருக்கோயில் அமைந்துள்ள இடம் கன்னிகாரவனம் எனத் தலபுராணத்திலே கூறப்பெறுகின்றது. இக்கோயில் சேரர்களாலும், பாண்டிய, கொங்குச்சோழ அரசர்களாலும், சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். ஈசுவரன் சுயம்புலிங்கம் மேற்குப் பார்த்த திருக்கோலம் சாலச்சிறப்புடையதாகும். சுவாமியின் பெயர் பிரகதீசுவரர் என்ற பெரியாவுடையார். இப்பெயருடைய சிவசந்நிதிகள் அநேகம் சோழ நாட்டில் சோழ அரசர்களால் எடுக்கப்பட்டனவாகக் காணலாம். இக்கோயிலின் திருமதில்களில் பொறிக்கப்பட்டிருந்த 16 கல்வெட்டுக்கள் திருப்பணி தொடங்கு முன்னே அரசினர் கல்வெட்டாராய்ச்சிக் கழகத்தாரால் படியெடுக்கப் பெற்றுள்ளன. அவைகளில் கண்ட குறிப்புகளால் தெரிய வருவன.

சேரர் : வீரகேரள, வீரநாரணர், அமரபுயங்கவர்மன், அதிராச ராசதேவன், வீரகேரள வர்மன்.

சோழர் : பரகேசரிவர்மன், வீரநாரண அதிசய சோழதேவர்.

பாண்டியர் : திருபுவன சக்ரவர்த்தி, கோனேரின்மை கொண்டான். இவர்களால் இங்கு திருப்பணி இயற்றப் பெற்றதென்று அறிய முடிகிறது. இரவிமங்கலம், கோதை மங்கலம், வெசலிப்பாடி, வைகாவி நாடு, வைகாவூர் நாடு, இருவிரல் பரமேசுவரம் உடைய நாயனார் கோயில் முதலியன இக்கல்வெட்டில் காணப்படுகின்றன. இன்னும் Ins 721 of 1905 சாசனத்தால் இங்கு விக்கிரமபாண்டியன் கங்க நாராயண சக்ரவர்த்தியால் அம்மன் கோயில் பிரதிஷ்டிக்கப்பெற்ற தென்றும் தெரிய வருகிறது*.

ஆனால் இப்போது அவைகளுள் ஒரு கல்வெட்டேனும் பார்க்க முடியாநிலையில் அக்கற்களை அடியோடு நீக்கியும், உளியால் யாவும் செதுக்கியும், புதுக்கற்களாகத் திருப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இக்கோயில் பல நூற்றாண்டுகளுக் கிடையே மிக்க சீர்கேடுற்றிருந்தமையாலே அன்பர்களது கொடையினால் திரட்டிய பொருளால் ஆலயம் முழுதும் பிரித்துக் கட்டித் திருப்பணி செய்யப்பட்டு 1915-ஆம் ஆண்டிலே கும்பாபிஷேகம் நடந்தேறியது.

இங்கு சிவபிரானாகிய பெரியாவுடையாருக்கு மட்டும் சந்நிதி உள்ளது. **பிரஹந்நாயகி** என்ற **பெரியநாயகியம்**மையாருக்கு முன்பு சந்நிதி இருந்ததென்றும், சிதைவுற்றிருந்த அச்சந்நிதியை அவ்விடமிருந்து நீக்கி, ஊர்க்கோயிலில் கொணர்ந்து கட்டுவித்தார்களென்றும் கூறுவர். பெரியநாயகி நகரத் திருக்கோயிலாகிய வில்வாரண்யத்திலே சென்று தவஞ்செய்யும் பொருட்டுச் சேர்ந்தமையே என்பர்.

அங்கு சென்று தவம் புரிந்த அம்மையாருக்குக் காட்சி கொடுத்து மணம் புரியவந்த கோலமே பழனி ஊர்க்கோயிலிலுள்ள **கைலாசநாதராகிய** சிவபெருமான் வடிவம். பெரியாவுடையார் கோயிலில் அம்மையாருக்கு இப்போது சந்நிதி இல்லையாயினும், திருமால், பிரமன் முதலிய எல்லாப் பரிவார தேவர்களுக்கும் தனிச்சுற்றாலயங்கள் உண்டு. திருப்பணிக் காலத்தில் நவக்கிரக பிரதிட்டையும் செய்யப்பட்டுள்ளது.

---

* Epi : Rep 1905 Ins 706-21 இத்திருப்பணியும் கும்பாபிடேகமும் முன்னின்று முற்றுப் பெறச்செய்த அன்பர்கள், திருவாளர்கள் பழனி, ப.கிருஷ்ணசாமி பண்டாரம், சு.பாலராமலிங்கஞ்செட்டியார், ம.நல்லசாமித்தேவர், கருப்பணத்தேவர் முதலியோராவர்.

இங்குள்ள தட்சிணாமூர்த்தி, சந்திரசேகர், திருமால், சண்டேசுவரர், கணபதி திருவுருவங்கள் மிக்க அழகும், சிற்பத்திறனும் உடையன. பெரியாவுடையார் திருச்சந்நிதியை அடுத்து மகாமண்டபத்தில் நடராசப்பெருமான் தெற்கு நோக்கிய மூலத்தானப் பெருமானாக விளங்குகிறார். இப்புராதனக் கோயில் பூஞ்சோலைகளும், வயலும் சூழ்ந்த சண்முக நதிக்கரையில் அமைந்து, தூயதான இயற்கை வளம் நிரம்பியதாயிருத்தல் வழிபட வரும் மெய்யன்பர்களின் உள்ளத்தைக் கவர்கின்றது. இக்கோயிற் சந்நிதியில் கணக்கற்ற மணவினைகள் நடைபெறுகின்றன. தம்பதிகள் சூழவரும் மக்கள் உண்டி சமைத்து உண்ணுவதற்கும் தங்கும் வசதிகள் செய்யப்பெற்றுள்ளன. 3.9.1941-இல் விநாயகர் ஆலயமொன்று முன்மண்டபத்துடன் இக்கோயிலின் வெளிப்பாகத்தில், பழனி திரு.நா.மாரிமுத்து வேளாளர் அவர்களால் கட்டப்பெற்றுள்ளது. 22.05.2015-இல் மிகச்சிறப்பான முறையில் இத்திருக்கோயில் கும்பாபிஷேக வைபவம் நடைபெற்றது.

பழநியம்பதியில் ஆங்காங்கு உள்ளவை, விநாயகர் கோயில்கள் ஐந்தும், மாரியம்மன் கோயிலும், அங்காள அம்மன் கோயிலும், படிப்பாறை காளியம்மன் கோயிலும், இப்பழனியில் ஆட்சிபுரிந்த குறுநிலமன்னர்களால் எடுக்கப்பட்ட * பட்டத்து விநாயகர் கோயிலும், பிறவுமாகும். திருமாலுக்கு ஊர்க்கடைவீதியில் வேணுகோபாலப் பெருமாள் கோயிலும், மேற்கு ரதவீதியில் இலக்குமி நாராயணப் பெருமாள் கோயிலுமாக இரண்டு ஆலயங்கள் உள்ளன.

இன்னும் திருவாவினன்குடிக் கோயிலை அடுத்து அங்கிலி பரமேசுவரருக்கு ஒரு கோயிலும், இதற்குச் சற்றுத் தென்பால் அடிவாரம் கடைவீதி வரிசையில் கிழக்கு நோக்கி வேளீசுவரசுவாமிக்கு மற்றொரு கோயிலுமுள்ளது. இவையன்றி பழனிக்கு இரண்டு கி.மீ தொலைவிலேயுளதாகிய பாலசமுத்திரம் என்ற சிற்றூரிலுள்ள அகோபிலவரதராசப்பெருமாள் கோயில் ஒன்றும் உள்ளது. இக்கோயில் 17 ஆம் நூற்றாண்டிலே நாயக்கர் வமிசத்தாரால் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

---

* பழனியில் ஆட்சி செலுத்திய சமீன்தார் ஒருவருக்கு ஆண் சந்ததி இல்லாது போக இவ்விநாயகரின் அருளால் உதித்த இளவரசரின் ஞாபகார்த்தமாக இவ்விநாயகர் பட்டத்து விநாயகர் என்ற பெயர் பெற்றார் என்பது.

சிதைவுற்றிருந்த பட்டத்து விநாயகர் கோயில் திருப்பணியும் கும்பாபிடேகமும் முற்றுவித்த அன்பர்கள் திருவாளர்கள் பழனி ப.கிருஷ்ணசாமி பண்டாரம், க.பாலராமலிங்க செட்டியார், அ.முத்தையாபிள்ளை முதலியோராவர்.

அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில், ஒட்டன்சத்திரம்.

அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்திலிருந்து மேற்கே பழனி செல்லும் சாலையில் 2 கிலோ மீட்டர் தொலைவில் இயற்கை எழில் சூழ்ந்த மலைச்சாரலில் அமைந்துள்ளது. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் சார்புக் கோயிலாக இக்கோயில் விளங்கி வருகின்றது. அருள்மிகு குழந்தை வேலப்பர் இத்திருக்கோயிலில் மயில்மீதமர்ந்து அடியார்களுக்கு அருள்புரிந்து வருகின்றார். மயில் வாகனத்துடன் கூடிய அருள்மிகு குழந்தை வேலப்பரின் உருவத்திருமேனி ஒரே கற்சிலையால் ஆனது.

அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயிலின் தென்புறமாக மலைக்கோயில் 1500 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இம்மலைக் கோயிலுக்குச் செல்லத் தொடக்க காலத்தில் நிறுவப்பட்ட கற்களாலான படிகள் உள்ளன. இம்மலைக் கோயிலில் முருகப் பெருமான் தண்டாயுதபாணியாக மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இம்மலைக்கோயிலிலிருந்து நூறு அடி தூரத்தில் தெற்குப் புறமாகக் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் மேற்குத் தொடர்ச்சி மலை அமைந்துள்ளது.

பழனித் திருக்கோயில் நிர்வாகம் பழனி முருகன் கோயில் தைப்பூசத் திருவிழாவின் போது திருத்தலப் பயணம் வரும் அடியார்கள் தங்கும் பொருட்டு இத்திருக்கோயிலில் ஒரு காவடி மண்டபத்தையும், இரு திருமண மண்டபங்களையும் கட்டியுள்ளது. அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயிலில் தமிழ்ப்புத்தாண்டு விழா, ஆடிப்பதினெட்டாம்பெருக்கு விழா, கந்தர்சஷ்டி விழா திருக்கார்த்திகை விழா, தைப்பூசத்திருவிழா, பங்குனி உத்திர விழா முதலிய திருவிழாக்கள் ஆண்டு தோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. பழனி மற்றும் ஒட்டன் சத்திரம் வட்டார மக்கள் இக்கோயில் வழிபாட்டிலும், திருவிழாக்களிலும் பெரும் ஈடுபாடு காட்டி வருகிறார்கள்.

தமிழ்ப்புத்தாண்டு நாளன்று இவ்வட்டாரத்தில் வாழும் விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைந்த தானியங்களைக் கொண்டு வந்து கோயிலில் சூறைவிட்டு வழிபடுகின்றனர்.

ஆடிப்பதினெட்டாம் பெருக்கு நாளன்று இவ்வட்டார மக்கள் விருப்பாச்சிக்கு அருகில் உள்ள தலையூத்து அருவியில் நீராடிவிட்டு, அருள்மிகு குழந்தை வேலப்பரை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

பழனி முருகன் கோயில் தைப்பூசத்திருவிழாவின் போது திருத்தலப் பயணம் வரும் அடியார்கள் இக்கோயில் வளாகத்தில் தங்கி முதன்முதலில் அருள்மிகு குழந்தை வேலப்பரை வழிபடுகின்றனர். மேலும், திருத்தலப்பயணம் வரும் அடியார்கள் குழந்தை வரம் வேண்டி குழந்தை வேலப்பரை வேண்டிக்-கொள்கிறார்கள். வேண்டிக் கொண்ட அடியார்கள் குழந்தைகள் விரும்பி உண்ணும் இனிப்பு வகைகளைக் குழந்தை வேலப்பருக்குக் காணிக்கையாக அளிக்கிறார்கள். பின்னர் அடியார்கள் அனைவருக்கும் இனிப்பு வகைகளை அள்ளி அள்ளி அன்புடன் வழங்குகிறார்கள். பங்குனி உத்திரப் பெருவிழாவின் போது இவ்வட்டார மக்கள் ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமுடிக்குச் சென்று காவிரியாற்றுத் தீர்த்தம் கொணர்ந்து குழந்தை வேலப்பருக்கு நீராட்டுச் செய்து வழிபடுகின்றனர். அருள்மிகு குழந்தை வேலப்பர் இத்திருக்கோயிலில் குழந்தை வரம் அளித்தும் குழந்தைகளைப் பிடித்திருந்த நோய்களைத் தீர்த்துவைத்தும் அடியார்களுக்கு அருள் பாலித்து வரும் ஆற்றல் மிக்க தெய்வமாக விளங்கி வருகின்றார்.

அருள்மிகு குறிஞ்சியாண்டவர் திருக்கோயில், கொடைக்கானல்.

மலைகளின் இளவரசியான குளு குளு கொடைக்கானலில் சுமார் 7300 அடி உயரத்தில் குறிஞ்சித் தலைவன் குமரன் எழுந்தருளியிருக்கும் இடம் அருள்மிகு குறிஞ்சியாண்டவர் திருக்கோயிலாகும். கோடையில் வெம்மை தணித்துத் தண்மை அளிக்கும் கொடைக்கானல் மலை போல், மக்களுக்கு இன்னல் நீக்கி அருள்பாலிக்கக் குடிகொண்டிருக்கும் இக்குறிஞ்சிக் குமரனின் கோயில் தான் கொடைக்கானல் நகரிலேயே புகழ்மிக்கதும் சக்தி வாய்ந்ததுமான திருக்கோயிலாகும். 1936 ஆம் ஆண்டு ஆங்கிலேய மாது ஒருவரால் கட்டப்பட்ட இத்திருக்கோயில், தற்போது தமிழ்நாட்டின் மிகப்பெரியதும், அறுபடை வீட்டின் ஒன்றானதுமான பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயில்களில் மிகப்பெரியதாகும்.

இத்திருக்கோயிலின் சந்நிதி தினமும் காலை 6.30 மணிக்குத் திறக்கப்பட்டு பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இரவு 7.30 மணிவரை இடைவிடாது திறந்தே வைக்கப்படுகிறது. மதியம் 12 மணிக்கு உச்சிக்கால பூஜையும், மாலை 7.30 மணிக்கு சாயரட்சை பூஜையும் செய்விக்கப்படுகிறது. இத்திருக்கோயிலில் வழக்கமாக முருகனுக்கு நடைபெறும் அனைத்து திருவிழாக்களுடன் சிறப்பாக மே மாதம் ''மலர் வழிபாட்டு விழா'' என்ற விழாவும் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகிறது.

மேலும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மிகக்குறைந்த வாடகையில் இரு படுக்கைகள் கூடிய நான்கு அறைகள் கொண்ட ''பழநி ஆண்டவர் இல்லம்'' என்ற தங்கும் விடுதி சகல வசதிகளுடன் நடத்தப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் அருள்மிகு குறிஞ்சியாண்டவரைத் தரிசனம் செய்தபின் இங்கிருந்தே பழநியையும், பழநியில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி மலையையும் கண்டுகளிக்கலாம்.

இயற்கையழகும் இறையழகும் இணைந்த இத்திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 22.04.1999-ஆம் நாள் சிறப்பான முறையில் நடைபெற்றது.

9. திருவிழாக்களும் - நிகழும் காலங்களும்

இத்திருத்தலத்தில் பல திருவிழாக்கள் மிகச்சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றன. திருவிழாக்காலங்கள் மற்றும் சிறப்பு நாட்களில் உற்சவமூர்த்தி திருவீதி உலா வந்து அன்பர்களுக்கு அருளுகின்றார்.

1. தமிழ்ப்புத்தாண்டு விழா (சித்திரை - ஏப்ரல் மாதம்)

சித்திரை முதல்நாள் தமிழ்ப்புத்தாண்டு நாளாகும். தமிழ்ப்புத்தாண்டு நாளன்று அதிகாலை 4.00 மணிக்கு திருக்கோயில் நடை திறக்கப்படுகின்றது. பக்தர்கள் முருகன் மீது பக்திப்பாடல்களை பாடிக்கொண்டு வருகின்றனர். இவ்விழாவில் குறிப்பிடத்தக்கது படி பூஜையாகும். மலையடிவாரத்திலிருந்து மலை உச்சி வரை ஒவ்வொரு படியிலும் சந்தனப்பொட்டு வைத்து, மலர் தூவி, கற்பூரம் ஏற்றி பக்தர்கள் படிக்கு பூஜை செய்கிறார்கள். அருள்மிகு பெரியநாயகி அம்மன் திருக்கோயிலில் சித்ரா பௌணர்மி தினத்தன்று அருள்மிகு முத்துக்குமாரசுவாமி வள்ளி தெய்வானை சமேதராய் வெள்ளி ரதத்தில் எழுந்தருளி திருவீதி உலா வருகிறார்.

மேற்கு ரத வீதியில் அருள்மிகு லெட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயிலில் பிரம்மோற்சவம் நடைபெற்று, நாள்தோறும் சுவாமி திருத்தேர் எழுந்தருளி திருவீதி உலா நடைபெறும். சித்ரா பௌர்ணமியன்று திருத்தேர் உலா நடைபெறும்.

2. அக்னி நட்சத்திர விழா (சித்திரை : ஏப்ரல் மாதம்)

பழனி முருகப்பெருமானை அன்போடு வலம் வரும் பக்தர்கள் எல்லாப்பேறுகளையும் பெறுவார்கள். பக்தர்கள் பலர் கிரிவலம் வராத நாள் இல்லையாயினும், சிறப்பாக வேனிற்காலமாகிய சித்திரைத் திங்களின் பிற்பகுதியும், வைகாசி திங்களின் முற்பகுதியும் கூடிய அக்கினி நட்சத்திரமாகிய 14 நாட்களிலும், இரவு பகலில்லாது பல்லாயிரக்கணக்கான அடியார்கள் திரள்திரளாக ஆர்வத்தோடு கிரிவலம் வருவார்கள். அக்காட்சியினைக் கண்டோரே அறிவர். அக்காலத்தே தான் நறுமணம் கமழும் கடப்ப மரங்களும், இனிய கனி மரங்களும் தத்தம் பழைய இலைகளை உதிர்த்து அழகிய கொழுந்துகளையும் தளிர்களையும், பச்சிலைகளையும், போதுகளையும், அரும்புகளையும், மலர்களையும் பயனாகத் தந்து நிற்கும்.

இவ்விள வேனிற்காலத்து கடம்ப நறுமலர்ச் சோலையாகிய இதனகத்துப் புகுந்து வரும் தென்றல் நம் முருகப் பெருமானாகிய மணங்கமழ் தெய்வத்து இளநலத்தினை மன்னுயிர்க்கட்குணர்த்தி மக்களாகிய நம்மையெல்லாம் அவன் திருவடிகளில் திளைக்க வைக்கும் பெற்றிவாய்ந்தது. அக்கினி நட்சத்திர கடைசி நாள் காலையில் ஊர்க்கோயிலிலிருந்து அருள்மிகு முத்துக்குமாரசுவாமி அடிவாரத்திற்கு உலா வந்து, பூக்கட்டி மண்டபத்தருகே பக்தர்களுக்கு தீர்த்தம் வழங்கியபின் இரவு கிரிப்பிரகாரம் திருவுலாப்போந்து திரும்பும் விழா சிறப்பு மிக்கது.

3. வைகாசி விசாகம் (வைகாசி : மே மாதம்)

பழநி நகரத்திலுள்ள அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயிலில் ஆண்டு தோறும் வைகாசி விசாகத்தையொட்டி, பத்து நாட்களுக்குச் சுவாமி புறப்பாட்டுடன் உற்சவம் சிறப்பாக நடைபெறும். விசாகத்தன்று திருத்தேரில் சுவாமி திருவீதி உலா நடைபெறும்.

4. ஆனித் திருமஞ்சனம் (ஆனி : ஜூன் மாதம்)

ஊர்க்கோயிலிலும், மலைக்கோயிலிலும் அன்னாபிஷேகம் நடைபெறும். ஆனி உத்திர நட்சத்திரத்தினத்தன்று அருள்மிகு நடராசப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அருள்மிகு நடராசப்பெருமானுடன் நால்வர் உற்சவ மூர்த்திகளும் புறப்பாடாகி நகர்வலம் வந்து காட்சியளித்தல் சிறப்பான தொன்றாகும்.

பழனி மலைக்கோயிலில் மூலவருக்கு கேட்டை நட்சத்திரத்தன்று 108 சங்காபிஷேகம் நடைபெறும் (ஜேஸ்டாபிஷேகம்).

5. ஆடி இலட்சார்ச்சனை (ஆடி : ஜூலை மாதம்)

ஆடித்திங்களில் அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயிலில் இலட்சார்ச்சனை மலர் வாழிபாடு நடைபெறுகின்றது. 25 நாட்கள் மலர் வழிபாடும் 26 வது நாள் புரச்சரண ஹோமம் நடைபெறும். ஆடி அமாவாசை அருள்மிகு ஆனந்தவல்லி சமேத சந்திரசேகரர் அஸ்த்தர தேவர்களோடு சண்முக நதிக்கு எழுந்தருளி தீர்த்த பூஜை நடைபெறும். ஆடிப்பதினெட்டாம் பெருக்கு விழாவிற்கு ஊர்க்கோயிலிலிருந்து அருள்மிகு கைலாசநாதரும், அம்மனும் அருள்மிகு பெரியாவுடையார் கோயிலுக்கு எழுந்தருளி அங்கு கன்னிமார் பூஜை முடித்து இரவு நகர்வலம் வந்து காட்சியளிப்பர். ஆடிக்கார்த்திகை, ஆடி அமாவாசை தினங்களுக்குத் தென்னகத்தின் பல மாவட்டங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் பூக்காவடி எடுத்து வந்து பழனியாண்டவனை வணங்குவர்.

ஆடிப்பூரம் : முளைப்பாலிகை விழா

இவ்விழா பார்வதியின் தவத்தை நினைவுகூறும் வண்ணம் அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயிலில் பத்து நாட்கள் கொண்டாடப் பெறுகின்றது. பௌர்ணமி நாளில் சிவபெருமான் தோன்றி பார்வதிக்குக் காட்சியளித்ததாகக் கருதப்படுகின்றது. ஆடிப்பூர நாளன்று அம்மன் ரத வீதிகளில் உலா வருகின்றார். ஆடிப்பூரத்தன்று பழனியாண்டவருக்கு மஞ்சள் பட்டு சாற்றி பூஜை நடைபெறும்.

6. ஆவணி மூலத் திருவிழா (ஆவணி : ஆகஸ்ட் மாதம்)

பழனித்தலத்திலுள்ள அனைத்துக் கோயில்களிலும் விநாயகர் சதுர்த்தி சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது. ஆவணி மூலவிழா அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயில் அருள்மிகு ஆனந்தவல்லி சந்திரசேகரர் பாதிரிப்பிள்ளையார் கோயில் குளத்தின் படித்துறையில் "பிட்டுக்கு மண் சுமந்த லீலை விழா" கொண்டாடப்படுகிறது.

பாலசமுத்திரம் அருள்மிகு அஹோபில வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் ஆவணி பிரமோற்சவம் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது.

7. புரட்டாசி நவராத்திரி விழா (புரட்டாசி : செப்டம்பர் மாதம்)

நவராத்திரி விழா அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயிலில் ஒன்பது நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. பத்தாம் திருநாளன்று மலைக்கோயிலிலிருந்து "பராசக்தி வேல் " புறப்பட்டு ஊர்க்கோயில் சென்றடைகிறது. பராசக்தி வேல் புறப்பட்டதும் உடன். சன்னதி திருக்காப்பிடப்படும். பராசக்தி வேல். ஊர்க்கோயில் வந்தவுடன் தங்கக்குதிரை வாகனத்தில் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி அம்பு. வில். வேல் இவற்றுடன் அருகிலுள்ள கோதைமங்கலம் கோதை ஈசுவரர் திருக்கோயிலுக்கு "விஜய யாத்திரையாக" எழுந்தருளி "வன்னிகாசுர வதத்தினை" நிகழ்த்துகின்றார்.

8. ஐப்பசி - கந்தர் சஷ்டி விழா (ஐப்பசி : அக்டோபர் மாதம்)

கந்த விரதங்களுள் "சஷ்டி. கார்த்திகை. பூசம் நாள் உயரும் உபவாசம் மேய" என்று குறிப்பிடுவது போல மூன்று விரதங்கள் மிக முக்கியமானவையாகும். 1.கார்த்திகை விரதம். 2.தைப்பூசம் அல்லது பிரதி மாத பூசம் நட்சத்திர நாள் விரதம். 3.சஷ்டி விரதம் இவற்றுள் சஷ்டி விரதம் மிகவம் முக்கியமானதாகும்.

பழனி மலைக்கோயிலில் நடைபெறும் பெருவிழாக்களுள் கந்தர் சஷ்டியும் ஒன்றாகும். இவ்விழா ஐப்பசி மாதம் சஷ்டி திதியின் பொழுது இத்தலத்தில் ஏழு நாட்கள் கொண்டாடப்பெறுகின்றது. கந்தர் சஷ்டி விழாவின் ஆறு நாட்களிலும் உச்சி கால பூஜையில் மூலவருக்கு சந்தன அபிஷேகம், சந்தன அலங்காரம், விசேஷ தளுகை நைவேத்யம் செய்து தீபாராதனையின் பிறகு கல்ப பூஜை நடைபெறும். உச்சிக்காலத்தில் துவாரபாலகர்களுக்கு பூஜை நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும். கந்தர் சஷ்டி விழாவில் முருகனுக்கும் – சூரனுக்கும் போரினையே மையமாகக் கொண்டு நடைபெறுவதால் இதனைப் "போர் விழா" என்றும் கூறலாம். சஷ்டி விரதத்தின் பெருமையினையும் முருகனின் ஆற்றலையும் இவ்விழா எடுத்துக்காட்டுகிறது.

புராணக்கதைகளும், கந்தபுராணமும், கந்தர் சஷ்டி கவசமும் இவ்விழாவிற்கு அடிப்படையாகும். கந்தபுராணத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்விழா கொண்டாடப்படுகிறது. இத்தலத்தில் நடைபெறும் சூரசம்ஹார நிகழ்ச்சிகளின்பொழுது கந்தபுராணம் (ஓலைச்சுவடி) படிக்கப்படுகிறது.

விழாத் தொடங்கிய முதல் நாளிலிருந்து ஆறாம் நாள் வரை, முருகனின் புகழைச் சொல்லக்கூடிய நூல்களாகிய திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் சஷ்டி கவசம், கந்த புராணம் இவற்றில் ஒன்றினை நாள்தோறும் சொல்லி வழிபடுவர். கந்தர் சஷ்டி ஆறு நாட்களும் உபவாசம் இருந்து சஷ்டி நாளில் தண்டு விரதம் முடித்து ஆண்டவரை வணங்கி விரதத்தை நிறைவு செய்வர்.

சூரர்களை வதை செய்தல் :

முருகன் சூரனை வதம் செய்யும் "போர் விழா" ஆறாம் திருநாளன்று கொண்டாடப்பெறுகின்றது. இதன்தனிச்சிறப்பாக மலைக்கோயிலின் உற்சவமூர்த்தியாகிய அருள்மிகு சின்னக்குமாரர் சூரபதுமாசுர வதம் பற்றி மலையிலிருந்து இறங்கியருளி அசுரர்களை வதம் செய்து திருமலை வலம் வந்து இதன் பின்னர் மலைமீது எழுந்தருளுவார். பழனி மலையின் நாற்புறத்திலும் திசைக்கு ஒருவராக முறையே கசமுகன், தாரகன், சிங்கமுகன், சூரபத்மன் ஆகியோரை வதம் செய்து, சின்னக்குமாரர் வெற்றியுடன் திரும்புவது காணத்தக்க கண்கொள்ளாக்காட்சியாகும். ஒவ்வொரு சூரன் வதை பெற்ற பொழுது முருகனுக்கும், வேலுக்கும் பூஜை நடைபெறுகிறது.

சூரசம்ஹாரம் முடிந்தவுடன் ஊர்க்கோயிலில் உற்சவ மூர்த்தியாகிய அருள்மிகு முத்துக்குமாரசுவாமி, வள்ளி தெய்வயானையுடன் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இந்திரவிமானத்தில் வெள்ளி மயில்வாகனத்தில் புறப்பட்டு ஊர்க்கோயில் ரதவீதியில் வலம் வந்து ஊர்க்கோயிலை அடைவார்.

ஏழாம் திருநாளன்று மலைக்கோயிலில் அருள்மிகு வள்ளி தெய்வயானை சமேத சண்முகருக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெறும். மாலையில் அருள்மிகு சின்னக்குமாரர் தங்கச் சப்பரத்தில் மலைக்கோயிலில் உலா வருவர். அருள்மிகு பெரியநாயகி அம்மன் திருக்கோயிலில் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தங்கக்குதிரை வாகனத்தில் ரதவீதிகளில் உலா வருகின்றார். அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயிலில் அருள்மிகு வள்ளி தெய்வயானை சமேத முத்துக்குமாரசுவாமிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெறும்.

9. திருக்கார்த்திகை விழா (கார்த்திகை : நவம்பர் மாதம்)

கார்த்திகைத் திங்களில் இவ்விழா பத்து நாட்கள் வெகுசிறப்பாக மலைக்கோயிலில் நடைபெறும். கார்த்திகை சோம வாரத்தில் பழனியாண்டவருக்கு சந்தன அபிஷேகம், சந்தன அலங்காரம், சிறப்பு தளிகை நைவேத்யம், தீபாராதனையும் நடைபெறும். தினமும் சின்னக்குமாரர் தங்க விமானத்திலும், கார்த்திகையன்று தங்கமயில் வாகனத்திலும் மலை உட்பிரகாரத்திலும், வெளிப்பிரகாரத்திலும் உலா வருவார்.

மலைக்கோயிலில் திருக்கார்த்திகை ஜோதி ஏற்றுதல் :

பத்தாம் திருநாளான திருக்கார்த்திகை விழாவன்று மலைக்கோயிலின் மேல் உள்ள தீபகம்பத்தில் மாலை 6.00 மணிக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் "அரகர அரகர அரோகரா" என்ற நாமம் ஒலிக்க, நாதஸ்வர இசை முழங்க அத்யானப்பட்டர் திருக்கார்த்திகை ஜோதி ஏற்றுகிறார்.

மலைக்கோயிலில் திருக்கார்த்திகைத் திருநாளில் திருக்கார்த்திகைப் பெருந்தீபம் ஏற்றப்பட்டு சுடர் விளக்கனைய செவ்வேள் பரமனின் பேரொளியில் அஞ்ஞான இருள் நீங்கி ஞானவெளிக்காணும் காட்சியினை பக்தர்கள் பெறுவர்.


அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத முத்துக்குமார சுவாமி

சொக்கப்பனை :

மலைக்கோயிலின்மேல் வெளிப்பிரகாரத்தில் முன்பகுதியில் சொக்கப்பனை அமைக்கப்படுகின்றது. தீபகம்பத்திற்கு இருபத்தி ஐந்து அடி தள்ளி ஐந்து அடி உயரத்திற்கு இதனை அமைக்கின்றனர். சொக்கப்பனை கொளுத்தி முடியும் வரை இதனை அமைத்தவர்கள் காவல் காத்து வருகின்றனர். சொக்கப்பனையைக் காய்ந்த தென்னங் கீற்றுக்களைக் கொண்டு அமைக்கின்றனர். நடுவில் தாழைமரத்தண்டை நட்டு வைக்கின்றனர்.

தீபகம்பத்தில் ஜோதி ஏற்றி முடிந்ததும் கோயில் பண்டிதர் சொக்கப்பனை கொளுத்தத் தயாராகிறார். சொக்கப்பனைக்குள் உள்ள தாழைத் தண்டின்மீது வைக்கப்பட்டுள்ள தீபத்தை ஏற்றி விட்டுச் சொக்கப்பனை கொளுத்துகின்றார். பக்தர்கள் அனைவரும் "அரகர அரகர அரோகரா" என்று ஆரவாரம் செய்து தீயை வழிபடுகின்றனர். சொக்கப்பனை எரிந்து சாம்பலானதும் அச்சாம்பலை எடுத்துப் பக்தர்கள் பிரசாதமாக அணிந்து கொள்கிறார்கள். சொக்கப்பனை கொளுத்திய பின்னர் மூலவர் அருள்மிகு தண்டாயுதபாணிக்குப் பூஜை செய்யப்பெறுகின்றது.

10. மார்கழி தனுர் மாத பூஜை (மார்கழி : டிசம்பர் மாதம்)

பழனித்தலத்தில் மலைக்கோயிலிலும் மற்றும் திருஆவினன்குடி, அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயில், அருள்மிகு பெரியாவுடையார் கோயில் ஆகிய கோயில்களிலும் "உஷக்காலப் பூஜை" சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

மேற்கு ரத வீதி அருள்மிகு லட்சுமி நாராயணப்பெருமாள் திருக்கோயில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு ராப்பத்து, பகல்பத்து விழா நடைபெறுகிறது.

பாவை விழா :

மார்கழித் திங்களில் மலைக்கோயிலில் அதிகாலை 3.00 மணியிலிருந்து திருப்பாவை. திரும்வெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி பாராயணங்கள் இசைக்கப்படுகின்றன. பழனி நகர் சார்ந்திருக்கக்கூடிய பள்ளி மாணவ, மாணவியர்க்கு திருப்பாவை, திருவெம்பாவை பாசுரங்களிலிருந்து பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கி பாவை விழா கொண்டாடப்படுகிறது.

11. தைப்பூச திருத்தேர் விழா (தை : சனவரி மாதம்)

பழனி முருகன் கோயில் தைப்பூசத்திருவிழா உலகப்பிரசித்தி பெற்ற திருவிழாவாகும். இவ்விழா இத்திருத்தலத்தில் பத்து நாட்களுக்கு வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும், பக்தர்கள் கூட்டம் கூட்டமாகப் பழனியாண்டவரை வழிபட பாதயாத்திரையாக வருகின்றனர்.

வியாபாரம் பெருக, தொழில் பெருக, திருமணத்தடை அகல, விவசாயம் செழிக்க, கொடிய நோய் நீங்க, குழந்தைச் செல்வம் கிடைக்க, இன்னோரன்ன வேண்டுதல்களுக்காகப் பக்தர்கள் விரதம் இருந்து பாதயாத்திரை வருகின்றனர். சிறு சிறு குழுக்களாகப் பாதயாத்திரை வரும் பக்தர்கள் கையில் வேலேந்திக் கொண்டு வருகின்றனர். வழிநடையில் அவ்வேலுக்குப் பூசை செய்து அன்னதானம் செய்கின்றனர்.

பாதயாத்திரையின்போது சிறுசிறு குழுக்களாக வரும் பக்தர்கள் வழிநடைச்சிந்து பாடல்களையும், பாதயாத்திரைப் பாடல்களையும் பாடிக்கொண்டு வருகின்றனர். பழனிமுருகன் கோயில் தைப்பூசத்திருவிழாவின் போது “பாட்டு வழிபாட்டு முறை” முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. **சர்க்கரைக்காவடி, பால் காவடி, பன்னீர்க்காவடி, திர்த்தக்காவடி, தயிர்க்காவடி, இளநீர்க்காவடி, விபூதிக்காவடி** முதலிய காவடிகளைப் பக்தர்கள் எடுத்து வந்து பழனியாண்டவருக்குக் காவடி காணிக்கை செலுத்தி பழனியாண்டவரை வழிபடுகின்றனர். பழனி முருகன் கோயில் வழிபாட்டில் காவடிக் காணிக்கை சிறப்பிடம் பெறுகிறது.

கொங்கு நாட்டுப் பகுதியிலிருந்து, காவடி எடுத்து வரும் பக்தர்கள், தைப்பூசத்திருவிழாவின் போது, அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயில் வளாகத்தில் காவடியாட்டம், வேலனாட்டம், சாமியாட்டம், சுப்பிரமணியர் வள்ளி கும்மி, முதலிய ஆட்டக்கலைகளை நிகழ்த்துகின்றனர். வெள்ளித்தேரின் போது திடும் ஆட்டக்கலைஞர்கள் அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயிலுக்கு முன்னால் திறந்த வெளியில் வட்டமாகக் கூடி திடும் எனும் இசைக்கருவியை நீண்ட நேரம் முழக்குகின்றனர். காவடி எடுத்து வரும் பக்தர்கள் பழனியாண்டவர் மீது பழனியாண்டவர் காவடிப் பாட்டைப் பாடிக்கொண்டு வருகின்றனர். இக்காவடிப்பாட்டு தலைமுறை தலைமுறையாக வழங்கி வரும் வாய்மொழிப் பாடலாகும்.

கிரிவீதியிலும், மலைமீதும் ஆங்காங்கே காவடியாட்டம் இடம் பெறுவதைக் காணலாம். நாட்டுப்புற இசையும், நாட்டுப்புற ஆட்டங்களும் பழனி முருகன் கோயில் தைப்பூசம், பங்குனி உத்திரவிழாக்களில் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளன.

12. மாசி மகம் - மகாசிவராத்திரி (மாசி : பிப்ரவரி மாதம்)

அருள்மிகு பெரியாவுடையார் திருக்கோயில் மகா சிவராத்திரி விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்படுகிறது. நான்கு ஜாமங்களின் பொழுதும் சிவனுக்கு இரவுக்காலப் பூஜைகள் நிகழ்த்தப்படுகின்றன. மலைக்கோயிலிலும், திருஆவினன்குடிக்கோயிலிலும், அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயிலிலும் மகா சிவராத்திரி விசேஷ பூஜைகள் நடத்தப்படுகின்றன.

மாசி மகம் :

மலைக்கோயிலில் அருள்மிகு பழனியாண்டவருக்கு மாசிமகத்தன்று ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் நடைபெறும்.

மாரியம்மன் திருத்தேர் விழா :

திருக்கோயிலின் சார்புக் கோயிலான பழனி நகரில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் திருத்தேர் விழா வெகுவிமர்சியாக நடைபெறுகின்றது.

13. பங்குனி உத்திரவிழா (பங்குனி : மார்ச் மாதம்)

பழனி முருகன் முருகன் கோயிலில் பங்குனி உத்திரப் பெருவிழா பத்து நாட்களுக்கு வெகுவிமரிசியாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆறுபடை வீடுகளுள், மூன்றாம் படை வீடாகத் திகழ்ந்து வருகின்ற, திருஆவினன்குடித் திருக்கோயிலில், பங்குனி உத்திரப்பெருவிழாவின் கொடியேற்றம் நிகழ்கின்றது. கொடியேற்றுவிழாவின் போது, வேதமந்திரங்களை பாராயணம் செய்கின்றனர். திருக்கோயில் ஓதுவார்கள் திருமுறை, திருப்புகழ்ப் பாடல்களைப் பாடுகின்றனர். கொடிப்பூசையின் போது, இசைக்கருவியான தவிலுக்குப் பெட்டிட்டுப் பூசை செய்யப்படுகின்றது. மிகப்பழமையான இசைக்கருவியான திருச்சின்னம் வாசிக்கப்படுகின்றது ; மங்கல வாத்யங்கள் இசைக்கப்படுகின்றன.

விழா நாட்களில் கிரிவீதியில் காலையிலும், இரவிலும் அருள்மிகு முத்துக்குமார சுவாமி வள்ளி தெய்வானையுடன் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிப்பார். ஐந்தாம் திருநாளன்று மலையின் மீது அருள்மிகு சின்னக்குமாரர் தங்கரதத்தில் எழுந்தருளி உலா வருவார்.

ஆறாம் திருநாளன்று கிரிவீதியில், அருள்மிகு முத்துக்குமார சுவாமி வள்ளி தெய்வானையுடன வெள்ளி ரதத்தில் எழுந்தருளி உலாவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமையும். ஏழாம் திருநாள் பங்குனி உத்திரத்திருநாளன்று கிரிவீதியில் தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள், தேர்த்திருவிழாவில் பங்கு பெற்று, முருகப்பெருமானை வழிபட்டு அருள்பெறுகின்றனர்.

"பாசி படர்ந்த மலை
பங்குனித் தேர் ஓடும் மலை" - என்று பழனியாண்டவர் காவடிப்பாட்டு தேர்த்திருவிழாவைப் போற்றுகின்றது.

பங்குனி உத்திரப்பெருவிழாவின் போது, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள், தீர்த்தக்காவடி, இளநீர்க்காவடி, தயிர்க்காவடி, சர்க்கரைக்காவடி, பால் காவடி, வெட்டிவேர்க்காவடி முதலிய காவடிகளை எடுத்துக்கொண்டு வருகின்றனர். வேண்டிக் கொண்ட பக்தர்கள் அலகு குத்திக்கொண்டு வருகின்றனர்.

இவ்விழாவின்போது பெருவாரியான பக்தர்கள், கொடுமுடிக்குச் சென்று காவிரியாற்றில் தீர்த்தம் ஆடி, தீர்த்தக்காவடி எடுத்த வந்து பழனியாண்டவருக்கு நன்னீராட்டுச் செய்கின்றனர். பங்குனி உத்திரவிழா தீர்த்த யாத்திரையோடு தொடர்புடைய விழாவாகும். தீர்த்தம் ஆடுதல் அரும்பெரும் பேற்றினை எய்துவிக்கம் என்று ஆமகங்கள குறிப்பிடுகின்றன.

கூட்டம் கூட்டமாகக் காவடி எடுத்துக்கொண்டு வருகின்ற பக்தர்கள், பழனி முருகன் மீது காவடிப் பாடல்களைப் பாடிக்கொண்டு வருகின்றனர். இவ்விழாவில் பெண்கள் பெருமளவில் தீர்த்தக்காவடி எடுத்துக் கொண்டு வருவதையும், காவடிப்பாடல்களைப் பாடிக்கொண்டு வருவதையும் காணலாம்.

காவடி எடுத்து வரும் காவடிக் கூட்டத்திற்கு முன்னால், நாட்டுப்புற இசைக் கலைஞர்கள், தப்பு, திடும், நகார், மேளம், பம்பை, உறுமி, கிணுக்குச்சட்டி, சிறிய பாறை, பெரும்பறை முதலிய தோற்கருவிகளை வாசித்துக் கொண்டு வருகின்றனர். கொம்பு, நாகசுரம், சத்தக்குழல் முதலிய ஊது கருவிகளையும் வாசித்துக்கொண்டு வருகின்றனர்.

காவடியாட்டம், கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், தேவராட்டம், ஒயிலாட்டம், ஒயில் கும்மி ஆட்டம், வேலனாட்டம், சாமியாட்டம் முதலிய நாட்டுப்புற ஆட்ட வகைகளைப் பழனி முருகன் கோயில் பங்குனி உத்திரபெருவிழாவின் போது காணலாம்.

ஆடல், பாடல், இசை என மிகப்பழமையான முருகவழிபாட்டு மரபுகளைப் பழனி முருகன் கோயில் பங்குனி உத்திரபெருவிழாவின் போது காணலாம்.

10. பழனியாண்டவர் இலக்கியங்கள்

பழனி முருகன் கோயில் வழிபாட்டில் 1) வாய்மொழி மரபு, 2) இலக்கிய மரபு என்ற இருமரபுகள் இடம் பெற்ற வருகின்றன.

பழனியாண்டவர் காவடிப்பாட்டு, பாதயாத்திரைப்பாட்டு, வழிநடைச்சிந்து, கும்மிப்பாட்டு, சுப்பிரமணியர் வள்ளி கும்மி, ஒயிலாட்டப்பாட்டு முதலிய நாட்டுப்புறப் பாடல்களை பக்தர்கள் பழனி முருகன் கோயில் தைப்பூசம், பங்குனி உத்திரம் முதலிய திருவிழாக்களின் போது பாடிக்கொண்டு வருகின்றனர். இது வாய்மொழி மரபு சார்ந்தது ஆகும்.

சங்ககாலம் முதல் இன்று வரை பல்வேறு காலக்கட்டங்களில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் பலர் பழனித்தலத்தையும், பழனியாண்டவரையும் பற்றித் தனிப்பாடல்களாகவும், பதிகங்களாகவும், பிரபந்தங்களாகவும், உரைநடையாகவும் பல நூல்களை இயற்றியுள்ளனர். இந்நூல்களை பழனியாண்டவர் இலக்கியங்கள் என்று வகைப்படுத்தலாம்.

சங்க காலப்புலவர் நக்கீரர், திருமுருகாற்றுப்படையில் திருஆவினன் குடியைப் போற்றிப் பாடியுள்ளார். கந்த புராணம் பழனித்தலத்தையும் போற்றுகின்றது.

அருளாளர் அருணகிரிநாதர் பழனி முருகப்பெருமான் மீது திருப்புகழ் பாடல்களைப் பாடியுள்ளார். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பழனியாண்டவர் மீது பழனித்திருவாயிரம் பாடியுள்ளார். மாம்பழக் கவிச்சிங்க நாவலர், பழனியாண்டவர் மீது, பழனிப்பதிகம், பழனி நான்மணிமாலை, திருப்பழனி வெண்பா, பழனி வெண்பா அந்தாதி, பழனாபுரிமாலை, பழனிக்கோயில் விண்ணப்பம் முதலிய சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார். பழனிச் சமீன் விசயகிரி வேலச்சின்னோவையன், பழனி முருகன் மீது பழனிப் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். குமார விசையகிரிவேலச் சின்னோவையன், வையாபுரிப் பள்ளு இயற்றியுள்ளார். கு.நடேசக்கவுண்டர் பழனியாண்டவர் மயில்விடு தூது இயற்றியுள்ளார். பாலசுப்பிரமணியக் கவிராயர் பழனித் தலபுராணத்தை இயற்றியுள்ளார்.

பக்தர்கள் அறியும் பொருட்டு சில இலக்கியங்கள் மட்டும் இங்கு எடுத்துக் காட்டாகத் தரப்பட்டுள்ளன.

நக்கீரர் :

திருமுருகாற்றுப்படை. திருவாவினன் குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு 126
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீங்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தன்மையர் காமமொடு
கடும்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந்து அன்ன மாசுஇல் தூஉடை 138

முகைவாய் அவிழ்த்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயன்உடை நெஞ்சின்
மென்மொழி மேலவர் இன்நரம்பு உளர
நோய்இன்று இயன்ற யாக்கையர் மாவின் 143

அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்உரை கடுக்கும்திதலையர் இன்நகைப்
பருமம் தாங்கிய பணிந்து ஏந்து அல்குல்
மாசுஇல் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவொடு ஒடுங்கிய தூம்புஉடை வால்எயிற்று 148

அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் படைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள் அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து
ஈர் இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்ந்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய 160

உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித் 163

தாமரை பயந்த தாவுஇல்ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்
பகலில் தோன்றும் இகல்இல் காட்சி 166

நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறிஇயர்
மீன்பூத்து அன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்னசெலவினர் வளிஇடைத்
தீ எழுந்து அன்னதிறலினர் தீப்பட்டு
உரும்இடித்து அன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில் தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துஉடன் காணத்
தாவுஇல் கொள்கை மடந்தையொடு சில்நாள்
ஆவி னன்குடி அசைதலும் உரியன் ; அதா அன்று ; 176

அருணகிரிநாதர் - பழனித் திருப்புகழ்

1. பலவின் முதுபழம் விழைவு செய்தொழுகிய 132*
நறவு நிறைவயல் கமுகடர் பொழில்திகழ்
பழனி மலை வரு புரவல! அமரர்கள் பெருமாளே
2. கொண்டல் சூழுமஞ் சோலைமலர் வாவிகயல் 184
கந்து பாயநின் றாடுதுவர் பாகையுதிர்
கந்தி யோடகஞ் சேர்பழனி வாழ்குமர பெருமாளே
3. பதுமவய லிற்பூக மீதேவ ரால்கள் துயில 149
வருபுனல் பெருக்காறு காவேரி சூழவளர்
பழனிவரு கற்பூர கோலாக லவமரர் பெருமாளே
4. பழன முழவர் கொழுவி லெழுது
பழைய பழனி யமர்வோனே
5. பரம குருபர எனுமுறை பரசொடு 133
பரவி யடியவர் துதிசெய மதி தவழ்
பழனி மலைதனி லினிதுறை யமரர்கள் பெருமாளே
6. ஆவல் கொண்டுவி றாலே சிராடவெ 101
கோம ளம்பல சூழ்கோ யில்மீறிய
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே

7. ஆத வன்கதி ரோவாது லாவிய 102
கோபுர ங்கிளர் மாமாது மேவிய
ஆவி னன்குடி யோனேசு ராதிபர் பெருமாளே

8. பரிமளப் பாகலிற் கனிகளைப் பீறிநற் 171
படியினிட் டேகுரக் கினமாடும்
பழனியிற் சூருறப் புகழ்குறப் பாவையைப்
பரிவுறச் சேர்மணப் பெருமாளே

9. படல வுடுபதியை யிதழி யணி சடில 168
பசுபதி வரநதி - அழகான
பழனி மலையருள் செய் மழலைமொழிமதலை
பழனி மலையில் வரு பெருமாளே

10. பவளத் தவளக் கனகப் புரிசைப் 124
பழனிக் குமரப் பெருமாளே

11. நாளி கேரம்வ ருக்கைப ழுத்துதிர் 153
சோலை சூழ்பழ னிப்பதி யிற்றிரு
ஞான பூரண சத்தித ரித்தருள் பெருமாளே

12. பலமலர்க ளேதூவி யாரண நவின்று 146
பரவியிமை யோர்சூழ நாடொறுமி சைந்து
பழனி மலைமீ தோர்ப ராபர னிறைஞ்சு பெருமாளே

13. பனக மாமணி தேவிக்கு பாகரி 79
குமரனே பதி னாலுல கோர்புகழ்
பழனி மாமலை மீதினி லேயுறை பெருமாளே

14. சொம்பிற் பலவள முதிர்சோ லைகள்சூழ்
இஞ்சித் திருமதின் புடைசூ ழருள்சேர்
துங்கப்பழனியில் முருகா இமையோர் பெருமாளே

15. பலவிற் கனிபணை மீறிய மாமர 116
முருகிற் கனியுடனே நெடு வாளைகள்
பரவித் தனியுதிர் சோலைகள் மேவிய வகையாலே
பழனத் துழவர்க ளேரிட வேவிளை
கழனிப் பரவுகள் போதவு மீறிய
பழனிச் சிவகிரி மீதினி லேவளர் பெருமாளே

16. பரிமள கற்ப காடவி அரியளி சுற்று பூவுதிர் 169
பழனி மலைக்குள் மேவிய பெருமாளே

17. ஆலையும் பழனச் சோலையும் புடைசுற் 108
றாவி னன் குடியிற் பெருமாளே

18. பனிமலை ரோடைச் சேலுக ளித்துக் 158
ககனம ளாவிப் போய்வரு வெற்றிப்
பழனியில் வாழ்பொற் கோமள சத்திப்பெருமாளே

19. பழையபார் வதிகொற்றி பெரியநாயகி பெற்ற 160
பழனிமா மலையுற்ற பெருமாளே

20. வருமருவி நவமணிகள் மலர்கமுகின் மிசை சிதற 189
மதுவினிரை பெருகுவளி மலைமீதே
வளர்குறவர் சிறுமியிரு வளர் தனமு மிருபுயமு
மருவிமகிழ் **பழனி வரு பெருமாளே**

21. பணிலமணி வெயில்வீசு மணிசிகர மதிசூடு 187
பழனி மலை தனில் மேவு பெருமாளே

22. ஆடகம்புனை பொற்குடம் வைக்குங்
கோபு ரங்களி னுச்சியு டுத்தங்
காவி னன்குடி வெற்பினி னிற்கும் பெருமாளே

23. படலைச் செறி நற் கதலைக் குலையிற் 128
பழமுற் றொழுகப் புனல்சேர் நீள்
பழனற் கரையிற் கழைமுத் துகுநற்
பழனிக் குமரப் பெருமாளே

24. நட்டுவர் மத்தள முழக்க மாமென 182
மைக்குல மெத்தவு முழக்க மேதரு
நற்பழனிப்பதி செழிக்க மேவிய பெருமாளே

25. அரிய புகழை யமைத்த **பெரிய பழனி மலைக்கு** 188
ளழகு மயிலை நடத்து பெருமாளே

26. பருதி யின்ப்ரபை கோடிய தாமெனும் 194
வடிவு கொண்டருள் **காசியின் மீறிய**
பழனி யங்கிரி மீதினில் மேவிய பெருமாளே

27*. பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநவில் 148
சரவணப வாவென்று வற்கரமு மாகிவளர்
பழனிமலை மேனின்ற சுப்ரமணி யாவமரர் பெருமாளே

** திரு. வ.த.சுப்பிரமணிய பிள்ளையவர்களது பதிப்பின் திருப்புகழ் எண்களாகும். இவர்களது தவப்புதல்வர் தணிகைமணி ராவ்பகதூர் வ.ச.செங்கல்வராய பிள்ளையவர்களால் அருணகிரிநாதர் – வரலாறும் நூலாராய்ச்சியும் என்ற நூலையும் காண்க.

விசயகிரி வேலச்சின்னோவையன் -பழனிப்பிள்ளைத்தமிழ்

சீரார் நலஞ்சேர் பூவுலகில் தேவா சுரரின் மற்றையரில்
தினமு முனது கொலுக்காணச் செல்லா தாரார் திறைவளங்கள்
தாரா தாராருனதுபதந் தனையேவணங்கித் தொழவேண்டித்
தழுவா தாரா ரெவ்வேளை சமயங் கிடைக்கு மென நினைந்து
வாரா தாரா ருனதருளை வாழ்த்திப் புகழ்ந்து துதிக்க
வசியா தாரார் பணிவிடைகள் வரிசைப்படியே நடத்தாதார்
ஆரா ரெனத்தா லாட்டுகின்ற வரசே வருக வருகவே
அருள்சேர் பழனிச் சிவகிரிவா ழையா வருக வருகவே!

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் - பழனாபுரி மாலை

சராசர சீவ தயாநிதி நீயிச் சமயமென்முன்
வராவிடில் யானினி யாரை நினைத்து வரம்பெறுவேன்
குராவடி வேல குழந்தைக் குமர குருமணிச்சூட்
டராவணை மால்பர வும்பழ னாபுரி யாண்டவனே
கையா லுனைத்தொழச் சென்னியி னாலுன் கழல் வணங்க
மெய்யா யடிக்கடி வாக்காற் றுதிக்க விதித்துமனம்
நையா வியற்கையு நல்கினியென்னை நழுவவிடேல்
ஐயா வுனக்கப யம்பழ னாபுரி யாண்டவனே!

பெ.அண்ணாமலைக் கவிராயர் -பழனிப்பதிற்றுப் பத்தாந்தாதி

போக்கு வரவு மியிர்திரியப்
புலையாஞ் செனன மெடுத்தெடுத்துத்
தாக்கு முதிரக்கருக்குழியிற்
சலிக்கும் படிக்கோ வெனைவிதித்தாய்
கோக்கு முகிலால் மயிலாட
நுவல்வா னரங்கள் தென்னைமடல்
சாய்க்கு மதுரப் பழனிநகர்த்
தலைவா யெவர்க்குந் தயாபரனே!

பழனிமலை வடிவேலர் சந்நிதி முறை

மதிமவுலி மார்பில்விளை யாடுகம லங்கவுரி
மழதனி லுதித்தகமலம்
வண்டமிழ்ச் சங்கத்திலிருந்தகம லம்பிரமன்
வந்தனைகள் செய்தகமலம்
அதிகவிதை அருணகிரி சூட்டுகம லந்தெய்வ
யானைகுறு வாசகமலம்
அணிமணி திருத்திப் புனைந்தகம லம்பணிசெய்
அடியர்வினை மாற்றுகமலம்
கதிர்முலைக் குறமங்கை தினைவனப் புற்களும்
கற்களும் முறுத்துகமலம்
கானமயி லேறிவிளை யாடிநட மாடுசுரர்
கணங்கள்கொண் டாடுகமலம்
பதிதனாம் என்னுடைய வன்மன மெனுங்கரும்
பாறையில் முறைத்தலருமோ
பழமறை சொலியசீல தொழுமவர்க ளனுகூல
பழனிமலை வடிவேலனே!

11.* பழனித்தல புராணம் - ஓர் அறிமுகம்

தொன்மை வாய்ந்த பழனியம்பதி குறித்து எழுதப்பெற்ற நூல் பழனிப்புராணம் என்பதாகும். பழனித்தல புராணம் எனப்படுவதும் இந்நூலேயாம். இந்நூலை அறிமுகப்படுத்தும் அளவில் இக்கட்டுரை எழுதப்பட்டது என்க. இன்றைக்குப் பழனித் தலவரலாற்றை நிறைவுற எடுத்துரைப்பது இந்நூல் எனலாம்.

தலபுராண ஆசிரியர்

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாலசுப்பிரமணியக்-கவிராயர் என்பார் முருகனடியார்கள் வேண்டுகோளை ஏற்றுப் பழனிப்புராணம் என்ற நூலை இயற்றினார். பழனித் திருக்கோயிலில் அகம்படித் தொழிலும், தேவரா திருவாசகங்கள் ஆகிய திருவருள் நெறித்தமிழ் வேதத்தை நியமப்படி ஓதுதல் தொழிலிலும் அமர்ந்திருந்த பெரிய கவிராயர் என்பார் இவர் தந்தையாவார். பாலசுப்பிரமணியக் கவிராயர் வடமொழி தென்மொழிகள் ஆகியவற்றின் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தெளிந்தார். திருவாவடுதுறைச் சுப்பிரமணய தேசிக சுவாமிகள் இடத்தே சிவஞான போதம் முதலிய மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கனையும், சிவாகமங்களையும் நன்குணர்ந்து வேதாந்தத் தெளிவான அத்துவித மதம் சைவதித்தாந்தமே என்று மனங்கொண்டார்.

பழநி மான்மியங்களை விரித்து ஒரு புராணம் பாடுக என்று முருகனடியார்கள் வேண்டினர். முருகனின் புகழ்களையெல்லாம் பாட வேண்டும் என்ற ஆர்வம் உந்த, பாலசுப்பிரமணியக் கவிராயர் கந்தபுராணத்தில் கிரிப்பிரகாச காண்டத்தில் இருபத்தினான்காம் அத்தியாயத்தில் விவரிக்கப்பெற்ற வராககிரி மான்மியத்தை நன்கு அறிந்து பழநிப்புராணத்தை மூன்று நாட்களில் பாடி முடித்தார் என்பர்.

---

* 'சேக்கிழார் செம்மணி', பேராசியர்.
முனைவர் இரத்தின கிருட்டிணமூர்த்தி,எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி.,

நூல்தோன்றிய காலம்

இப்புராணத்தின் மூன்றாம் பதிப்பு யாழ்பாணத்து மேலைப்-புலோலி நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள் இயற்றிய பொழிப்புரையுடன் 1924-ல் வெளியிடப்பட்டுள்ளது. அறிஞர் கதிரைவேற்பிள்ளை அவர்கள் குறிப்பின்படி இன்றைக்கு முந்நூற்று நாற்பது ஆண்டுகட்கு முன் இயற்றப்பெற்ற நூல் பழநிப்புராணம் எனலாம்.

நூலமைப்பு

கிரிச்சருக்கம் தொடங்கிச் சேரர்கோன் சருக்கம் முடிய இருபத்து மூன்று சருக்கங்கள் இப்புராணத்தில் உள்ளன. இச்சருக்கங்களில் நவிலப்பெறும் செய்திகள் அனைத்தும் விரிக்கின் பெருகும் என்பது கருதி ஒவ்வொரு சருக்கத்தின் செய்திகளையும் சுருங்கத்தர முயல்கிறது இக்கட்டுரை. சருக்கங்கள் அனைத்தும் நைமிசாரணிய முனிவர்க்குச் சூதமுனிவர் கூறுவனவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1. கிரிச்சருக்கம்

வியாசமுனிவரின் மாணவர் சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்கட்கு அவர்கள் வேண்டுகோட்கிணங்கித் தென் திசையிலுள்ள வராககிரியின் பெருமைகளைக் கூறுகின்றார். குமரவேள் வீற்றிருக்கும் மலைகளைக் குறிப்பிடுகிறார். வராகமலைக்கு வடக்கில் விட்டுணுமலை, வடமேற்கில் பிரமன்மலை, அதற்குக் கிழக்கே சிவமலை, சக்திமலை உள்ளன என்கிறார். சூரனை வென்று தேவரைக் காத்த முருகன் வீற்றிருப்பது சிவன்மலை எனவும் அதனருகில் தான் திருவாவினன்குடியாம். பழனித்தலம் உள்ளது எனவும் தெரிவிக்கின்றார். முருகன் உறையும் மலைகளையெல்லாம் கிரிச்சருக்கத்தில் குறிப்பிடுகின்றார்.

2. வராககிரிச் சருக்கம்

அரியவேதப் பொருளுடன் வராககிரி ஒப்பாய் உள்ளது என்று விவரிக்கத் தொடங்கும் சூதமுனிவர் பஞ்சபூதங்களுக்கு ஒப்பாக அது விளங்குவதாகக் கூறுகிறார். கடம்பு, அரசு, ஆல், ஆத்தி, குருந்தம், குறும்பலா, சண்பகம், சந்தனம் முதலிய பல்வேறுபட்ட மரங்கள், நிறைந்த பொழில்கள், செடிகொடிகள் மருந்து மூலிகைகள், ஒற்றுமையுடன் வாழும் விலங்குகள்,

பிறஉயிர்கள் முனிவர்கள், வேடுவர்கள் அம்மலையில் உள்ள பெற்றியையும், காட்டில் வாழும் மடவார், தேவமாதர், குறத்திகள், அவர்கள் செய்யும் தொழில்கள் முருகனைத் துதித்து அவர்கள் ஆடும் வெறியாட்டு, வேட்டுவச்சிறுவர்கள் அவர்தம் விளையாட்டுக்கள், அம்மலையில் எழும் பல்வேறுபட்ட ஓசைகள் வேட்டுவர் தம் இயல்புகள் ஆகியவை பற்றியெல்லாம் வராககிரிச் சருக்கத்தில் விவரித்துக் கூறுகிறார்.

3.மாயாத்திரிச் சருக்கம்

வராகமலைக்கு மாயாத்திரி என்னும் பெயர் வந்தமைக்கான காரணம் கூறப்படுகிறது.

அயன், அரி வேண்டுகோட்கிணங்க சிவசக்தியாகிய முதல்வி தன் கலையுள் ஒன்றாகிய மாயையாய் மலையுருவானாள். அந்த மலையே மாயாத்திரி எனப்பட்டது. வராகமலையின் தோற்றம் இச்சருக்கத்தில் கூறுப்படுகிறது.

4. பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்த சருக்கம்

வராககிரி என்ற பெயர் வந்தமைக்கான காரணம் இச்சருக்கத்தில் கூறப்படுகிறது.

வராகம் என்பது பன்றியைக் குறிக்கும். வியாசமுனிவர் இருந்து வதஞ்செய்த திருக்குறுந்துறை என்ற தலத்தில் ஒரு முனிவர் சிவயோகம் செய்தார். பின்பு பஞ்சாக்கினியின் நடுவில் நின்று அரிய தவம் செய்தார். பிரமதேவர் வமிசத்தில் பிறந்த சகலமுனிவரின் மக்கள் பன்னிருவர் தவத்திற்கு இடையூறு செய்தனர். தவத்தை விட்டு விழித்த முனிவர், நீங்கள் பன்னிருவரும் மலையில் வாழும் பன்றிகளாகப் பிறக்கக் கடவீர் என்று சபித்தரர். சாபம் பெற்ற அம்மக்கள் வருந்தினர். அம்மலையில் பன்றி வடிவில் இருந்த விஞ்சையர்பதியும் அவர் மனைவியும் அலைந்து கொண்டிருந்தனர். அவர்கட்கு மக்களாய்ப் பிறந்தார்கள். சகலமுனிவரின் மக்கள் விலங்கு வேட்டையாட வந்த பாண்டிய மன்னன் படையை அவ்ஆண் பெண் பன்றிகள் எதிர்த்தமையால் கொலையுண்டன. பன்றிக்குட்டிகள் தம் தாய் தந்தையரை இழந்து துன்புற்றன. இறைவியின் வேண்டுதலால் இறைவன் தாய்ப்பன்றியாக வடிவெடுத்து வந்து அக்குட்டிகளுக்குப் பால் ஊட்டினான். பாலையுண்ட அளவில் அக்குட்டிகள் அரசிளங்குமாரரானார்கள். பாண்டியனுக்கு மந்திரியாவீர் என்று இறைவன் ஆணையிட்டு மறைந்தான். பாண்டீசர் என்னும் சிவலிங்கத்தைப் பாண்டியன் நிறுவினான்.

இதுவன்றி காசிபமுனிவர் வழிவந்தவராக முனிவர் இம்மலையில் ஒரு வன்னி மரநிழலில் சிவபெருமானைக் கருதித் தவம் செய்தார். ''என் பிறவி தொலைய சிவயோகத்தையும் நின் திருவடியையும் அருள வேண்டும்'' என இறைவனை வேண்டினார் முனிவர். இவ்வரங்களைத் தந்த இறைவன், ''இம்மலை வராககிரி என்ற பெயரைப் பெறுவதாக'' என்று கூறி மறைந்தான். இவ்விரண்டு நிகழ்வுகளால் இம்மலை வராககிரி என்ற பெயர் பெற்றது.

5. அருச்சுனன் தவச்சருக்கம்

வராககிரியின் பெருமையைக் கூறும் சூதமுனிவர் அம்மலையில் அருச்சுனன் தவம் செய்தது குறித்தும் சிவபெருமான் வேடவடிவங்கொண்டு சென்று அவனை ஆட்கொண்டது குறித்தும் விவரிக்கிறார்.

சகுனியின் சூழ்ச்சியால் துரியோதனனுடன் சூதாடி நாடிழந்த பாண்டவர்கள் காடு சென்று வராககிரியில் இருந்தனர். அங்குக் கண்ணபிரானைக் கண்டனர். வணங்கினர். கண்ணன் கருத்துக்கிணங்க அருச்சுனன் மார்க்கண்டேயம் என்ற மலைப்பகுதியில் சிவபெருமானைக் குறித்துத் தவமிருந்தான். சிவபெருமான் வேடனாகவும் உமையம்மை வேடுவப் பெண்ணாகவும் உருவங்கொண்டு வந்தனர். கந்தர் அவர்தம் குழந்தையாக வந்தான். சிவகணங்கள் வேடர்களாக வந்தனர். வேதங்கள் நாய்களாக அவர்களைத் தொடர்ந்தன. யமன் பன்றியாக வந்தான்.

வேடனாக வந்த சிவபெருமான்வில்லை வளைத்துப்பன்றி மேலுருவிப் பாயுமாறு அம்பொன்று விடுத்தார். பன்றி தவம் செய்து கொண்டிருந்த அருச்சுனனைத் தேடியோடிச்சரண் புகுந்தது. அப்பன்றியைக் காக்க அருச்சுனன் தவத்திலிருந்து எழுந்தான்.

சிவனுக்கும் அவனுக்கும் போர் மூண்டது. அருச்சுனன் வில்லை ஒடித்தார் சிவபெருமான். அருச்சுனன் வெகுண்டான். தன் வில்லால் சிவனை அடித்தான். அப்பொழுது சராசரப் பொருள்கள் எல்லாவற்றிலும் அடிபட்டது, வேடமூர்த்தி அருச்சுனனிடம் மற்போர் புரிந்து அவனை மேலே எறிந்தார். பிராட்டி அருச்சுனனுக்கு கருணை புரியுமாறு வேண்டினாள். இடபாரூடராய்ப் பார்வதி சமேதராயச் சிவபெருமான்

அருச்சுனனுக்குக் காட்சி தந்தார். அருச்சுனன் இறைவனை வழிபட்டான், வரங்களும் பெற்றான். இறைவன் குறிப்பின்படி அருச்சுனன் தம் உடன் பிறந்தாருடன் பிரமகிரிக்குச் சென்று வாழ்ந்தான்.

இவன் பெண் பன்றியாக வந்தமையாலும், வராக முனிவர் பூசித்து முத்தி பெற்றமையாலும், யமன் பன்றி வடிவத்தில் அருச்சுனனுடன் அடைக்கலம் புகுந்ததாலும், மாயாத்திரி மலை வராகமலை என்று பெயர் பெற்றது.

6. வராககிரிச் சீவத்தான சருக்கம்

இச்சருக்கம் மால்விடையோனாகிய சிவபெருமான் வைகும் பல தானங்கள் வராக கிரியில் உள்ளமையைக் கூறும் பகுதியாகும்.

பூம்புரை என்ற தலத்தின் பெருமையும், சிவன் வைகும் ஐந்து தானங்களையும் அவற்றில் வீற்றிருக்கும் சிவலிங்கத்தையும் பூதங்கள் வழிபட்ட பாங்கையும் சூதமுனிவர் கூறுகிறார்.

தட்சிணகேதாரம் எனும் தலத்தின் சீர்மையையும், வராக மலையில் வசித்த வராக மிருதன் என்னும் இருடியின் மாண்பையும் சூதமுனிவர் தெரிவிக்கின்றார். அணிமா முதலிய சித்திகள் பெற்ற வராக மிருதன் என்ற இருடி விளங்கினார் என்று விவரிக்கும் பகுதி போகசித்தரை நினைக்குமாறு செய்கிறது. இவ் இருடி உலகங்கள் தோறும் சென்று, பல உயிர்களும் தம் வயப்பட்டு ஒழுகுமாறு நடந்தவர், புதுமைகள் பலவற்றைச் செய்தவர், தேவர்கள், இருடிகள் உள்ள வட கேதார பருப்பதத்திற்குச் சென்றவர். அந்தணர்களுடனும் முனிவர்களுடனும் வாழ்ந்தவர். இறைவன் திருக்கூத்தினைக் கண்டவர்.

வள்ளி மலைக்கண் நடந்த திருமணக்கோலத்தைக் கந்தப்பெருமான் முனிவர்க்குக் காட்டிய இடமாகிய மங்கலச்சிருங்கம் பற்றியும் கந்தவேள் தம் தந்தையார் பழனி மலைக்கு வந்த செய்தியும் இச்சருக்கத்தில் கூறப்படுகிறது.

7. நதியுற்பவித்த சருக்கம்

சிவபெருமான் ஆணைக்கிணங்க மூலப்பிரகிருதி என்னும் மாயை காமதேனுவின் உருவம் கொண்டு வராக மலையில் தவம் செய்தமை இச்சருக்கத்தில் கூறப்படுகிறது.

இறைவன் ஆணையை ஏற்றுப் பொதிய மலைக்கு வந்த அகத்தியர் பொருநையாற்றினைத் தோற்றுவித்தது. தாமிரபரணி, சித்திரநதி, வைகை, அம்பாநதி, மணிமுத்தாநதி, காவிரி போன்ற நதிகள், அவற்றின் கரைகளில் உள்ள சிவத்தலங்கள் பற்றியும், வராககிரியில் உள்ள சண்முகநதி திரிவேணி சங்கமம் ஆகியவை பற்றியும் இப்பகுதியில் அறியலாம். ஏழு பெண்கள் சிவனை வழிபட்ட திறன் பற்றியும் இச்சருக்கம் தெரிவிக்கிறது. வராகமலையின் வடக்கிலுள்ள கன்னிகாரவனத்தையும் அங்கு எழுந்தருளியுள்ள குய்யலிங்கத்தையும் இச்சருக்கத்தில் குறிப்பிடுகின்றார்.

8.கன்னிகார வனச்சருக்கம்

மாமறைப் பிழம்பென நிமிர்ந்தோங்கி நிற்கும் வெள்ளி மலையில் உள்ள இறைவனைத் தேவகுருவான வியாழபகவான் போற்றுவதும் தூலசூக்கும வடிவங்களாகத் திகழும் நீர்மையை விளக்குமாறு உமையம்மை இறைவனிடம் வேண்டுவதும், இச்சருக்கத்தில் தெரிவிக்கப்படுகின்றது. சுயம்புலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், காணலிங்கம், மானிடலிங்கம், நரலிங்கம் மயானலிங்கம் எனும் ஏழுவகை இலிங்கங்கள் பற்றி இச்சருக்கத்தில் விளக்கப்படுகிறது. சுயம்புலிங்கத்தைப் பூசிக்க விரும்பிய உமையன்னையின் வேண்டுகோளை ஏற்ற இறைவன் தாம் வைகும் கன்னிகாரவனத்திற்குச் சென்று வழிபடுக என்றார். படைப்பினைச் செய்யும் அயனின் செருக்கும், அதனை அடக்கிய திருமாலின் சிறப்பும் அவ்விருவரும் சிவனை வணங்கிய பாங்கும் வரம்பெற்ற செய்தியும் இச்சருக்கத்தில் தெரிவிக்கப்-படுகின்றன.

வழிபடும் திறன்களைக் கூறுமாறு உமையன்னை இறைவனை வேண்டினாள். தாமேபிரமம் என்று தருக்கி நின்ற தாருகவனத்து முனிவர் தம் செருக்கை பிட்சாடன மூர்த்தியாகத் தாம் சென்று முனிவர் தம் பத்தினிமார் காமவுணர்வில் விழுமாறு செய்தமையையும் திருமால் மோகினி உருவில் முனிவர்களைக் காமவுணர்வில் வீழ்த்தியமையையும் இறைவன் அன்னைக்கு மொழிந்தான். கிருதயுகத்தில் அயனும், அரியும் திரேதயுகத்தில் உமையன்னையும் துவாபரயுகத்தில் ஆதிசேடனும் கலியுகத்தில் கௌசலசேரனும் வழிபட்டு உயர்ந்தமை இச்சருக்கத்தில் தெரிவிக்கப்படுவதைக் காணலாம்.


அருள்மிகு சின்னக்குமாரர்

.

9. அக்கினிசேடர் அருச்சனைச் சருக்கம்

அக்கினித்தேவன் வரம்பெற்றது :

தக்கன் செய்த வேள்விக்குப் போயிருந்த தேவர்கள் முதலியோரைச் சிவபெருமான் தண்டித்த காலத்தில் அக்கினித்தேவன் தன் நாவும் கையும் இழந்து நாணி வள்ளிமலையை அடைந்தான். தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டுமென்று இறைவனை வேண்டினான். பின் இறைவன் ஆணைவழி கன்னிகாரவனத்தை அடைந்து நாற்பத்தைந்து தினம் பூசித்துத் தன் வலிய தீவினையிலிருந்தும் நீங்கினான்.

ஆதிசேடன் வரம்பெற்றது :

ஆதிசேடன் தன்னை எதிர்த்த வாயுதேவனிடம் தோற்று வெட்கமுற்றான். வருந்தித்தவம் செய்து இளைப்புற்றான். நாரதமுனிவர், தம் மகதி வீணையில் இசையை எழுப்பிச் சிவபெருமானது சாமகானங்களைப் பாடினார். அப்பாடல்களைக் கேட்டு ஆதிசேடன் மனமுருகினான். தவம் செய்வதன் காரணத்தைக் கேட்டார் நாரதர். வாயுதேவனை வெல்வதற்குத் தவம் செய்வதாகக் கூறினான் ஆதிசேடன். கன்னிகாரவனம் சென்று பெரிய நாயகனாகிய ஈசனைப் பூசிக்குமாறு கூறினார். நாராத முனிவர் ஆதிசேடன் அங்கு சென்று நாற்பத்தெட்டு நாள் இறைவனைப் பூசித்து வரம் பெற்றான். ‘‘எனக்கு அணியாகவும் வில்லின் நாணாகவும் அடைவாய்’’ என்று இறைவன் அருள்பாலித்தான் ‘‘வாயுவை உணவாகக் கொண்டு உண்பாயாக’’ என்றும் இறைவன் அருள் புரிந்தான்.

10. கௌசலசேரன் அருச்சனைச் சருக்கம்

அத்திகிரி என்னும் தொன்மையான ஊரில் கற்றவர்க்கு ஒருதுணை, கலிக்கு இருநிதிக் கடவுள், பகைவர்க்கு அரிமா, அடைந்தவர்க்கு அருட்கடல், என்று போற்றத்தக்க அங்குசத்துசன் என்ற அரசன் ஆண்டான். கௌசலன் என்னும் பண்பார்ந்த மகனிடம் அரசை அளித்துவிட்டுத் தவம் செய்திருந்தான். சின்னாள் சென்று பின் கௌசலராசன் சிவதலங்களைத் தரிசிக்க வேண்டும் என்று விரும்பி யாத்திரை மேற்கொண்டான்.

திருக்காளத்திமலை, திருக்கேதாரம், திருவண்ணாமலை, சோழநாட்டுத் தலங்கள், சேரநாட்டுத் தலங்கள் ஆகியவற்றிற்குச் சென்று இறைவனைத் தரிசித்தான்.

கொங்கு நாட்டிற்கு வந்த பொழுது ஒரு காட்டையடைந்தான். அங்கு கொடிய வேடர்களைக் கண்டான். பல்வேறுபட்ட கொடிய விலங்குகள் அக்காட்டில் இருந்தன. வேடுவர்கள் அவற்றை வேட்டையாடினர். அரசனது படையினர் அழகிய பொன்மான் ஒன்றினைக் கண்டனர். வியப்புடன் மன்னனிடம் அம்மானைப் பற்றித் தெரிவித்தனர். அவனும் சென்று அதனைக் கண்டு வியப்புற்று அதனைக் கவர்வதற்கு வில்லும் அம்பும் கொண்டு தொடர்ந்தான். அந்த மானோ கன்னிகார வனத்திற் புகுந்தது.அதனைத் தொடர்ந்து வந்த அரசனும் கன்னிகாரவனத்திற்கு வந்தான். மயக்கத்தைக் கொடுக்கும் மாயை ஒழிவது போன்று அவனுக்குத் தோன்றியது. வேடர்களையும் படை வீரர்களையும் தாகத்தைத் தணித்துக்கொள்ள நீர் கொணருமாறு கேட்டான். அவர்களும் கும்பத்தில் நீரைக்கொண்டு வந்தனர்.

சிவபெருமானைப் பூசித்தல்லாமல் தான் நீரும் அருந்துவது இல்லை என்றான் அரசன். மற்றவர்களை நீர் பருகுமாறு கூறினான். அந்த நாள் கழித்து மறுநாள் காலைப்பொழுதில் அரசன் அவ்வனம் விட்டுச் செல்ல மனம் வராமல் இவ்விடத்தில் கோயில் இருக்குமாயின் கண்டு வருக என்று பணித்தான். மூன்று நாள் கழித்த பின்பு ஓர் ஆதிசைவப் பிராமணர் சிவபெருமானுக்குப் புது மலர்களைக் கொய்வதைக் கண்டான். அரசன் தன்னைப் பற்றிய செய்திகளைக் கூறினான். அவ்வந்தணன் ஆற்றுப் படுத்த திருக்கோயில் சென்று இறைவனைத் துதித்தான். இறைவன் அவனுக்குக் காட்சி கொடுத்தனர். காமதேனு இவ்வனத்தில் இறைவனைப் பூசித்தமையால் இங்குள்ள தீர்த்தம் தேனு தீர்த்தமாயிற்று என்பதை அந்தணர் அரசனுக்குக் கூறினார்.

அத்தீர்த்தத்தில் கரையில் தவம் செய்தான் அரசன். கிழப்பிராமணப் பெண் வடிவங்கொண்டு தண்டினை ஊன்றிக்கொண்டு அரசன் முன் சென்று யாரை நினைத்துத் தவம் செய்கிறாய் என்று வினாவினாள் உமையன்னை. அவன் விடை கூறினான். நீ போற்றும் அன்னையும் தவம் செய்கிறாள். தற்பொழுது அவனைக் காண்டல் அரிது. அவனது திருமணக் கோலத்தைக் காண்பாயாக என்று அன்னை மறைந்தனள். திருமணங்காண மாதவம் செய்தான் மன்னன், நாரதர் உள்ளிட்ட முனிவர்கள் தேனுதீர்த்தத்திற்கு வந்தனர். கந்தப்பெருமான் தவம் செய்வதைக் கண்டு அதிசயத்தினர் சிங்கத்தின் முதுகில் உபநிடத ஆதனத்தில் ஒப்பற்ற பிரணவ வடிவத்தில் ஒளிரும் விமானத்தில் அருள் வடிவு கொண்டு கன்னிப் பருவத்தையுடைய உமாதேவி தோன்றுவதைக் கண்டார்கள். வணங்கி நின்றார்கள். தேவர்களால் துதிக்கப்படுகின்ற பெரியாவுடைய நாயகர் என்னும் இறைவன் தம்மை நோக்கி தவம் செய்த அனைவருக்கும் திருமணக்கோலக்காட்சி தரவிழைந்தார்.

11.திருமணச் சருக்கம்

பிரமதேவர் வேதவிதிப்படி திருமணச்சடங்கைச் செவ்விய அக்கினி கொண்டு செய்ய, அழகிய பூங்கொடி போன்ற உமாதேவியாரது சிவந்த திருக்கரமாகிய காந்தள் மலரையும், கொன்றை மாலையணிந்த மார்பினையுடைய சிவபெருமானது, சிறந்த பரந்த நீண்ட திருக்கரமாகிய தாமரை மலரையும் ஒன்று சேர்த்து திருமால் அழகிய மலர்களுடன் கூடிய தமது கையிலுள்ள நீரை வார்த்துத் தாமரை மலரனைய பாதங்களை வணங்கினார்.

தேவதுந்துபிகள் ஒலிக்க, வெள்ளிய சங்குகள் முழங்க நான்கு வேதங்களும் ஒலிக்க, தேவர்களும், முனிவர்களும் மலர்தூவி வணங்க திரிலோகமும் களிப்புக் கொண்டன.

திருமாலும், பிரமனும், நாரதமுனிவரும், சப்தமுனிவரும் கன்னியரும் தவத்தின் மிக்க கௌசலராசனும், தரிசித்து வணங்கும் படியாக திருமணக்கோலத்தில் பரமசிவனும், பராசக்தியும் காட்சி நல்கினர்.

12.நகர் செய் சருக்கம்

திருமணக்கோல தரிசனமும் வரமும் பெற்ற கௌசலசேர மன்னன், பெரியாவுடைய நாயகராகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற கன்னிகார வனத்தையும், உமாதேவியார் எழுந்தருளியிருக்கின்ற வில்வ வனத்தையும் மற்றைய இடங்களையும் சுவர்க்க லோகம் போல செய்து ஒரு சிவபுரத்தை உருவாக்கினான். கோதைமங்கலம் உள்ளிட்ட ஆட்ட மங்கல க்ஷேத்திரங்களையும் தாபித்து காசியை நிகர்த்த கௌசலமாபுரம் எனும் மாநகரினை உருவாக்கி சிவனருள் பெற்றான்.

13.திருவாவினன் குடிச் சருக்கம்

இளமைக் கோலத்தை வெறுக்காதவன், குற்றத்தை நீக்கிடும் கோவணத் தண்டினையுடையவன், சினங்கொண்டு அசுரர்புரங்களை அழித்தவன், விரித்த சோலைகளையுடைய நூறு ஊர்களை உடையவன், மோகம் நீங்கிய இடத்தில் இருப்பவன், மௌன நிலையாகிய ஞானமொழிகளையுடையவன், தேவகிரியின் தவத்தில் வாழ்பவன், கடற்கரை பொருந்திய திருச்செந்தூரில் வாழ்பவன் என்று கவிராயர் முருகனைப் போற்றுகிறார்.

''ஒருதரம் மகிழ்வுடன் திருவாவினன்குடி என்று சொன்னவர் முத்தியடைவர். இது உண்மை'' என்று திருவாவினன்குடியின் சிறப்பைக் குறிப்பிடுகின்றார்.

வராக மலையிலுள்ள மந்திர சிருங்கத்தின் உச்சியில் அங்கிருந்த சிவலோகத் தலைவர்களையடுத்து சிவபெருமானின் திருவடியை அடைதற்கான சாதனங்களைத் திருமால் ஆர்வத்துடன் கேட்டார். அப்பொழுது அங்கு வந்த பூமி தேவி, இலக்குமி தேவி, ஆகிய தம் துணைவியரை அவர் கவனிக்கவில்லை. ஒரு பாகவதர் தேவியர் தம் துன்பத்தை அறிந்து கொண்டார். ''சிவயோகத்தில் இருந்தபடியால் உங்களைத் திருமால் வெறுத்தார். அறியாமையால் இக்குற்றத்தைச் செய்த நீங்கள் இருவரும் சித்த தீர்த்தங்கரையிலும், நெல்லிவனத்திலும் தவம் செய்வீராக. திருமால் உங்களைச் சார்வார்'' என்றார் பாகவதர். இருதேவியரும் பாகவதர் மொழிந்தபடி தவம் செய்தனர். கிருதயுகச் செய்தியாகத் தேவியர் வழிபட்ட பாங்கினைக் கூறிய சூதமுனிவர் வசிட்டர் ஆணையைப் பெற்ற, காமதேனு கூவிள வனத்திற்கு வட திசையிலுள்ள தீர்த்தத்தில் தவம் செய்தமையையும் தெரிவிக்கின்றார். இலக்குமி, பூமிதேவி, காமதேனு தவஞ்செய்யும் இடத்தில் நாரதமுனிவர் மொழிகேட்டு, சூரியன் பிராமணனாகவிருந்து தம் அகங்காரத்தை நீக்குதற்குத் தவம் செய்த நிகழ்வையும் சூத முனிவர் இயம்புகின்றார். இவ்வாறு பெருமை மிக்கது திருவாவினன்குடி, ''மூவர் பெயராநிலை மூதூர்'' என்று பழனி போற்றப்படுகிறது தெரிவிக்கின்றார்.

நாரதர் நல்கிய மாதுளம் கனியை பெறுவதில் விநாயகருக்கும், முருகப்பெருமானுக்கும் போட்டி நிகழ்கின்றது. முருகப்பெருமான் தனக்குப் பழம் கிடைக்காத காரணத்தால் சினம் கொண்டு, திருஆவினன்குடிக்கு வந்து சேருகின்றார். முருகப்பெருமான் பிரிந்து சென்றது குறித்து மனம் வருந்தி அம்மையப்பர் திருஆவினன்குடிக்கு வருகின்றனர்.

இந்த அரிய காட்சியை...

ஈசனுருகி மடியினில் வைத்து என்றும் இளையோய் அறிவுடையை
தேசுதரும் வாணுதற் கண்மணி நீ சிறுவனோ பெரியை
வாசநறுமென் கனியுமொரு கனியோ, மதுரமொழி வாயால்
பேசஅரிய மறை ஞானப்பிள்ளை பழநீ யெனப் புகன்றார்.

என்று பழனித் தலபுராண ஆசிரியர் மொழிவது சுவைமிக்க ஒன்றாகும்.

தம்மைத் துதித்த குமரக்கடவுளிடம், *''யாது வரம் வேண்டும்''* என்று கேட்டார் சிவனார். இத்திருவாவினன் குடிக்கு வந்தார் யாவரும் குறையாமல் நற்கதியடைய வேண்டும். இவ்வரம் அருள்க என்றார் முருகப்பெருமான்,

''நீ எம்மை வழிபட்டுப் பூச்சொரிந்து அர்ச்சித்த பழமையாகிய இவ்வூரை அடைந்தோர் முத்தியைப் பெறுவர். மலத்தால் பந்திக்கப்பட்ட மிக்க கொடிய பாதகர் ஆயினும் உன்னை நினைத்தால் உடனே அவர்க்கு முத்தியைக் கொடுப்போம். இது உறுதி'' என்றார் சிவபெருமான்.

குழந்தை வேலாயுத சுவாமி தன் வேலாயுதத்தால் தோற்றுவித்த புனித சரவண தீர்த்தம், கார்த்திகை நோன்பின் பயன், பழனியின் பெருமை, பழம்நீ என்று அம்மையப்பர் அருள் நோக்கால் அழைத்த காரணத்தால் பழநி என்ற பெயர் இவ்வூருக்கு வந்தமை போன்ற செய்திகளும் இச்சருக்கத்தில் கூறப்படுகின்றன.

14. பிரமேந்திரச் சருக்கம்

முதலாவது யுகமாகிய கிருதயுகத்தில் மனம் குழைந்து பிரமேந்திரன் திருவாவினன்குடிக்குச் சென்று பூசித்த செய்தி இச்சருக்கத்தில் கூறப்படுகிறது.

15. நித்தியநாதச் சருக்கம்

திரேதாயுகத்தில் சிவபெருமானின் அருளைப் பெற்ற நித்தியநாத முனிவர் தமக்கு இனி வரவிருக்கும் பிறவியில் முத்தியுண்டாகும் என்று அறிந்து தவம் செய்தார். நளமகராசனுக்கு மகனாகப் பிறந்து, அரசாட்சி செய்தார். பின் உலக போகங்களிலிருந்து நீங்கி சிவபூஜை செய்தார். திருவாவினன்குடிக்குச் சென்றார் குமரவேள் ஞானாசிரியனாகத் தோன்றி இவருக்குக் காட்சி கொடுத்ததுடன் சிவயோகம் பற்றிக்கூறி, ஞானோபதேசம் தந்தருளினார்.

16. சுவணகுத்தச் சருக்கம்

கோங்கவனத்தைச் சேர்ந்த யோகாரணியம் எனும் பதியில் வாழ்ந்த பொன் வைசியனான சுவணகுத்தன் முத்தி பெற்ற வரலாற்றைக் கூறுவது இச்சருக்கம்.

பிள்ளைப் பேற்றிற்காக வணிகனும் அவன் மனைவியும் திருமாலையும் இலக்குமியையும், துதித்தனர். காட்சி தந்த திருமால் ''உமக்குப் பிள்ளைப் பேறு இல்லை'' என்றார். ''அவசியம் வழங்க வேண்டும்'' என்று இருவரும் வற்புறுத்தியமைக்காகத் தம் கையில் இருந்த சங்கினை மகவாகப் பிறக்குமாறு கட்டளை இட்டார் திருமால். சங்கு அவர்கட்குப் பிள்ளையாகப் பிறந்தது. ஆனால் ஐந்தாண்டுக்குப் பின் மீண்டும் சங்காக மாறி மறைந்தது. இருவரும் வருவது கண்டு குழந்தைவேலன் அவர்கட்குக் காட்சியளித்துத் தடுத்தாட் கொண்டான்.

17. வசுமந்தச் சருக்கம்

பழனியில் சிவனடியார்கட்குப் பணி செய்த வேளாள குலத்தினனான வசுமந்தன் வரலாறு இச்சருக்கத்தில் கூறப்படுகிறது.

தனது செவியை வாயாகக் கொண்டு கந்தவேளின் கதையமுதுண்டவன். குமரக்கடவுள் நேரில் தோன்றி, ''வசுமந்தா இங்கே வா. இலக்குமி, காமதேனு, சூரியன், தேவர்கள் தவம் செய்து முத்தி பெற்ற தலமிது. யாவரும் வணங்குக, வருக, உயர்க, என்று இவனிடம் கூறினார் என்ற செய்தி இச்சருக்கத்தில் குறிக்கப்படுகிறது. முருகனின் தோற்றப் பொலிவைப் புராண ஆசிரியர் வருணிக்கும் பாடல்கள் நிறைந்த சருக்கம் இது. மேலும் வராக மலையை நோக்கியருளிய முருகன் ஆறு நதிகளைத் தோன்றச் செய்தமையும், வசுமந்தனின் முற்பிறப்பும் இச்சருக்கத்தில் கூறப்படுகின்றன.

18. சண்முகநதிச் சருக்கம்

கந்தவேள் அருளால் சண்முகநதி தோன்றியமை, இதன் கரையில் தவம் செய்வோர் சீவன் முத்தராவர் என்ற செய்தி, ஆறுபடை வீடுகள் பற்றிய விளக்கம் துவாத சாந்தத்தலம் எனக் கதிர்காமம் குறிக்கப்படும் செய்தி, திருவாவினன்குடியில் சிவகிரியின் மேல் குமரவேள் சோதி வடிவில் திகழும் பாங்கு இச்சருக்கத்தில் திறம்பட மொழியப்படுகின்றன.

19. சிவகிரி சத்திகிரிச் சருக்கம்

இச்சருக்கத்தில் கந்தப் பெருமானின் வரலாற்றை நயம்பட நவில்கின்றார் கவிராயர்.

''பூமியை எப்படிப் படைக்கிறாய்?'' எனக் கேட்டார் முருகவேள். ''வேதத்தின் செவ்விய வழியில் செய்கிறேன்'' என்று விடைபகர்ந்தான் பிரம்மன்.

''ஓம்'' என்பதன் பொருளைக் கூறுமாறு முருகன் பிரமனிடம் கேட்டதும் பதில் சொல்ல முடியாமல் அவன் தயங்கியதும், சீற்றமுள்ள செவ்வேள் அவனது தலைகளில் குட்டி விலங்கிட்டுத் தாமே படைப்புத் தொழிலை மேற்கொண்டதும் சிவன் வேண்டியதால் அவனை விடுவித்ததும் இச்சருக்கத்தில் விவரிக்கப்படுகின்றன.

20. மலைகள் பழனியடைந்த சருக்கம்

சிவகிரி சக்திகிரி ஆகிய இரண்டு மலைகளும் பழனி மலைக்கு வந்து சேர்ந்த வரலாற்றை இச்சருக்கத்தில் காணலாம். இம்மலைகளின் சிறப்பை இடும்பனுக்கு அகத்தியர் தெரிவிக்கும் பகுதி இதில் உள்ளது. அசுரர்குரு இடும்பன் வரலாற்றைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது இச்சருக்கம்.

குமரவேளிடம் தோற்று மடிந்தான் சூரபன்மன். இந்நிகழ்ச்சியால் மனம் வருந்திய இடும்பன் தன் மனைவியுடன் பொதியமலைச்சாரலை அடைந்தான். ஆங்குத் தவம் புரிந்து கொண்டிருந்த அகத்திய முனிவரை அணுகி அடைக்கலம் வேண்டினான். வடதிசையிலுள்ள பூர்ச்சவனத்தையடைந்து தேவர்கள் துதிக்கின்ற சக்தியும் சிவமும் பொருந்திய பெரிய மலைச்சிகரங்கள் இரண்டையும் இங்குக் கொண்டு வருவாயாகில் இம்மை மறுமையில் சொல்லப்பட்ட போகம், முக்தி என்பன உனக்கு வரும் என்றார் அம்முனிவர். அவ்விரண்டு மலைகளின் பெருமையை அவனுக்குக் கூறினார். தாம் அவற்றை எடுத்து வந்ததையும், பின்பு பூர்ச்சவனத்தில் விட்டு வந்ததையும் தெரிவித்தார். இடும்பன் அவர் ஆணையை ஏற்றுப் பிரமதண்டினைக் காவு தடியாகவும் பாம்புகளைக் கயிறாகவும் கொண்டு அம்மலைகளை எடுத்துக்கொண்டு பொதியம் நோக்கி வந்தான். புட்பமலைக்கு அவன் வந்த பொழுது அரசகுமாரன் வடிவில் வேலன், இவன் முன்வந்து, ''இங்கு வந்தது யாது?'' எனக் கேட்டான். அகத்தியன் ஆணையை இடும்பன் கூற, வராகமலை வழியாகப் பொதிய மலையை அடையலாம் என்று இடும்பனை ஆற்றுப்படுத்தினான் அழகன் குமரன். வராகமலையின் பகுதியில் இருந்த புனிதத்தலமான திருவாவினன் குடியை அடைந்தான் இடும்பன்.

மிகவும் சோர்வடைந்த இடும்பன் மலைகளினது சுமையை நிலத்தில் இறக்கி வைத்தான். இடும்பியினால் தரப்பெற்ற உணவை உண்டான். அம்மலைகட்கு அருகில் இருந்த நிலத்தைத் தோண்டி நீரைப்பெற்று அருந்தினான். பின்பு மலைகளை மேலெடுத்தான். அப்பொழுது அவற்றை அவனால் எடுக்க முடியவில்லை. மனம் வருந்தினான். காரணமறிய சுற்றிலும் பார்த்தான். சிவகிரியின் ஒரு பக்கத்தில் குராமரத்தின் கீழே சிறிய குழந்தை நிற்பதைக் கண்டான்.

பிடர்பிடந்த புன்குஞ்சியும் பெரிய கருணைக்
கடலலம்பு கண்களும் கவினொழுகிய முகமும்
வடிவுநூலு மார்பும் கையொண்கோலும் வயங்க
நெடிய கோவணவுடையுடன் நின்றது கண்டான்

- என்கிறார் தலபுராண ஆசிரியர்.

இக்காட்சியைக் கண்ட இடும்பன் மனம் உருகி நின்றான். குழந்தையாய் வந்த குமரனின் மாயையிற் சிமிழ்ப்புற்ற இடும்பன், அகத்தியமுனிவர் இட்ட கட்டளைக்கு இடையூறு ஏற்பட்டதை உணர்ந்து சினம் கொண்டான். குழந்தை வேலனைப் பார்த்து, ''நீ யாவன்? வழி தவறி வந்துவிட்டாயா? தனித்து நிற்பதற்கு ஏன்?'' என்று கேட்டான்.

''அசுரனே இம்மலைகள் எனது இருப்பிடமாகும். ஆற்றல் இருந்தால் இவற்றை எடுத்துச் செல்'' என்றான் குகன்.

''அகத்தியன் அடிமை நான்! என்னிடமிருந்து நீ தப்பி விடுவாயோ?'' என்று மொழிந்தான் இடும்பன். குமரவேள் மீது பாய்ந்தான். இருவருக்கும் இடையே நடந்த பூசலில் இடும்பன் சாய்ந்தான். அப்பொழுது பாம்புகளும் பிரமதண்டமும் எழுந்து சென்றன. அகத்திய முனிவனிடம் சென்று நடந்த செய்தியைக் கூறின. வீழ்ந்து கிடந்த தன் கணவன் இடும்பனைக் கண்டு இடும்பி மனம் பதைத்தாள். எதிரே கந்தவேளைக் கண்டாள்.

''சைவாகமத் தெளிவே! தடுத்தாள வந்தனையோ?'' எனக் குமரனைப் பார்த்து வினவினாள் இடும்பி, ''நானும் உன் அடிமையே. தாலிப்பிச்சை கொடுப்பாயாக'' என வேண்டினாள். கந்தன் கருணையால் இடும்பன் உயிர் பெற்றெழுந்தான். ஞானநெறியையடைந்து இன்பம் பெற்றான். முருகனைத் துதித்தான். மலையிலிருந்து கொண்டு முருகனுக்குக் குற்றேவல் செய்யும் வரத்தினைப் பெற்றான். அகத்தியரிடம் சென்று நடந்ததைக் கூறினான். அவர் கந்தனைப் பூசித்து பின்பு இடும்பனைச் சிவகிரிக்கு அனுப்பினார். இடும்பனும் அங்குப் பணிசெய்து இருந்தான்.

21. அகத்தியச் சருக்கம்

அகத்தியரின் சிறப்பைக் காட்டுவதே இச்சருக்கத்தின் உள்ளடக்கம் எனலாம். வாமதேவ முனிவரும் நாரத முனிவரும் வனத்திற்கு வந்த அகத்தியரை வரவேற்றனர். நாரதர் அகத்தியரை மிகவும் போற்றினார். பின்பு மறைந்தருளினார். வாமதேவரும் பிற முனிவரும் அகத்தியர் மிகச் சிறந்தவர் என்பதை ஏற்கத் தயங்கினர். ''சரசுவதியே தலைவி அவளே முத்தியைத் தருவாள்'' என்றார் வியாச முனிவர்.

அகத்தியர் வியாசர் கூறியதை மறுத்தார். ''நான் சொன்ன நூல்களை அறிந்து தான் நீ உயர்ந்தாய்'' என வியாசர் கூறியதைக் கேட்ட அகத்தியர் மௌனங்கொண்டு கோபத்துடன் சென்று விட்டார். மற்றவர் யாதும் கூறாமல் இருந்தனர்.

சிவகிரியில் தவமிருந்தார் அகத்தியர். தம்முன் தோன்றிய சிவனிடத்து நடந்ததைக் கூறினார். சிவனார் மொழியை ஏற்றுத் துர்க்காபுரி சென்றார். நகுலேசன் எனும் பெயருடன் விளங்கிய ஈசனை வணங்கினார். ஆதிகேசம் எனும் தலத்தில் பராசரலிங்கத்தைத் தியானித்திருந்தார். பின்னர் சிவனார் ஆணைப்படி சிவகிரிக்குச் சென்றார். தியானத்திலிருந்த அவர் முன் ஞானவடிவுடன் கந்தக் கடவுள் காட்சி தந்தார். அகத்தியர் பக்தியுடன் குகனை வணங்கினார். இனிய தமிழின் பாகுபாட்டினை அகத்தியருக்குக் கந்தவேள் விளக்கிக் கூறினார். அகத்தியரை வாமதேவரும் வியாசரும், மற்ற முனிவரும் போற்றினர்.

22. தீர்த்தச் சருக்கம்

சக்திகிரி சிவகிரி மலைகளிலுள்ள தீர்த்த மகிமைகளைக் கூறுவதாக இச்சருக்கம் உள்ளது. சூசிமுக தீர்த்தம், தேவ தீர்த்தம், அமுத தீர்த்தம், ஞான தீர்த்தம், பிரம தீர்த்தம், புண்ணிய தீர்த்தம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

பிரம தீர்த்தத்தின் சிறப்பைக் கதைகள் வாயிலாக விவரிப்பது நயமுடைத்து.

23. சேரர்கோன் சருக்கம்

கந்தக் கடவுளின் திருவருளைப் போற்றி மகிழ்ந்து சேரராசன் செய்த திருப்பணியை விவரிப்பது இச்சருக்கம்.

சிவபூசை செய்யும் ஆர்வம் உடையவன் சேரமன்னன், தனது படைகளுடன் தன் நாட்டின் கீழ்த்திசைக்கு வந்தான். தில்லையில் நடராசப் பெருமானை வழிபட்டான். சோழ நாட்டின் பழமையான தலங்களுக்கும் பாண்டிய நாட்டுத் தலங்களுக்கும் சென்று ஈசனை வணங்கினான். பின்னர் பழனித் தலத்திற்கு வந்தான். அங்கிருந்த அங்கிரா முனிவர். அத்திரி முனிவர் வாமதேவ முனிவர் ஆகியோர் பழனியின் வரலாற்றைப் பெருமையை அம்மன்னனுக்கு விவரித்து உரைத்தனர்.

சக்திமலை பராசக்தி வடிவமாகும் என்ற அங்கிரா முனிவர். ''சிவகிரி என்பது பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் பஞ்ச மூர்த்திகளுடன் நாதமும், சொல்லற்கரிய சக்தி வடிவமும் சிவ வடிவமும், இலயிக்கின்ற இடமும், வேறுபாடற்ற மந்திர வடிவும், ஒளி வடிவும், குரு வடிவும் ஆகிய பன்னிரண்டாகத் திகழும் சிறப்புடைய மலையாகும்.'' என்று சேர மன்னனிடம் கூறினார்.

சிவகிரிச் சாரலுக்குச் சென்று அன்புடன் வழிபட்ட சேரமன்னனுக்குப் பழனியாண்டவன் காட்சி தந்தார். மன்னன் மால்மருகனை வணங்கி மகிழ்ந்தான். அப்பொழுது மயன் என்னும் தேவதச்சன் அங்கு வந்தான். அவனைக் கண்டு மகிழ்ந்த சேரமன்னன் கந்தக் கடவுளுக்கு ஆலயம் கட்டுமாறு கூறினான். அழகான ஆலயத்தை அமைத்தான் மயன்.

சேரர்கோன் இயற்றுமாதவச் செழுந்திரட்சியோ
வாரணத்தின் அந்தமோ எம் அண்ணல் அன்பர் சிந்தையோ
தாரகத்தின் உட்பொருள் தயங்கி ஓங்கு குடிலையின்
பூரணத்ததோ மயன்புனைந்து தந்த கோயிலே

என்று குமாரவேள் கோயில் திகழ்ந்தது என்று போற்றுகிறார் பழனித்தலபுராண ஆசிரியர் பாலசுப்பிரமணியக் கவிராயர்.

பண்டை மாமறைக்குள் நின்ற பரிசினைக் காட்டி நின்றான். பரமனின் மைந்தனாம் செவ்வேள். விண்ணவரும் மண்ணவரும் குகனைத் துதித்து நின்றனர். சேரமன்னன் பேரானந்தம் உற்றான். போற்றிப் பரவினான். பின்பு மூவேந்தரும் வராக மலை, மற்றும் பூம்புரை முதலிய பிற தலங்களுக்குச் சென்று பரமனை வழிபட்டுப் பின்பு பழனிமலைக்கு வந்து சேர்ந்தனர். அதன்பின் தங்கள் நாட்டிற்குத் திரும்பினர்.

பழனிமலையில் வீற்றிருந்தருளும் பழனியாண்டவரின் அருட்திருநோக்கத்தை,

போற்றினோர்க்கும் பூசைதான் புரிந்துளோர்க்கும் பொங்குசீர்
சாற்றினோர்க்கும் ஆறெழுத்து அகம்தரித்துள்ளோர்க்கும் வெண்
நீற்றினோர்க்கும் நெஞ்சுளே நினைந்துளோர்க்கும் நீபனோன்பு
ஆற்றினோர்க்கும் நோக்குஅருள் சுரந்து அளிக்கும்....

எனும்படியாக, துதித்தவர்களுக்கும், பூஜை செய்தவர்களுக்கும், மிகச்சிறப்பினை எடுத்துச்சொன்னவர்க்கும், சடக்கரமந்திரத்தை மனத்தின்கண் நிறுத்தித் தியானித்தவர்களுக்கும் வெள்ளிய திருநீற்றை தரித்தவர்களுக்குந் திருநோக்கம் செய்து அருள்பாளிக்கின்றார். மேலும் பழனித் தலபுராணத்தை ஓதுவோர்க்கும் அதனைக் கேட்போர்க்கும் இகபர சௌபாக்கியம் அருளி இறைபேரின்பத்தை வழங்குகின்றார் பழனியாண்டவர். இவ்வாறு பாலசுப்பிரமணியக் கவிராயர் பழனித்தல புராணத்தைச் சூத முனிவர் நைமிசாரணிய முனிவர் கட்குக் கூறும் பாங்கில் படைத்துள்ளார்.

குக நன்னெறி காட்டும் வகையில் அமைந்துள்ள இப்புராணம் சொல்நயம், பொருள்நயம் நிறைந்த படைப்பாக விளங்குகிறது. பக்திச்சுவை நிறைந்த தத்துவ விளக்கங்களை கொண்டு திகழும் இந்நூல் முருகவேள் அன்பர்களுக்கு ஓர் அரிய விருந்தாகத் திகழ்கின்றது.

"நல்லனபுரி வைகாவூர் நாடு சீர் நாளும் வாழ்க
செல்வி மாதவம்கூர் கன்னிகாரமும் திருந்தி வாழ்க
பல்கலை தெரியும் தானம் பயிலும் மூதறிஞர் வாழ்க
மல்லலம் பழநி மூதூர் வாழ்க பல்வளஞ் சிறந்தே"!

12. ''பழம் நீ'' - விளக்கம்

கூறுடை யாளுங் குன்றாக் குணப்பெருங் குன்றும் ஞானப்
பேறுடைப் பழநீ யென்னப் பெயரது மருளி யெங்க
ளாறுமா முகவன் வைகும் நகரமு மன்று தொட்டு
வீறுதொல் பழநீ யென்றே விளம்பின வுலக மூன்றும்!

- பழனித்தல புராணம்

இந்நிலவுலகத்திலே மக்கட் பிறப்புடையவுயிர்களுக்கு இறைவன் பலவகையான இன்பங்களையும் கூட்டு விக்கிறார். அங்ஙணம் கூட்டு வித்த இன்பம் நிலைத்தற் பொருட்டும், மேலும் மேலும் இன்பம் பெருகும் பொருட்டும், அவர் செய்த நன்றிக்கு அறிகுறியாகவும் நாம் அவ்விறைவனைத் திருக்கோயிலிலே சென்று வழிபட்டு வருகிறோம். அங்ஙனமே, தேவர்களும் முனிவர்களும் நீண்ட வாழ்நாளும், நிலைத்த இன்பமும் பெறவேண்டி அப்பெருமானைத் திருக்கயிலையிலே சென்று நாள் தோறும் வணங்குவர். ''வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மன நின்பால் தாழ்த்துவதும், தரமுயர்ந்து தம்மையெல்லாம் தொழவேண்டித்'' தொடுத்த மலரொடு தூபமும் சாந்தும் கொண்டு எப்பொழுதும் அடுத்து வணங்குவர்.

அங்ஙணமே, ஒரு நாள் இறைவனை நோக்கிச் சென்று வணங்கும்பொருட்டு நாரதர் கயிலை செல்லக் கருதினர். பெரியோர்கள் முன்னும்-குரு-குழந்தைகள் முன்னும், திருக்கோயிலுக்குச் செல்லும் போதும், ஏதேனும் அன்பின் கையுறையாக ஒன்று எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்ற வழக்காற்றின்படி எதனைக் கொண்டு செல்லலாம் என்று ஆராய்ந்தனர். இறைவன் இன்பத்திற்கு நிலைக்களமாயுள்ளவன் என்பதனையும், ''வேண்டுதல் வேண்டாமை'' இல்லாதவரும், என்றும் மகிழ்ச்சியுடைய வருமான அவருக்குத்தான் ஒன்றைக் கொடுத்து மகிழ்விக்க முடியாது என்பதனையும் உணர்ந்தார்.

---

* 'சைவ சித்தாந்த சரபம்' சிவத்திரு ஈசான சிவாச்சாரியார்

நாம் விரும்பும் இம்மை நலங்கள் பலவற்றையும், முத்தியாகிய ஒரு சிறந்த பலனையும் வேண்டி அதற்காக எல்லாப் பலன்களையும், எல்லா நலன்களையும் கூட்டுவிக்கும் இறைவனுக்கு, புரைகள் தோறும் கனியும் தீஞ்சுவைமிக்க நல்ல மாதுளம் பழம் ஒன்றைக் கொண்டு போகக் கருதினார். இறைவன் அடியார்களுக்குச் செய்யும் பெருங்கருணைத் திறத்தை நினைந்து அவருடைய உள்ளத்தே புரை, புரை கனியுமாறு போல புரை புரையாகக் கனியும் கனி அதுவேயன்றோ? அதனால் நாரதர் அத்துணைச் சிறந்த மாதுளம்பழம் ஒன்றை எடுத்துக் கொண்டு கயிலைக்குச் சென்று இறைவன் முன் வைத்து வணங்கினார்.

அப்போது உமாதேவியாரும் இடரைக்களையும் எந்தையராகிய விநாயகப் பெருமானும் தமது அடியார்களுக்கு இன்பத்தைச் செய்பவராகிய முருகப் பெருமானும் அங்கே இருந்தனர். அதனைப் பெறுதலில் விருப்பமுடைய இரு குமாரர்களும் அந்த நல்ல மாதுளம் கனியில் தமது கருத்தைச் செலுத்தினர். அந்தத் தீஞ்சுவைக் கனியமுதைத் தமது குமாரர்கள் என்ற ஒரே காரணம் பற்றிச் சிவபெருமான் அவர்களுக்கு வழங்கவில்லை. திருக்கயிலாயத்திலே விநாயகப் பெருமானையும், முருகப்-பெருமானையும் எங்ஙனம் சிவபெருமான் நடத்துகின்றாரோ அதுவன்றோ வழிகாட்டியாகும்? ஆனது பற்றி இறைவன் குழந்தையைப் பெற்ற தாய் தந்தையர்களுக்கும் இன்பத்தில் விருப்பமுடையவர்களுக்கும் ஒரு வழிகாட்ட வேண்டி, அந்த மாதுளம்பழத்தைக் கையில் எடுத்துக் கொண்டு " எனது இனிய மைந்தர்களே! இந்தப்பழம் நம்மிடத்தே பேரன்பு வைத்துள்ள நாரதர் கொண்டு வந்ததென்பதனைக் கருவினால் நீங்கள் இருவரும் அறிவீர்கள். இது பதனை பலத்தால் ஒன்றேயாயினும் புரைதோறும் இனிக்கும் பலவிதைகளுடையது அம்மட்டோ! அடியார்கள் நம்மீது வைத்த அன்பின் விளைவானது. ஆனதால் இதற்குள்ள சுவை மற்ற மாதுளம் பழத்திற்கு உள்ளது போலன்று.

எனக்கு நீங்கள் எப்படி இனியரோ அதுபோலவே அன்பின் விளைவான கனியும் மிக இனியது. அந்த இன்பத்தை நீங்கள் எளிதில் அடைவீர்களானால் அந்தச்சுவை தோன்றாது. மிக நல்ல உயர்ந்த பொருளைப் பெரிது முயன்றே அடையவேண்டும். அப்போதுதான் அதன் அருமைப்பாடு புலனாகும்.

''போனகம் என்பதுதான் உழந்து உண்டலே'' அன்றோ? உழைப்பில்லாது வந்த பொருளுக்குக் கௌரவமேது? தந்தையிடத்திலுள்ள பொருளேயாயினும் தந்தை விதித்த அறவழியிலே நின்று நல்ல தொண்டுகளைச் செய்து அதனை அனுபவித்தாலன்றி அதனால் ஏதேனும் ஒரு நன்மை உண்டாகுமா? அது அறிவுமன்று இளைஞர்களுக்கு அழகு மன்று. ஆண்மை மிக்க செயலுமன்று ஆனதால் உங்களுக்குள் ஒரு நொடியில் யார் இவ்வுலகை வலம் வருகிறார்களோ, அவர்களுக்கே இந்தப்பழம் உரியது'' என்றார்.

அங்ஙனம் அருளிச் செய்தவுடனேயே அது கேட்ட இளையவரும் வெற்றியின் மிக்க வீரரும். தீவிரமான முயற்சியுடையாருமாகிய முருகப் பெருமான் சும்மா இருப்பாரா? உடனே தான் மயிலின் மீது ஆரோகணித்து ஒரு நொடியில் உலகத்தை வரும் வருவார் ஆயினார்.

அப்போது அறிவான் மூத்த பிள்ளையாராகிய விநாயகப் பெருமான், இறைவனே உலகெலாமாயிருப்பதை உணர்ந்தார். அவரை வலம் வருதலே உலகத்தை வலம்வருதல் எனக்கருதி இறைவனை வலம் வந்தார். **''நீரே உலகெலமாயிருக்கின்றீர்; உம்மையன்று உலகமில்லை; உம்மை வலம் வந்ததே உலகை வலம் வந்ததாகும்''** என்று வணங்கி நின்றனர். அதனை உணர்ந்து மகிழ்ந்த பெருமான் மாதுளம் பழத்தை அவருக்கு அளித்தருளினர். அவர் அதனைப் பெற்றுக் கொண்டனர்.

வலம் வரச்சென்ற முருகப்பெருமான் விநாயகப் பெருமானது கரத்தே கனியிருப்பதைக் கண்டு, அதனைத் தனக்குத் தரவில்லையென்று கோபித்தருள்பவர் போன்று கயிலையினின்றும் நீங்கி இந்தத் தென்னாட்டிலே திருவாவினன்குடி என்னும் திருத்தலத்தின் ஞானநன் மலை மீது வீற்றிருந்து அருளினார்.

உலகத்திலே மக்கள் ஒருவரையொருவர் கோபித்துக் கொள்வது இயல்பு. முருகப்பெருமானும், சிவபெருமானும் வேறல்லர் சாமானியமாக, முனிவர்களே காமத்தையும், கோபத்தையும் கோபிப்பவர்கள். அதனால் முனிவர்கள் எனப்படுவர். அத்துணை தேவர்க்கும் முனிவர்க்கும் அரியராகிய சிவபெருமானின் வேறல்லாத முருகப்பெருமானுக்குக் கிடைக்காத பொருள் ஒன்று உண்டா? அதுபற்றி அவருக்குக் கோபம் விளைவது உண்டா ?

அப்படியிருக்க. அவருக்கு மாதுளம் பழம் கிடைக்காமையால் கோபம் விளையுமென்றால் அது கோபமாகுமா? இந்தச் செயலினால் நமக்கு விளைந்த தொரு அருளுபதேசமே ஆகுமல்லவா? அது தான் என்ன? அங்ஙனம் அருட்கோபத்தின் தத்துவத்தை நமக்குப் புலப்படுத்துவார் போன்று கயிலையினின்றும் தமது அருமைக் குழந்தையை நாடி ஞான நன் மலைமீதேறி அம்மையும் அப்பனும் அருள் வழங்குகின்றார்கள்.

உலகத்திலுள்ள மக்கள், எந்தச் செயலையும் எண்ணிய எண்ணியாங்கே எய்த மாட்டாமைக்கு ஏதுவான இடர்பாடுகள் நீங்கக் கருதி ''இடரைக்களையும் எந்தாய்'' என்று மூத்த பிள்ளையாகிய விநாயகரைப் போற்றுவார். வீரத்தை வேண்டி வீரபத்திரரையும், துர்க்கையையும், வணங்குவர்; கல்வியை வேண்டிக் கலைமகளைப் போற்றுவர்; செல்வத்தை நாடினோர் திருமகளைத் துதிப்பர்; ஆற்றல் (சக்தியை) வேண்டினோர் ஈறில் பரம்பொருளாம் இன்ப உருவினரான சிவபெருமானையே நோக்கிக் கடுந்தவம் புரிந்து கதியடைவர். இஃது எளிதிலே வாய்ப்பதொன்றாகுமா? ''பல்லூழி காலம் பயின்றானையர்ச் சிக்கில், நல்லறிவு சற்றேநகும்''. ''எண்ணிலியூழி தவம் செய்தங்கீசனை, யுண்ணிலைமை பெற்ற துணர்வு'' என்பன பிரமாணமானதால் இத்துணைக் கால நீட்டிப்பும் அருமையும் கருதி, மேலே குறித்த ''கல்வி, செல்வம், வெற்றி, சக்தி, பலவகை சித்திமுக்தி முதலிய எல்லாப் பேற்றையும் மக்களுக்கு மிக எளியராய் இனியராய் வழங்குபவரும், பாருக்குள்ளே கலியுகத்திலே கண்கண்ட பரம தெய்வமாய் மேலே காட்டிய எல்லா தெய்வ வடிவினராய் விளங்குபவரும் நமது கந்தநாதனே'' என்பதை நமக்கெல்லாம் புலப்படுத்தி நம்மை உய்விக்குமாறு முருகப்பெருமானை நோக்கி அம்மை அப்பரிருவரும்

'நீயே சிவஞானப்பழம்; உனக்கு வேறு பழம் வேண்டுமோ; பழத்தின் சுவை போல உயிர்களிடத்தே பிரிவற நிற்பவன் நீயே அல்லவா? அடியார்களுக்குக் கந்தக்கனி நீயே யாவாய், ஆதலால் பழம் நீ'' என்று திருவாய் மலர்ந்தருளி எல்லோரும் உய்தி பெறுவதற்கு உறுதுணையாக முருகப்பெருமானை நோக்கிப் பல நன்மொழிகளை அருளி உலகத்திற்கு உண்மையுணர்த்தினர்.

இதனால், இறைவன் செய்த நன்றியைக் குறித்து நாம் திருக்கோயிலிலே சென்று வணங்க வேண்டும் என்பதும், தேவர்களும் அங்ஙனமே வணங்குவார்கள் என்பதும், வணங்கும்போது தமது முயற்சியினால் தேடிய நல்ல பொருள்களை இறைவனுக்கு அன்பின் கையுறையாக வைத்து வணங்க வேண்டுமென்பதும், அரிய பெரிய முயற்சியுடையார்க்கே சிறந்த இன்பம் வாய்க்குமென்பதும், பொன்னும் பொருளும் போகமும் திருவும் இன்பமும் வேண்டி முருகப்பெருமானை நோக்கியே வழிபாடு செய்து எல்லா நலன்களையும் பெற்று இன்பவாழ்வு பெறுதல் வேண்டும் என்பதும் உணர்த்தப்பட்டன.

வள்ளி திருமண விளக்கம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாயத் தவத்தினில் உணர்த்திவிட்டு
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே

- சிவஞானபோதம்

என்னும் எட்டாம் சூத்திரத்திற் கூறியவாறு உயிர் தன்னியல்பு அறியாது கருவிகளின் இயல்பே தன்னியல்பென மயங்கி உணர்வற்றுக் கிடக்கும் பொழுது இறைவன் தோன்றி உணர்வினை நல்கி, உபதேசித்துத் தன்னோடு இரண்டறச் சேர்த்துக் கொள்ளுவான் என்பதே இதன் தத்துவமாம்.

பராசக்தியாகிய வள்ளி நாயகி தினைப்புனம் காப்பது :

உயிர் தன்னியல் பறியாது. வேடர்சேரியில் வளரும் இராசகுமாரனைப் போலக்கருவிகளால் மயங்கி நிற்கும் என்பதனைக் குறிக்கின்றது. இறைவன் வேடனாய் வந்ததும், வேங்கை மரமானதும் மயங்கிக் கிடக்கும் உயிரினது இயல்பை இறைவனே எழுந்தருளி உணர்த்துகின்றான் என்பதை விளக்குகின்றன. வேடனாய் வந்து அஞ்ஞானத்தினைப் போக்கியும், ஞான உணர்ச்சிக்குரிய அவாவினை எழுப்பியும் அடி முதல் மறைகளாகவும், நடுப்பாகம் சிவ நூல்களாகவும் கிளைகளனைத்தும் கலைகளாகவும் உடைய வேங்கைமரத் தோற்றத்தால் ஞானத்தினை நல்கியும் அருள் செய்கின்றான் என்க.

முருகன் கிழவனாய்த் தோன்றியது : இறைவன் உயிர்களுக்குக் குருவாகவும் எழுந்தருளித் தீட்சை செய்து மலத்தினை அகற்றுவான் என்பதை உணர்த்துகின்றது.


அருள்மிகு பெரியநாயகி அம்மன் - உற்சவர்

முருகன் யானையை வரவழைத்தது : இறைவனே குருவாய்த் தோன்றி உபதேசம் செய்வான் என்பதை உணர்த்தும் யானை, இறைவனது ஓங்காரப் பிரணவ சொரூபமாகும்.

யானையைக் கண்ட வள்ளிநாயகி முருகனைப் பற்றிக் கொண்டது : தன் சிறப்பியல்பு உணர்ந்து உபதேசம் பெற்ற உயிர் கருவிகளை நீக்கிச் சிவத்தை நாடிச் சென்றடையும் என்பதை உணர்த்துகின்றது.

வள்ளி முருகனது தேவியானது : இறைவனை உணர்ந்து அவனது அன்பிற்குப் பாத்திரமான உயிர் அவனோடு இரண்டறக் கலக்கும் என்பதை உணர்த்தும்.

சஷ்டி விழாவாகிய சூரசங்காரத்தின் தத்துவம்

உலகம் உய்யும் பொருட்டுக் கந்தவேள் செய்த பல அற்புதக் காரியங்களில் சூரசங்காரமும் ஒன்று. அதைக் கந்தபுராணத்தில் விவரித்தபடி கந்தர்சஷ்டி விழாவாகக் கொண்டாடுவதே முறையாகும்.

உற்சவ தத்துவமும் கொண்டாடும் முறையும்

கந்தர் சஷ்டி உற்சவ தத்துவப் பொருள் : கந்தர் சஷ்டி நோன்பு நோற்பவர் தவநெறியாளர்; தத்துவத்துக்கு இலட்சியம் பேரின்பம்; இன்பமாகடல் சிவம்; அவர் பேராற்றல் உடையவர்; அவர் இரக்கமே திருமேனியாக உடையவர்; அதுவே அருள்; அருளே சக்தி; அந்த அருள் எல்லாப் பக்குவான்மாக்களுக்கும் பெருங்கேடு சூழும் மும்மலங்களை நீக்கும் வண்ணம் ஞானத்தை நல்குவதே நமது ஞான தண்டாயுதபாணிக்கு உமா தேவியார் சூரசங்காரத்தின் பொருட்டு வேலாயுதத்தைத் தந்தருளிய குறிப்பாகும்.

தாரகன் வதை

மாயாமலத்தை நீக்கியதாகும். கிரவுஞ்சகிரியைப் பிளந்தது சஞ்சிதத்தை நீக்கியதாகும். பானுகோபன் முதலியோரைக் கொன்றது மோகம் முதலியவைகளை அழித்ததாகும். சிங்கமுகனைச் சங்கரித்தது கன்மமலத்தை அழித்ததாகும்.

சூரபத்மன் வதை

சங்காரம் என்பது மனவலியை ஒடுக்குதல், சூரபன்மனை வதைத்தது உயிர்களுக்கு நேரும் எவ்வகைப்பட்ட துன்பங்களுக்கும் காரணமாகிய ஆணவ மலத்தின் வலி கெடுத்ததாகும். சூரபத்மன் சக்கிரவாளப் பறவையாகிப் பூதகணங்களை வருத்தினான். முருகப்பெருமான் இந்திரனாகிய மயில் மேலேறி அதை வெட்டினார். சூரபத்மனுக்கு முருகப் பெருமான் காட்சி தந்தார்; அவன் கண்டு பேரானந்தம் அடைந்தான். பின்பு அவன் பழைய வாசனை தலைப்பட முன்போல் போருக்கு வந்தான். மாமரமாகி நின்றான். முருகப் பெருமான் விட்டவேல், அதனை இருகூறாகப் பிளந்தது, அவ்விருகூரும் மயிலும் சேவலுமாகி வந்தன. முருகப்பெருமான் மயிலை வாகனமாகக் கொண்டருளினார். சேவலைக் கொடியாகக் கொண்டருளினார்.

கொடிய சூரனும் தவத்தினால் முருகப் பெருமான் திருவருளுக்கு உரியன் ஆனான் என்றால் அந்தப் பெருமானுடைய திருவடிகளையே தஞ்சம் என்று வணங்குவோர்க்கு அவர் அருள் சுரப்பார் என்பது கூறவும் வேண்டுமோ?

அவர் சூரனாதியோர் பொருட்டுப் போருக்கு நவவீரர்களோடும் பூதகணங்களோடும் மட்டும் சென்றருளினார். இரண்டு தேவிமார்களோடு செல்லவில்லையென்பதனையும், மாலைக்காலத்திலேயே சூரன் முதலியோரைச் சங்கரித்து இந்திர விமானம் ஏறித்திருச்செந்தூருக்கு எழுந்தருளிப் பின்பு தான் இந்திரன் வேண்ட திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளித்தெய்வானை அம்மையாரைத் திருமணம் புரிந்து பின்பு வள்ளியம்மை யாரையும் திருமணம் செய்து அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத சண்முகப் பெருமானாக எல்லோர்க்கும் காட்சி தந்து இன்றும் என்றும் பக்தர்களுக்கு அருள்புரிகின்றார். இத்தத்துவங்களை உணர்ந்து, இதில் கூறப்பட்ட உற்சவ வரம்பை அனுசரித்து உற்சவத்தை நடத்திக் கந்தபுராண வரம்பைப் பாதுகாத்து இன்புறுக. அன்பர்களும் இந்த உண்மையை உணர்ந்து இன்ப வாழ்வு பெற்று வாழ்க.

பழனியில் கந்தர் சஷ்டி விழா

மலைக்கோயிலில் அருள்மிகு மலைக்கொழுந்து அம்மனுக்கு வெள்ளைப்புடவை சாத்தி, வெள்ளை அரளி முதலிய வெண்ணிறமுள்ள மலர்களால் சாத்துப்படி செய்து பராசக்தி வேலை அருள்மிகு சின்னக்குமாரருக்கு மலைக்கொழுந்தம்மனால் அனுக்கிரகித்தல், பராசக்தி வேலைப்பெற்று அருள்மிகு சின்னக்குமரர் தங்கமயில் வாகனத்தில் புறப்பாடாகி மாலை பாதவிநாயகர் கோயிலுக்கு வந்து சேர்ந்து ஊர்க்கோயிலிருந்து வரும் பெரிய தங்கமயில் வாகனத்தில் புறப்பாடாகி கிரிவீதி வலம் வந்து சூரசங்காரம் செய்தல்.

வடக்குக் கிரிவீதியில்	தாரகா சூரசங்காரம்
கிழக்குக் கிரிவீதியில்	பானுகோபன் சூரசங்காரம்
தெற்குக் கிரிவீதியில்	சிங்கமுகன் சூரசங்காரம்
மேற்குக் கிரிவீதியில்	சூரபத்மன் வதம்

அருள்மிகு வீரபாகுவும் வீரர்களும் :

மலையிலுள்ள அருள்மிகு வீரபாகுதேவர் வெள்ளி ஆட்டுக்கடா வாகனத்தில் மலையிலிருந்து புறப்பாடாகியும், மற்ற வீரர்களும் நான்கு பேர்களுக்கும் ஒரு கேடயத்தில் வைத்துப் புறப்பாடாகியும், சின்னக் குமாரருடன் மலையிலிருந்து வந்து சூரசங்காரத்தில் கலந்து கொள்ளுதல்.

ஊர்க்கோயிலிலிருந்து அருள்மிகு விநாயகர் வெள்ளி மூசிகவாகனத்திலும், அருள்மிகு முத்துக்குமாரசுவாமி வள்ளி தெய்வானை சமேதராய், கிருத்திகை வெள்ளி மயிலிலும் புறப்பாடாகி மாலை பாதவிநாயகர் கோயில் வந்தடைதல். அருள்மிகு சின்னக்குமரரால் சூரசங்காரம் நடத்தப்பெற்று முடியும் வரை அருள்மிகு முத்துக்குமாரசுவாமி மீனாட்சி அம்மன் மண்டபத்தில் எழுந்தருளுதல். அருள்மிகு திருவாவினன்குடி திருக்கோயிலுக்கு எழுந்தருளி காட்சிதந்து பின்.

சங்காரம் முடிந்தவுடன் அருள்மிகு சின்னக்குமாரர் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி இருவருக்கும் தீபாராதனை நடந்து, தர்மகர்த்தாக்கள் முதலியவர்களுக்கு வழக்கப்படி பரிவட்ட மரியாதை செய்தபின் மேற்படி இரண்டு சுவாமிகளும் ஆரியர் மண்டபம் சென்று மண்டகப்படி நடைபெறுதல். மண்டகப்படி முடிந்தவுடன் அருள்மிகு சின்னக்குமாரர், அருள்மிகு வீரபாகு தேவருடனும் மற்ற வீரர்களுடனும் மலைக்குச் செல்லுதல். அருள்மிகு முத்துக்குமாரசுவாமி வள்ளி தெய்வானை சமேதராய் புட்ப அலங்காரம் செய்யப்பட்ட இந்திர விமானத்தில் வெள்ளி மயிலில் (மயிலாக மாறிய சூரபத்மன்) புறப்பாடாகிய அருள்மிகு விநாயகருடன் வழக்கம் போல் ஊர்க்கோயில் ரதவீதிகள் வலம் வந்து யதாத்தானம் அடைதல்.

13. சார்புக் கோயில்கள்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுடன் இணைந்த துணைக்கோயில்களின் விபரப்பட்டியல்

முதன்மைத் திருக்கோயில்	– 01
உபகோயில்கள்	– 38
மொத்தம்	– 39

வ. கோயில் விபரம் இடம்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மலைக்கோயில், பழநி.

மலைக்கோயிலைச் சுற்றியுள்ள திருக்கோயில்கள் :

அருள்மிகு...

1. மலைக்கொழுந்து சிவன் திருச்சன்னதி
2. மலைக்கொழுந்து அம்மன் திருச்சன்னதி
3. புவனேஸ்வரி அம்மன் திருச்சன்னதி (போகர் திருச்சன்னதி)
4. இடும்பன் திருக்கோயில்
5. வைகாபுரித்துரை விநாயகர் திருச்சன்னதி
6. வள்ளியம்மன் திருச்சன்னதி
7. பாதவிநாயகர் திருச்சன்னதி
8. 18 ஆம் படி கன்னிமார் திருச்சன்னதி
9. நின்ற விநாயகர் திருச்சன்னதி
10. அருணகிரிநாதர் திருச்சன்னதி
11. நக்கீரர் திருச்சன்னதி
12. வலம்புரி விநாயகர் திருச்சன்னதி
13. நவவீரர்கள் (கம்பி அமைப்பில்) திருச்சன்னதி
14. கைலாசநாதர் திருச்சன்னதி

படிகளில் நிழல் மண்டபங்களில் உள்ள சிறிய விநாயகர் திருக்கோயில்கள்

		அருள்மிகு...
1.	வெங்கிசாமி நாயுடு மண்டபம்	விநாயகர் திருச்சன்னதி
2.	பழனிச்சாமி செட்டியார் மண்டபம்	விநாயகர் திருச்சன்னதி
3.	வி.வி.சி.ஆர். மண்டபம்	விநாயகர் திருச்சன்னதி
4.	முத்துச்சாமி மண்டபம் - 1	விநாயகர் திருச்சன்னதி
5.	முத்துச்சாமி மண்டபம் - 2	விநாயகர் திருச்சன்னதி
6.	சிவசுப்பிரமணியசுவாமி மண்டபம்	விநாயகர் திருச்சன்னதி
7.	இராமலிங்க நாயுடு மண்டபம்	விநாயகர் திருச்சன்னதி
8.	சுவாமிநாதபிள்ளை மண்டபம்	விநாயகர் திருச்சன்னதி

வ.	சார்புக் கோயில்களின் விபரம்	இடம்

அருள்மிகு...

1. பெரியநாயகிஅம்மன் திருக்கோயில்(ஊர்க்கோயில்),பழனி நகர்
2. குழந்தை வேலாயுதசுவாமி திருக்கோயில், திருஆவினன்குடி அடிவாரம், பழனி.
3. பெரியாவுடையார் (பிரகதீஸ்வரர்) திருக்கோயில், கோதைமங்கலம், பழனி.
4. கோதீஸ்வரர் திருக்கோயில், கோதைமங்கலம், பழனி.
5. லட்சுமிநாராயணப் பெருமாள் திருக்கோயில், மேற்கு ரதவீதி, பழனிநகர்.
6. மாரியம்மன் திருக்கோயில், கிழக்கு ரதவீதி, பழனிநகர்.
7. வேணுகோபாலசுவாமி திருக்கோயில், காந்தி சாலை, பழனி நகர்.
8. பட்டத்து விநாயகர் திருக்கோயில், காந்திசாலை, பழனி நகர்.
9. அகோபிலவரதராஜப்பெருமாள் திருக்கோயில், பாலசமுத்திரம்.
10. குறிஞ்சியாண்டவர் திருக்கோயில், கொடைக்கானல்.
11. குழந்தைவேலப்பர் திருக்கோயில், பூம்பாறை, கொடைக்கானல்.
12. குழந்தைவேலப்பர் திருக்கோயில், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல்.
13. காமாட்சியம்மன் திருக்கோயில், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல்.
14. வாகீஸ்வரர் திருக்கோயில், கீரனூர், பழனி.
15. அழகிய சொக்கநாதப் பெருமாள் திருக்கோயில், கீரனூர், பழனி.
16. சோழீஸ்வரர் திருக்கோயில், ஆயக்குடி, பழனி.

சுற்றுக்கோயில்கள் :

அருள்மிகு...

1. சனீஸ்வரபகவான் திருக்கோயில், திருஆவினன்குடி
2. அண்ணாமலைஈஸ்வரர் & உண்ணாமலையம்மன் திருக்கோயில், திருஆவினன்குடி.
3. மீனாட்சியம்மன் சுந்தரரேஸ்வரர் திருக்கோயில், திருஆவினன்குடி.
4. குராவடிவேலர் திருக்கோயில், மலைப்படிக்கட்டில் - இடும்பன் கோவிலுக்கு அருகில்.
5. வீரதுர்க்கையம்மன் திருக்கோயில், வடக்கு கிரிவீதி.
6. வனதுர்க்கையம்மன் திருக்கோயில், தெற்கு கிரிவீதி.
7. மகிஷாசுரமர்த்தனியம்மன் திருக்கோயில், மேற்கு கிரிவீதி.
8. அழகு நாச்சியம்மன் திருக்கோயில், கிழக்கு கிரிவீதி.

9. அழகு நாச்சியம்மன் திருக்கோயில்,
சின்னநாயக்கன் குளக்கரை குபாரசமுத்திரம், பழனி.
10. அழகு நாச்சியம்மன் திருக்கோயில், கோதைமங்கலம்.
11. உஜ்ஜனீமாகாளியம்மன் திருக்கோயில், கோதைமங்கலம்.
12. அங்காள பரமேஸ்வரியம்மன், திருஆவினன்குடி கோயில் சன்னிதி அருகில், பழனி.
13. வேளீஸ்வரர் திருக்கோயில், சன்னதி வீதி அடிவாரம், பழனி.
14. மீனாட்சியம்மன் திருக்கோயில், சன்னதி வீதி அடிவாரம், பழனி.
15. கலிங்கப்பாறை சுப்பிரமணியர் திருக்கோயில்,
இடும்பன்மலைக்கு முன்புறமுள்ளது, பழனி.
16. மாரத்தியம்மன் திருக்கோயில், வடக்கு கிரிவீதி, பழனி.
17. பிரம்மதீர்த்த விநாயகர், பிரதோசாஸ்வரர், வடக்கு கிரிவீதி (சிறுகுடில்கள் வளாகம்)
18. தலைவலி தீர்க்கும் வலம்புரிவிநாயகர்,கிழக்கு கிரிவீதி, பழனி.
19. சின்ன விநாயகர் திருக்கோயில்,அழகுநாச்சியம்மன்கோவில் அருகில்.
20. நின்றவிநாயகர்(தென்கயிலையங்கிரி), தெற்கு கிரிவீதி அடிவாரம்.
21. விநாயகர் திருக்கோயில், மேற்கு கிரிவீதி, பழனி.
22. இராக்காலமடம் விநாயகர் திருக்கோயில், மேற்கு கிரிவீதி, பழனி.
23. சிவசக்தி விநாயகர் திருக்கோயில்,
(தலைமை அலுவலகம்) வடக்கு கிரிவீதி, பழனி.
24. தூர்நாச்சியம்மன் திருக்கோயில் சண்முகநதி
சின்ன ஆற்றங்கரை, பழனி.
25. சண்முகநவக்கிரக சுவாமி திருக்கோயில்,
சண்முக நதிக்கரை, பழனி.
26. சரவணப்பொய்கை விநாயகர் திருககோயில்,
சரவணப்பொய்கை தீர்த்தக்குளம், பழனி
27. பாளையம் விநாயகர் திருக்கோயில், பாளையம், பழனி.
28. பாதிரி விநாயகர் திருக்கோயில்,
வையாபுரி கண்மாய் தெற்குக்கரையில், பழனி.
29. அபரஞ்சி விநாயகர் திருக்கோயில், மேற்குரதவீதி, பழனி.
30. உத்திரவிநாயகர் திருக்கோயில், நடேசர் சன்னதிவீதி, பழனி.
31. கோசாலவிநாயகர் திருககோயில், நடேசர் சன்னதிவீதி, பழனி.
32. அய்யம்புள்ளி விநாயகர் திருக்கோயில், பாலசமுத்திரம்.

14. திருப்பணி மற்றும் திருக்குடமுழுக்கு விவரம்

திருக்கோயில்கள்	குடமுழுக்கு நடைபெற்ற நாள்
I. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி	03.04.06
1. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கிழக்கு ரதவீதி, பழனி	22.10.10
2. அருள்மிகு குழந்தைவேலாயுதசுவாமி திருக்கோயில், பூம்பாறை	04.06.14
3. அருள்மிகு பெரியாவுடையார் திருக்கோயில், கோதைமங்கலம்	22.05.15
4. வனதுர்க்கையம்மன் திருக்கோயில், தெற்கு கிரிவீதி, பழனி	11.04.16
5. அருள்மிகு அகோபிலவரதராஜ பெருமாள் கோயில், பாலசமுத்திரம்	12.02.96
6. அருள்மிகு வேளீஸ்வரர் திருக்கோயில், அடிவாரம் பழனி	07.09.14
7. அருள்மிகு பட்டத்து விநாயகர் கோயில், பழனி	12.02.96
8. அருள்மிகு உத்திர விநாயகர் கோயில், பழனி	02.04.17
9. அருள்மிகு கோசாலா விநாயகர் திருக்கோயில், பழனி	02.04.17
10. அருள்மிகு பெரியநாயகியம்மன் திருக்கோயில், பழனி	01.07.98
11. அருள்மிகு குழந்தை வேலாயுதசுவாமி திருக்கோயில், திருஆவினன்குடி	07.09.14
12. அருள்மிகு குறிஞ்சியாண்டவர் கோயில், கொடைக்கானல்	22.04.99
13. அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில், ஒட்டன்சத்திரம்	23.06.99
14. அருள்மிகு கோ தீஸ்வரர் திருக்கோயில், கோதைமங்கலம்	11.07.16
15. அருள்மிகு அபரஞ்சி திருக்கோயில், கிரிவீதி	02.04.17
16. அருள்மிகு லெட்சுமி நாராயண பெருமாள் திருக்கோயில், மேற்கு ரதவீதி	11.11.12
17. அருள்மிகு வேனுகோபால் பெருமாள் திருக்கோயில், பழனி	11.11.12
18. அருள்மிகு நின்ற விநாயகர் திருக்கோயில், கிரிவீதி	04.04.16
19. அருள்மிகு சின்ன விநாயகர் திருக்கோயில், கிரிவீதி	29.10.99
20. அருள்மிகு தலைவலி தீர்க்கும் விநாயகர் திருக்கோயில், கிரிவீதி	04.04.16
21. அருள்மிகு துர்க்கையம்மன் திருக்கோயில், மேற்கு கிரிவீதி	04.04.16
22. அருள்மிகு இராக்கால மடம் விநாயகர் திருக்கோயில்	04.04.16
23. அருள்மிகு சரவணப்பொய்கை விநாயகர் திருக்கோயில்	29.10.99
24. அருள்மிகு வீரதுர்க்கையம்மன் கோயில், வடக்கு கிரிவீதி	29.10.99
25. அருள்மிகு அழகுநாச்சியம்மன் திருக்கோயில், கிரிவீதி	29.10.99
26. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், கிரிவீதி	29.10.99
27. அருள்மிகு பாதவிநாயகர் திருக்கோயில்,(வையாபுரி குளக்கரை)	12.12.99
28. அருள்மிகு இடும்பன் கோயில், இடும்பன் மலை	10.02.00
29. அருள்மிகு பாதவிநாயகர், கிரிவீதி	05.07.00
30. அருள்மிகு காமாட்சியம்மன் ஆலயம், ஒட்டன்சத்திரம்	03.09.00
31. அருள்மிகு உஜ்ஜயினி மாகாளியம்மன் ஆலயம், காமராசபுரம்	11.07.16
32. அருள்மிகு அய்யம்புள்ளி விநாயகர் திருக்கோயில், பாலசமுத்திரம்	15.12.06
33. அருள்மிகு பாளையம் விநாயகர் கோயில், பாளையம்	15.12.06
34. அருள்மிகு வாகீஸ்வரசுவாமி திருக்கோயில், கீரனூர்	
35. அருள்மிகு அழகிய சொக்கநாதப்பெருமாள் திருக்கோயில், கீரனூர்	
36. அருள்மிகு சோளீஸ்வரர் ஆலயம், பழைய ஆயக்குடி	
37. அருள்மிகு நவகிரககோயில், சண்முகநதி	
38. அருள்மிகு துர்நாச்சியம்மன் திருக்கோயில், வரதமாநதி	

15. பக்தர்களுக்குப் பயனுள்ள சில செய்திகள்

மலைக்கோயில் திறந்திருக்கும் நேரம்

மலைக்கோயில் சந்நிதி சாதாரண நாட்களில் **காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை** திறந்திருக்கும்.

கிருத்திகை மற்றும் முக்கிய திருவிழா நாட்களில் **காலை 4 மணி முதல் இரவு இராக்காலம் பூஜை முடியும் வரை** திறந்திருக்கும்.

வழிபாட்டுக்குத் தனித்தனி வரிசை

எவ்விதக் கட்டணமின்றி வழிபாடு செய்ய ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே க்யூ வரிசை அமைக்கப்பட்டுள்ளது.

தங்கரதம்

தங்கரதத்தில் சுவாமி புறப்பாடு நடத்த வேண்டுமென்று கோருவோர் மலைக்கோயிலிலாவது தலைமை அலுவலகத்திலாவது **ரூ.2000/-** செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். அதுபோலத் தங்கமயில் வாகனப் புறப்பாட்டிற்கு ரூ.1,000/- கட்ட வேண்டும். வெளியூரிலிருந்தே பதிவு செய்து கொள்ள விரும்புவோர். **நிர்வாக அதிகாரி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.** என்ற முகவரிக்கு பாங்க் டிராப்ட் வாங்கி உரிய விவரத்தை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். **சூரசம்ஹாரம், நவராத்திரி (10 நாட்கள்), தீபகார்த்திகை, தைப்பூசம், பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் தங்கரதத்தில் சுவாமி புறப்பாடு இல்லை.**

பிரார்த்தனைத் தங்கத் தொட்டில்

ஒசூரைச் சேர்ந்த *Arul Group of Companies* நிறுவனத்தின் தலைவர் திரு. வை.வஜ்ரவேல் என்பவரால் 06-02-2011 ம் நாளன்று இத்திருக்கோயிலுக்கு உபயமாக வழங்கப்பட்டது. இத்தங்கத்தொட்டில் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடனும். உறுதியான கட்டமைப்புடனும் வடிவமைக்கப்பட்டுள்ள இப்பிரார்த்தனைத் தங்கத் தொட்டிலில் 8 கிலோ தங்கம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தங்களது பிரார்த்தனைகளை நிறைவேற்றும் பெற்றோர்கள் 2 வயதிற்குட்பட்ட தங்கள் குழந்தைகளை ரூ.300/- காணிக்கையாகச் செலுத்தி இத்தங்கத் தொட்டிலில் இட்டு மகிழ்கின்றனர்.

அன்னதானம்

தமிழக அரசின் நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் கூடிய அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடை அளிக்க வேண்டுகோள்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ''நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் கூடிய அன்னதானத் திட்டம்'' இத்திருக்கோயிலில் 23.3.2002 நாள் முதல் தொடங்கப்பட்டு சீரும் சிறப்புடனும், அனைவரும் பாராட்டும் வகையிலும் நடைபெற்று வருகின்றது.

இதற்கென இத்திருக்கோயிலின் மலைக்கோயிலில் அன்னதான உண்டியல் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த அன்னதானத் திட்டத்திற்குப் பெறப்படும் நன்கொடைகள்/ உபயங்கள் அனைத்தும் இத்திட்டத்திற்கெனப் பேணப்பட்டு வரும் தனிக்கணக்கில் சேர்க்கப்பட்டு, இத்திட்டத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த அன்னதானத்திட்டத்தில் பங்கேற்கும் வகையில் நன்கொடை வழங்க விரும்பும் ஆன்மீகப் பெருமக்கள் / பக்தர்கள், நன்கொடையாளர்கள் ஆகிய அனைவரும் இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்திலோ அல்லது மலைக்கோயில் அலுவலகத்திலோ ரொக்கமாகச் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம். மலைக்கோயிலில் உள்ள அன்னதான உண்டியலிலும் பக்தர்கள் தங்கள் காணிக்கையை நேரடியாகச் செலுத்தலாம்.

மேலும் இத்திட்டத்திற்கு காசோலை / வங்கி வரைவோலை / மணியார்டர் மூலம் நன்கொடை செலுத்த விரும்புபவர்கள்

இணை ஆணையர்/ செயல் அலுவலர்,
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழனி – 624 601.

- என்ற பதவிப் பெயரில் காசோலை / வங்கி வரைவோலை / மணியார்டர்களில் குறிப்பிட்டு அனுப்பக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

அன்னதானத்திட்டத்தில் பங்கேற்கவிரும்பும் பக்தர்கள் தங்களால் முடிந்த தொகைகளை எவ்வளவு வேண்டுமானாலும் நன்கொடையாக அளிக்கலாம். இத்திட்டத்திற்குச் செலுத்தப்படும் நன்கொடைத் தொகைகளுக்கு வருமான வரிவிலக்குப் பெறும் வசதியும் உள்ளது. கலியுகத்தில் தானதருமம் செய்வதே ஆண்டவனை அடையச் சிறந்த வழியாகும். தானத்தில் சிறந்தது அன்னதானம் என்றும் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்று கூறுவர். அடியார்களுக்கு அன்னம் வழங்குதல் ஆண்டவனுக்கு அமுது படைத்தலாகும்.

ஆகவே தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள மிக உன்னதமான திட்டமாகிய "நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் கூடிய அன்னதானத் திட்டத்திற்கு" பக்தர்கள் அனைவரும் பெருவாரியான தொகைகளை நன்கொடையாக அளித்து, இத்திட்டம் சீரும், சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற ஆதரவு நல்குமாறும், அதன் மூலம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

<u>வங்கி வரைவோலை அனுப்ப வேண்டிய முகவரி</u>

இணை ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழனி – 624 601,
திண்டுக்கல் மாவட்டம்.

Joint Commissioner / Executive Officer,
Arulmigu Dhandayuthapani Swamy Thirukoil,
Palani - 624 601,
Dindigul District.

Website : www.palanimurugantemple.tnhrce.in
E-mail : palanimurugan@tnhrce.org

10. நாள் முழுவதும் அன்னதானக் கட்டளை

ரூ. 27,500.00

இத்திருக்கோயில் ஆணையர் ந.க. எண். 60663/2016 சி3 13.2.2017 முதல் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி மலைக்கோயிலில் தினசரி உச்சிக்கால பூஜைக்குப் பிறகு திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களில் ஆரம்ப கட்டமாக 200 நபர்களுக்கு உணவளிக்கவும், அதற்காக தினசரி அன்னதானக் கட்டளை ஏற்படுத்தவும் தீர்மானித்துள்ளதற்கு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் உத்திரவு எண். மூ.மு.101683/97 இசட் 3 / நாள் : 3.2.1998-ல் இதற்கு அனுமதியும், திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி தினசரி ரூ.2,500/ செலவில் 100 பக்தர்களுக்கு உணவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது.

தொகை முழுவதும் பக்தர்களிடம் நன்கொடையாக வசூல் செய்து, பக்தர்களுக்குப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளதால் இத்திருக்கோயிலின் பக்தர்கள் மற்றும் அன்னதானத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் ரூ.27,500 நன்கொடை வழங்கினால் மேற்படி தொகையை வங்கியில் முதலீடு செய்து, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து கட்டளைதாரர் விரும்பும் நாளில், விரும்பும் நபரின் பெயரில், ஆயுள், முழுவதும் நிரந்தரமாக இக்கட்டளை நடத்தப்படும்.

இந்தத் திட்டத்தில் சேர விருப்பம் உள்ளவர்கள் முதலீட்டிற்காக ரூ.25,000 மற்றும் முதல் ஆண்டு செலவிற்காக ரூ.2,500 ஆக கூடுதல் ரூ.27,500க்கு "இணை ஆணையர் / செயல் அலுவலர். அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி. என்ற பெயரில் வங்கி வரைவோலை எடுத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நீத்தார் / பெற்றோர் நினைவு தினம், மணநாள், பிறந்தநாள் போன்று அவரவர் விரும்பும் நாளில் அன்னதானம் செய்யலாம். பெருமளவில் நிதியுதவி, பக்தர்களின் பசிப்பிணி நீக்கும் இத்திட்டத்தில் சேர்ந்து அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் திருவருள் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அறுசுவை உணவு : மலைக்கோயிலில் நாள்தோறும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை தொடர்ந்து, பக்தர்களுக்கு அறுசுவை உணவுடன் கூடிய அன்னதானம் அளிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அன்னதான உணவை பழனியாண்டவரின் அருட்பிரசாதகமாகக் கருதி அருந்தி வருகிறார்கள். இது தவிர அருள்மிகு திருஆவினன்குடி திருக்கோயிலிலும், அருள்மிகு பெரியநாயகி அம்மன் திருக்கோயிலிலும் நண்பகல் 12.00 மணிக்கு பக்தர்களுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில் செய்தி மற்றும் விற்பனை நிலையங்கள்

வெளியூர்களிலிருந்து பழநிக்கு வருகிற யாத்திரிகர்களின் வசதிக்காகத் திருக்கோயிலின் செய்தி மற்றும் விற்பனை நிலையங்கள் ஐந்து உள்ளன. மலைக்கோயில், மின் இழுவை இரயில்நிலையம், கிரிவீதி, மத்திய பேருந்து நிலையம் மற்றும் புகைவண்டி நிலையம் ஆகிய இடங்களிலில் உள்ள திருக்கோயில் தகவல் நிலையங்களில் பக்தர்கள் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை தங்களுக்குத் தேவையான செய்திகளை விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இங்கு பஞ்சாமிர்தம், பன்னீர், திருக்கோயில் வெளியீடுகள், ஒளிப்படங்கள், ஆகியன விற்பனை செய்யப்படுகின்றன, திருக்கோயில் சார்பில் நடத்தப்பெறுகிற அன்பில்லத்திற்கு அன்பளிப்புகள் கொடுக்க விரும்புகிறவர்கள் மேற்கண்ட இடங்களில் தங்கள் அன்பளிப்புகளைக் கொடுத்து உரிய பற்றுச்சீட்டைப் (Receipt) பெற்றுக் கொள்ளலாம்.

போலிப்பண்டாரங்களிடம் தொடர்பு கொள்ளாதீர்கள்

பக்தர்கள் தாங்களே நேரில் மலைக்கோயில் அலுவலகத்தில் சென்று அர்ச்சனைச் சீட்டு அபிஷேகச் சீட்டு, அனுமதிக்கட்டணச் சீட்டு ஆகியவற்றை வாங்கிக் கொள்ள வேண்டுகிறோம். அர்ச்சனை செய்து கொடுக்கிறேன், அபிஷேகம் செய்து கொடுக்கிறேன் என்று சொல்லுகிறவர்களையும், நாங்கள் பூசாரி, பண்டாரம் என்று சொல்லுகிறவர்களையும் தயவு செய்து நம்பாதீர்கள்.

பூசை, அபிஷேகத்திற்குரிய பொருள்களை வெளி நபர்களிடம் கொடுக்காதீர்கள்.

16. மலைக்கோயில் பூஜைக் கட்டணங்கள் அபிஷேகங்கள் - அர்ச்சனைகள்

வழிபாடு பூஜை நேரங்கள்				வழிபாட்டுக் கட்டணங்கள்	
நெ	வழிபாடு அனுமதி விபரம்	சாதாரண நாட்களில்	விசேஷ நாட்களில்	சாதாரண நாட்களில் ரூ.பை.	விசேஷ நாட்களில் ரூ.பை
1	இலவச அனுமதி	காலை 6 முதல் இரவு 7.30 வரை	காலை 4 முதல் இராக்காலம் வரை		
2	சிறப்பு அனுமதி	காலை 6 முதல் இரவு 7.30 வரை	காலை 4 முதல் இராக்காலம் வரை	10.00	10.00
3	விளா பூஜை	காலை 6.50	காலை 4.30	150.00	300.00
4	சிறுகால சந்தி	காலை 8.00	காலை 8.00	150.00	300.00
5	கால சந்தி	காலை 9.00	காலை 9.00	150.00	300.00
6	உச்சிக்காலம்	பகல் 12.00	பகல் 12.00	150.00	300.00
7	சாயரட்சை (ராஜ அலங்காரம்)	மாலை 5.30	மாலை 5.30	150.00	300.00
8	இராக்காலம்	இரவு 8.00		150.00	300.00
9	பால் அபிஷேகம் மட்டும்	காலை 7.30 முதல்	மாலை 4.30 வரை	25.00	25.00
10	பஞ்சாமிர்த அபிஷேகம் (பால் அபிஷேம் உட்பட)	காலை 7.30 முதல்	மாலை 4.30 வரை	25.00	25.00
11	அஷ்டோத்திரம் அர்ச்சனை	காலை 7.30 முதல்	இரவு 7.30 வரை	25.00	25.00
13	சகஸ்ரநாமம்	காலை 7.30 முதல்	இரவு 7.30 வரை	5.00	5.00

14	போகர் அஷ்டோத்திரம்	காலை 7.30 முதல்	இரவு 7.30 வரை	0.50	0.50
15	தீர்த்தக் காவடி 1க்கு	காலை 7.30 முதல்	இரவு 7.30 வரை	5.00	5.00
16	காவடி 1க்கு	காலை 7.30 முதல்	இரவு 7.30 வரை	2.00	2.00
17	காது குத்த நபர் 1க்கு (ஆசாரி கூலி உட்பட)			2.00	2.00
18	பள்ளியறை தீப்பந்தம்	இரவு 8.30		5.00	10.00
19	பள்ளியறை வெண்சாமரம்	இரவு 8.30		5.00	10.00
20	பன்னீர்			5.00	5.00
21	பஞ்சாமிர்தம் ஆண்டவர் அபிஷேகத்திற்கு (500 கிராமுக்கு)			15.00	15.00
22	தங்கரதசுவாமி புறப்பாட்டுக்கு	மாலை 7.00	மாலை 7.00		2000.00
23	தங்கமயில் வாகனத்தில் சுவாமி புறப்பாட்டுக்கு	மாலை 6.30	மாலை 6.30	1000.00	1000.00

குறிப்பு :

1. அபிஷேகங்களுக்கான டிக்கெட் விற்பனை மாலை 4.40 மணிக்கு நிறுத்தப்படும்.
2. அர்ச்சனை தனி அனுமதிக்கான டிக்கெட் விற்பனை இரவு 7.30 மணிக்கு நிறுத்தப்படும்.
3. காலபூஜைகளின் நேரங்கள் திருவிழா நாட்களில் மாறுதலுக்கு உட்பட்டது.

அருள்மிகு பழனி ஆண்டவர் பிரசாதம் அஞ்சல் வழியில் அனுப்புவதற்கான கட்டணங்கள்

இந்தியாவிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும், இத்திருக்கோவிலுக்கு - அருள்மிகு தண்டாயுதபாணிக்கு அர்ச்சனை, அபிஷேகம் செய்வதற்காகப் பக்த கோடிகளிடமிருந்து மணியார்டர்கள், செக்குகள், டிராஃப்டுகள், மெயில் டிரான்ஸ்பர்கள் முதலியன வந்து கொண்டிருக்கின்றன. அதற்காக உரிய முறையில் அபிஷேகம் அர்ச்சனைகள் செய்து பக்த கோடிகளுக்கு பிரசாதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. ஆகவே பக்தர்கள் தாங்கள் அனுப்பும் மணியார்டர்கள், செக்குகள், டிராஃப்டுகள், மெயில் டிரான்ஸ்பர்கள் முதலியவற்றைக் கீழ்க்கண்ட கட்டண விகிதப்படி தொகையை விவரம் குறித்து செக், டிராஃப்ட், எம்.டி.மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். அல்லது காணிக்கை என வரவு வைத்துக் கொள்ளப்படும்.

புதிய கட்டணங்கள்

1. அர்ச்சனை (அஷ்டோத்திரம்) குறிப்பிட்ட நாளில் ஒருமுறை	5.00
2. அர்ச்சனை (சகஸ்ரநாமம்) குறிப்பிட்ட நாளில் ஒருமுறை	10.00
3. பஞ்சாமிர்த அபிஷேகம் இந்தியாவிற்குள் ஒருமுறை	217.50
4. பஞ்சாமிர்த அபிஷேகம்-இந்தியாவிற்குள் குறிப்பிட்ட நாளில் ஒருமுறை	217.50

ஓராண்டுக்கு மாதாந்திர அர்ச்சனை

5. அஷ்டோத்திர அர்ச்சனை	- இந்தியாவிற்குள்	200.00
6. அஷ்டோத்திர அர்ச்சனை	- வெளிநாடுகளுக்கு	1200.00
7. சமஸ்ரநாம அர்ச்சனை	- இந்தியாவிற்குள்	200.00
8. சமஸ்ரநாம அர்ச்சனை	- வெளிநாடுகளுக்கு	1200.00
9. பஞ்சாமிர்த அபிஷேகம்	- இந்தியாவிற்குள்	3000.00

இதற்கான தொகைகளை,

இணை ஆணையர்/ செயல் அலுவலர்,
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழனி – 624 601. திண்டுக்கல் மாவட்டம்

- என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மெயில் டிரான்ஸ்பர் மூலம் தொகை அனுப்பும் பக்தர்கள் தங்களுடைய தெளிவான முகவரியையும் வேண்டுதலையும் தெரிவிக்க வேண்டும்.

அர்ச்சனை பிரசாதம், அஞ்சல் வழி மூலம் அனுப்பப்படும். பஞ்சாமிர்த அபிஷேகப் பிரசாதம் தபால் மூலம் அனுப்பப்படும். திருக்கோயில் நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட காரணங்களால் பிரசாதம் வந்து சேரவில்லை என்றால் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பு அல்ல.

வேண்டுகோள் - கட்டளைகள் நிதிகள்

1.சுண்டல் கட்டளை ரூ.500.00

இதன்படி உபயதாரர் முதலீடு செய்தால் அதிலிருந்து கிடைக்கும் வட்டியில் உபயதாரர் விரும்பும் நாளில் வருடத்தில் ஒரு நாள் சாயரட்சையின் போது பக்தர்களுக்கு சுண்டல் பிரசாதம் வழங்கப்படும்.

2.அர்ச்சனைக் கட்டளை ரூ.2000.00

இதன்படி உபயதாரர் முதலீடு செய்தால் அதிலிருந்து கிடைக்கும் வட்டியில் உபயதாரர் விரும்பும் நாளில் மாதா மாதம் அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

3.பஞ்சாமிர்தக் கட்டளைகள் ரூ.3,000.00

இதன்படி உபயதாரர் முதலீடு செய்தால் அதிலிருந்து கிடைக்கும் வட்டியில் உபயதாரர் விரும்பும் நாளில் வருடத்தில் ஒரு நாள் பஞ்சாமிர்த அபிஷேகம் செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

4.தங்கமயில் வாகன புறப்பாடு கட்டளை ரூ.10,000.00

இதன்படி உபயதாரர் முதலீடு செய்தால், அதிலிருந்து கிடைக்கும் வட்டியில் உபயதாரர் விரும்பும் நாளில் வருடத்தில் ஒரு நாளில் புறப்பாடு செய்து உபயதாரருக்கு மரியாதைகள் செய்து பிரசாதங்கள் வழங்கப்படும்.

5. தங்கரத புறப்பாடு கட்டளை ரூ.20,000

இதன்படி உபயதாரர் முதலீடு செய்தால் அதில் கிடைக்கும் வட்டியில் இருந்து உபயதாரர் விரும்பும் நாளில் வருடத்தில் ஒரு நாள் புறப்பாடு செய்து உபயதாரருக்கு மரியாதைகள் செய்து பிரசாதங்கள் வழங்கப்படும்.

6. லட்டு பிரசாதக் கட்டளைகள் ரூ.50,000

இதன்படி உபயதாரர் முதலீடு செய்தால் அதில் கிடைக்கும் வட்டியில் இருந்து உபயதாரர் விரும்பும் நாளில் வருடத்தில் ஒரு நாள் சாயரட்சையின் போது 10,000 பக்தர்களுக்கு லட்டு பிரசாதம் வழங்கப்படும்.

7. உச்சிக்காலப் பிரசாதக் கட்டளைகள் ரூ.10,000

இதன்படி உபயதாரர் முதலீடு செய்தால் அதில் கிடைக்கும் வட்டியில் இருந்து உபயதாரர் விரும்பும் நாளில் வருடத்தில் ஒரு நாள் உச்சிக்காலம் முடிவடைந்தவுடன் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படும்.



பூம்பாறை அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத
குழந்தை வேலப்பர் - உற்சவர்

8. நாள் வழிபாட்டுக் கட்டணங்கள் :

	சாதாரண நாட்களில்	புதுவருடப்பிறப்பு, கிருத்திகை, தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற சிறப்பு நாட்களில்
விளாபூஜை கட்டளை	ரூ.10,000	ரூ.15,000
சிறுகாலசந்தி கட்டளை	ரூ.10,000	ரூ.15,000
காலசந்தி கட்டளை	ரூ.10,000	ரூ.15,000
உச்சிக்கால கட்டளை	ரூ.10,000	ரூ.15,000
சாயரட்சை கட்டளை	ரூ.10,000	ரூ.15,000
இராக்கால கட்டளை	ரூ.10,000	ரூ.15,000

மேற்கண்ட பூஜை கட்டளைகள் கிருத்திகை வருடப்பிறப்பு பங்குனி உத்திரம், தைப்பூசம் போன்ற விசேட நாட்களில் ரூ.7500/ இதன்படி உபயதாரர் முதலீடு செய்தால் அதிலிருந்து கிடைக்கும் வட்டியில் இருந்து உபயதாரர் விரும்பும் நாளில் வருடத்தில் ஒருநாள் விரும்புகிற கால பூஜைகளுக்கு நைவேத்திய செலவிற்கு பயன்படுத்தி உபயதாரர்களுக்கு மரியாதைகள் செய்து பிரசாதங்கள் வழங்கப்படும்.

9.அருள்மிகு சண்முகருக்குச் சண்முகார்ச்சனைக் கட்டளை ரூ.7,500.00

இதன்படி உபயதாரர் முதலீடு செய்தால் அதில் கிடைக்கும் வட்டியில் இருந்து உபயதாரர் விரும்பும் நாளில் வருடத்தில் ஒருநாள் மலைக் கோயிலில் உள்ள அருள்மிகு சண்முகருக்கு சண்முகார்ச்சனை செய்யப்படும். உபயதாரருக்கு மரியாதைகள் செய்து பிரசாதங்கள் வழங்கப்படும்.

முடிக் காணிக் கை

முடிக்காணிக் கை செலுத் துவோர் திருக் கோயிலைச் சேர்ந்த சண் முகநதி முடி மண்டபம், அடிவாரம் முடிக்கொட்டகை (பூங் கா ரோடு) சரவணப் பொய் கை முடிக் கொட் டகை (திருஆவினன்குடிக் கோயில்) திருக்கோயிலைச் சேர்ந்த பக்தர்கள் தங்கும் விடுதி ஆகிய இடங்களில் முடிக்காணிக்கையைச் செலுத்தலாம்.

முடிக்காணிக்கை டிக்கெட் ஒன்றுக்கு ரூ.30/- செலுத்த வேண்டும். இதில் நாவிதர் பங்கு ரூ.25 திருக்கோயில் மூலம் பிளேடு சப்ளை செய்யவும் இதர சுகாதார ஏற்பாட்டிற்காகவும் ரூ.5 மட்டுமே. டிக்கெட் கட்டணத்திற்கு மேல் நாவிதருக்கு ஏதும் செலுத்த வேண்டியதில்லை. அவர்கள் அதிகத்தொகை கேட்டுத் தொந்தரவு செய்தால், அங்குள்ள புகார் புத்தகத்தில் எழுதினால் சம்பந்தப்பட்ட நாவிதர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

முடிக்காணிக்கைச் சீட்டை மலைக்கோயிலில் காண்பித்துச் செல்ல வேண் டும். அவ் வாறு காண் பிக் க வில் லையானால் ரூ.30.00 வசூலிக்கப்படும்.

காது குத் துதல் (குத் தகை)

காது குத் துவதற் கு (காது குத் துகிற பொற் கொல் லர் கட்டணம் உள்பட) ரூ.50.00 வசூலிக்கப்படுகிறது.

பூசைக் குரிய மலர் கள்

வழிபாட் டின் போது ஆண் டவனுக் குச் சாத் துவதற் குத் துலுக்கஞ்செவந்தி முதலிய மணமில்லா மலர்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. மணமுள்ள மலர்களே அனுமதிக்கப்படும்.

17. திருக்கோயில் தங்கும் விடுதிகள்

கேட்ட வரமளிக்கும் கலியுகவரதனான அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியைத் தரிசித்து வாழ்வு பெற நாள்தோறும் வெளியூர்களிலிருந்து வந்து குவிகின்ற பக்தகோடிகள் பாதுகாப்பாகவும், வசதியாகவும், தங்கும் பொருட்டு திருக்கோயிலின் காப்பில் பலதரமான பல்வேறு விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தண்டபாணி நிலையம்

அடிவாரம் ஆண்டவர் பூங்கா சாலையில் மலைக்கோயிலுக்கு அருகிலேயே உள்ளது. விபரம் பின்வருமாறு.

தண்டபாணி நிலையம் வாடகை விபரம்

வ. எண்.	அறையின் பெயர்	வாடகை ரூபாய்	ஆன்லைன் பதிவுகள்	நேரடி பதிவுகள்	மொத்தம்
1.	இராஜ அலங்காரம் இல்லம் - A/C	2,500-00	-	1	1
2.	குகன் இல்லம் - A/C	2,000-00	-	10	10
3.	வள்ளி இல்லம் - A/C	2,000-00	-	1	1
4.	தெய்வானை இல்லம் - A/C	2,000-00	-	1	1
5.	வடிவேலகம் இல்லம் - A/C	1,000-00	1	3	4
5.	வடிவேலகம் இல்லம் - A/C	750-00	1	1	2
6.	சண்முகர் இல்லம் - A/C	1,000-00	10	3	13
7.	கதிவேலகம் இல்லம் - A/C	1,500-00	2	2	4
8.	கடம்பன் இல்லம் - A/C	1,000-00	0	4	4
9.	கந்தன் இல்லம் - A/C	500-00	9	3	12
10.	கந்தன் இல்லம் - Non A/C	300-00	6	20	26
11.	கார்த்திகேயன் இல்லம் - Non A/C	300-00	30	40	78
	மொத்தம்		59	97	156

விசேஷ தினங்களில் சிறப்பு வாடகை ஏதும் இல்லை.

மேற்கண்ட அறைகளில் அனுமதிக்கப்பட்ட நபர்களை விட கூடுதலாக தங்கும் நபர் ஒருவருக்கு AC அறைக்கு ரூ.50/-ம், Non AC ரூ.30/-ம் கூடுதலாக வசூலிக்கப்படும்.

இடும்பன் குடில்கள்

மலையைச் சுற்றியுள்ள கிரிவீதியில் திருக்கோயில் தலைமை அலுவலகம் அருகில் உள்ளன.

இடும்பன் குடில்கள் வாடகை விபரம்					
வ. எண்.	அறையின் பெயர்	வாடகை ரூபாய்	ஆன்லைன் பதிவுகள்	நேரடி பதிவுகள்	மொத்தம்
1.	இடும்பன் குடில்கள் - Non A/C	300-00	-	29	29
2.	குகன் இல்லம் - A/C	1,000-00	-	1	1
	மொத்தம்			30	30

சின்னக்குமாரர் விடுதி

மின் இழுவை இரயில் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள இங்கே 14 சிறு குடில்கள் உள்ளன. சாதாரண நாள் வாடகை ரூ.500.00 விசேஷ நாள் வாடகை ரூ.150.00 மேலும் 56 தனி அறைகள் உள்ளன. நாள் 1க்கு வாடகை சாதாரண நாள் ரூ.300.00.

சின்னக்குமாரர் விடுதி வாடகை விபரம்					
வ. எண்.	அறையின் பெயர்	வாடகை ரூபாய்	ஆன்லைன் பதிவுகள்	நேரடி பதிவுகள்	மொத்தம்
1.	வேல் இல்லம் - Non A/C	300-00	15	13	28
2.	மயில் இல்லம் - Non A/C	300-00	15	13	28
3.	A BLOCK - Non A/C	500-00	10	4	14
4.	குறிஞ்சி இல்லம் - A/C	900-00	-	3	3
5.	குறிஞ்சி இல்லம் - Non A/C	900-00	-	4	4
	மொத்தம்		40	37	77

வேலவன் விடுதி

இது பழனி பேருந்து நிலையத்திற்கு அருகில் இரயில் நிலையம் செல்லும் வழியில் உள்ளது.

இங்கு முதல் வகுப்பு அறைகள் 4-ம் இரண்டாம் வகுப்பு அறைகள், 24-ம் மூன்றாம் வகுப்பு அறைகள் 22-ம் 50 பேர் தங்குவதற்கான பெரிய அறை ஒன்றும் உள்ளன.


அருள்மிகு பிரதோச நாயகர் உமையுடன் உற்சவர்
பெரியாவுடையார் திருக்கோயில்



அருள்மிகு சின்னக்குமாரர்
தங்கரதப் புறப்பாடு

அறைகள்	மொத்தம்	வசதிகள்	நாள் 1க்கு வாடகை சாதாரண நாட்கள்	வாடகை (விழாக் காலங்களில்)
முதல் வகுப்பு	4	2 கட்டில்கள் சோபா, சேர்		
இரண்டாம் வகுப்பு	24	2 கட்டில்கள் உள்பட குளியலறை, கழிப்பறை இணைந்தது		
3-ம் வகுப்பு	22	கட்டில் உள்ளது		
ஹால் 1		கழிப்பறை, குளியலறை உள்பட		

குறிப்பு :

மேற்கண்ட அனைத்து விடுதிகளிலும் தங்கும் அறைகளில் அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கு மேல் கூடுதல் நபர் 1க்கு A/C ரூ.50/-, Non A/C ரூ.30/- கட்டணம் வசூலிக்கப்படும். திருவிழாக் காலங்களில் மட்டும் முன்பதிவு செய்யப்படும் முன் பதிவு செய்ய விரும்புவோர், இணை ஆணையர் / செயல் அலுவலர் அவர்களுக்கு கடிதம் மூலம் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யலாம். பிற விவரங்களுக்கு திருக்கோயில் தலைமை அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

பாதுகாப்பு பெட்டக அறை

இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக அடிவாரம் பாதவிநாயகர்கோயில் அருகில் சாமான்களை வைத்துச் செல்ல பாதுகாப்பு பெட்டக அறை (க்ளோக் ரூம்) அமைக்கப்பட்டுள்ளது. இது காலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை செயல்படும். அதற்குக் கட்டணமாக ரூ.5/- வசூலிக்கப்படுகிறது.

பாதஅணி பாதுகாப்பு நிலையங்கள்

மலைக்குச் செல்லும் பக்தர்கள் பாத அணிகளை விட்டுச் செல்ல பாதவிநாயகர் கோயில் அருகிலும், மின் இழுவை இரயில் நிலையம் அருகிலும் கட்டணமில்லா பாதஅணி பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை காலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை செயல்படுகின்றன.

18. சமுதாயப்பணிகள்

கோயில்கள் சோழர் காலத்தில் சமுதாய மையமாக விளங்கின. வேலையில்லாதோருக்கு வேலையளிக்கும் நிறுவனமாகவும், நோய் தீர்க்கும் மருத்துவ மையமாகவும், நிதியளிக்கும் வங்கியாகவும், அறம் வளர்க்கும் அறநிலையமாகவும், ஆடல், பாடல், இசை, நாட்டியம் முதலான கலைகளை வளர்க்கும் கலைக்கூடமாகவும் கல்வி கற்றுத்தரும் கல்வி நிலையங்களாகவும், பண்பாட்டு மையமாகவும் விளங்கி வந்தன என்பதைக் கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகின்றது. சோழர் காலத்தில் திருக்கோயில்கள் ஆற்றிய சமுதாயப் பணிகளைத் தற்போது அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகம் ஆற்றி வருகின்றது எனில் அது மிகையாகாது.

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் பல அற நிறுவனங்களும், கல்விச் சாலைகளும், கலைவளர் கூடங்களும் மிகச் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன. அவையாவன :

சிறுவர் கருணை இல்லம்

1952 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது. 5 வயது முதல் 16 வயது வரை உள்ள பெற்றோர் இல்லாத சிறுவர்கள், தாய், அல்லது தந்தை இல்லாத சிறுவர்கள் சிறுவர் கருணை இல்லத்தில் சேருவதற்கு விண்ணப்பம் செய்யலாம். சிறுவர் கருணை இல்லத்தில் அனுமதிக்கப்பட்ட இடம் 150 ஆகும். தற்போது 126 பேர் உள்ளார்கள். இவர்களுக்கு தங்குமிடம், உணவு, சீருடை, கல்வி மற்றும் மருத்துவச் செலவுகளை நிர்வாகம் வழங்கி வருகிறது.

சிறுமியர் கருணை இல்லம்

ஆதரவற்ற சிறுமியர்களுக்கெனத் தனியாக கருணை இல்லம் நீண்டகாலமாக இல்லாமல் இருந்தது. இக்குறையைப் போக்கும் வகையில் 1998 ஆம் ஆண்டு திருக்கோயில் நிர்வாகம் சிறுமியருக்கென ஒரு கருணை இல்லத்தைத் தொடங்கியது. திருக்கோயில் பழைய சத்திரவளாகத்தில் இக்கருணை இல்லம் அமைந்துள்ளது.

பெற்றோர்களில்லாத மற்றும் தாய் அல்லது தந்தையர் இல்லாத 5 வயது முதல் 13 வயது முடிய உள்ள சிறுமியர்கள் கருணை இல்லத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இவர்களுக்கு தங்குமிடம், உணவு, சீருடை, கல்வி மற்றும் மருத்துவச் செலவுகளை திருக்கோயில் நிர்வாகம் வழங்குகிறது.

சிறுமியர்கள் கருணை இல்லத்திலிருந்து பள்ளிக்குச் சென்றுவர திருக்கோயில் பேருந்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிறுமியர்களைப் பராமரிப்பதற்குப் பணிப் பெண்கள் உள்ளார்கள். சிறுமியர் கருணை இல்லத்தில் அனுமதிக்கப்பட்ட இடங்கள் 50 ஆகும். இந்த இல்லத்தில் தற்போது 34 சிறுமியர்கள் உள்ளனர்.

முதியோர் இல்லம்

''முதியோர் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் ஓர் ஒளிமிக்க மணி இருக்கிறது'' என்று சீனப்பழமொழி கூறுகின்றது. இக்கூற்றுக்கு ஏற்ப திருக்கோயில் நிர்வாகம், முதியோர் இல்லம் ஒன்றினை நிறுவித் திறம்பட நடத்திக் கொண்டு வருகிறது.

ஆதரவற்ற முதியோர்கள், முதியோர் இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். முதியோர்கள் ஓய்வூதியம் பெறாதவர்களாக இருத்தல் வேண்டும். தற்போது முதியோர் இல்லத்தில் 7 பேர் உள்ளனர். முதியோர்களுக்கென அனுமதிக்கப்பட்ட இடம் 10 ஆகும். இவர்களுக்கு தங்குமிடம் உடை, உணவு, மற்றும் மருத்துவச் செலவுகளைத் திருக்கோயில் நிர்வாகம் வழங்கி வருகிறது.

ஆன்மீக ஒழுக்க நெறி போதனை வகுப்புகள்

தமிழக அரசால் அறிவிக்கப்பட்டபடி மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் அவர்களால் 24.3.2002 ஆம் நாளன்று பள்ளிக் குழந்தைகளுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறி போதனை வகுப்பு தொடங்கி வைக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை தோறும் பழனி திருவாவினன்குடித் திருக்கோயிலில் மாலை 4.00 மணி முதல் 5.00 மணி முடிய ஆன்மீக ஒழுக்க நெறி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. திருக்கோயிலைச் சார்ந்த சிறுவர், சிறுமியர் கருணை இல்லத்தில் பயிலும் மாணவ, மாணவியர்களும், பிற பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களும் ஆன்மீக ஒழுக்க நெறி வகுப்புகளில் கலந்து கொண்டு, பயன்பெற்று வருகின்றார்கள்.

அருள்மிகு பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்களும், திருக்கோயில் தமிழ்ப்புலவர்களும் வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். திருக்கோயில் ஓதுவார்கள், தேவாரப் பாடசாலை ஆசிரியர்கள் தேவாரம், திருவாசகம், நாலாயிரதிவ்யப்பிரபந்தம் முதலிய, பக்தி இலக்கியங்களில் பொதிந்துள்ள ஆன்மீகக் கருத்துக்களை விளக்கியும், பக்திப்பாடல்களைப் பாடியும் வகுப்பு நடத்தி வருகின்றனர். இவ்வான்மீக ஒழுக்க நெறி போதனை வகுப்பில் கலந்து கொண்டு பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்குத் திருக்கோயில் சார்பில் சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகின்றது.

இலவசத் திருமணம்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நலத்திட்டங்களுள் ஒன்றான இலவசத்திருமணத் திட்டம் இத்திருக்கோயிலின் சார்பில் தகுதியான இந்து இணைகளுக்குத் திருமணம் நடத்தப்பட்டு வருகின்றது.

வேத சிவாகம பாடசாலை

1955 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வேதசிவாகம பாடசாலையில் ஆலய பூஜை முறை, திருமுறைகள் தமிழ் அர்ச்சனை வைகானச பாஞ்சராத்ர ஆகமங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு கற்றுத்தரப்படுகிறது. இதில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உறைவிடம், உதவித்தொகை, மருத்துவம் மற்றம் கல்விக்கான அனைத்து வசதிகளும் திருக்கோயிலிலிருந்து வழங்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட 20 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

தேவார இசைப்பயிற்சிப் பள்ளி

1997 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதில் மாணவர்கள் சேர்க்கப்பட்டு தேவாராம் திருவாசகம், மற்றும் திருமுறைகள் ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றன. பயிற்சிக்காலம் 3 ஆண்டுகள். கல்வித்தகுதி 5 ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும். பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதாமாதம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இங்கு பயிலும் மாணவர்களுக்கு உணவு, உறைவிடம், மருத்துவம் மற்றும் கல்விக்கான அனைத்து வசதிகளும் திருக்கோயிலிலிருந்து வழங்கப்படுகின்றன.

நாதசுரம் மற்றும் தவில் கல்லூரிகள்

இக்கல்லூரி 1957 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்கு பயிலும் மாணவர்களுக்கு கல்வி, உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி அனைத்தும் திருக்கோயில் செலவில் வழங்கப்படுகின்றன.

வயது வரம்பு : 10 வயது முதல் 13 வயது வரை

கல்வித் தகுதி : 5 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை

பயிற்சிக்காலம் : 3 ஆண்டுகள்

நாதசுரக்கல்லூரியில் அனுமதிக்கப்பட்ட இடம் : 30

தவில் கல்லூரியில் அனுமதிக்கப்பட்ட இடம் : 25

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேற்கண்ட இல்லங்கள், கல்வி நிலையங்களில் சேருவதற்கு திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் அல்லது திருக்கோயில் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் உதவி பெறும் தொடக்கப்பள்ளி, பழனி

பழநி அடிவாரம் வடக்கு கிரிவீதியில் குடமுழுக்கு நினைவரங்கத்திற்கும், காதுகேளாதோர் பள்ளிக்கும் இடையில் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தொடக்கப்பள்ளி, அமைந்துள்ளது. இப்பள்ளி 1982ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. திருக்கோயில் நிர்வாகத்தால் நடத்தப்படும் கருணை இல்ல மாணவர்கள் 48 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளியில் தற்போது 300 மாணவ மாணவியர் பயில்கின்றனர். பின்தங்கிய மக்கள் அதிகம் வாழும் பகுதியில் உள்ள இப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கு அரசால் வழங்கப்படும் இலவசப் பாடநூல் ஏடுகள், சீருடை, இலவசப்பேருந்து பயண அட்டை, போன்ற நலத்திட்டங்கள் பள்ளி மூலம் பெற்று வழங்கப்படுகின்றன.

தனித்தனி வகுப்பறைகளுடன் நல்ல காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் உள்ளவாறு கட்டிடங்களும், விளையாட்டு மைதானம் என சுமார் 1 1/2 ஏக்கர் நிலப்பரப்பில் பள்ளி வளாகம் அமைந்துள்ளது. சுற்றுச் சுவர் மற்றும் மாணவ / மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு தனித்தனியே கழிப்பிட வசதி திருக்கோயில் நிர்வாகத்தால் செய்து தரப்பட்டுள்ளது. பள்ளிக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இரு மழைநீர் சேமிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. பள்ளி வளாகம், வேம்பு, புளி,அரசு, வாழை, முருங்கை, கொய்யா, மாதுளை, நாவல், நெல்லி, மா, பாதாம்பி, எலுமிச்சை, யூகோலிப்ட்ஸ் மரங்களும் பலவகையான பூச்செடிகளும் கொண்டு நல்ல இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது.

மாணவர்கள் அன்றாடம் சீருடையில் தூய்மையாக வருகை புரிகின்றனர். வகுப்பறையிலும், பள்ளி வளாகத்திலும், தூய்மை பேணப்படுகிறது. பள்ளியில் மாணவ/மாணவியர்களுக்கு திருப்பாவை, திரும்வெம்பாவை, திருப்புகழ் போன்ற பக்தி நூல்கள் கற்றுத்தரப்படுகின்றன. மாணவ/மாணவியர்க்கு தரமான கல்வியுடன், ஒழுக்கம் பொது அறிவு, பக்தி நெறி போன்றவை கற்றுத் தரப்பட்டு சிறந்த பள்ளியாக விளங்கி வருகிறது.

காது கேளாதோர் பள்ளி

இப்பள்ளி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தினால் 14.2.1972 அன்று தொடங்கப்பட்டு அரசு அங்கீகாரம் பெறப்பட்டு வடக்கு கிரிவீதியில் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 40 மாணவர்கள் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள். இப்பள்ளியில் காதுகேளாதோருக்கு பாடம் போதிக்கும் சிறப்பு பயிற்சி முறையில் தேர்ச்சி பெற்ற ஆசிரியைகள் உட்பட மொத்தம் 6 பேர் ஆசிரியைகளாகப் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது இப்பள்ளியில் முதல் வகுப்பு முதல் 5 வகுப்புகள் வரை உள்ளன. இப்பள்ளியுடன் அரசினரால் தொடங்கப்பட்டு இயங்கி வரும் காது கேளாதோர் முன்பருவப் பயிற்சிப் பிரிவின் இரண்டு வகுப்புகளும் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

இப்பள்ளி மாணவர்களுக்கு கல்வி, உணவு, உடை உறைவிடம், மருத்துவம் ஆகிய அனைத்து வசதிகளும், திருக்கோயில் நிர்வாகத்தாரால் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இம்மாணவர்களுக்கு செவித்துணைக்கருவிகள் மற்றும் உதவித் தொகை ஆகியவற்றை அரசிடமிருந்து பெற்று மாணவர்கட்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இத்துடன் இணைந்து செயல்பட்டு வரும் அரசினரின் முன்பருவப் பிரிவு வகுப்பு மாணவர்களின் அனுமதிக்கப்பட்ட வயது வரம்பு 3-6. இம்மாணவர்களின் உணவு, உடை ஆகியவற்றிற்கான செலவினை அரசு ஏற்றுக் கொள்கிறது. இங்கு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் ஊனமுற்றோருக்கு அரசால் வழங்கப்படும் சலுகைகளைப் பெற உதவியாக இருக்கும் வகையில் ஒவ்வொருவருக்கும் அரசிடமிருந்து அடையாள அட்டை பெற்றுத்தரப்படுகிறது. இப்பள்ளி திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒரே ஒரு காதுகேளாதோர் பள்ளியாக, அதுவும் கோயில் நிர்வாகத்தின் கீழ் நடத்தப்படும் பள்ளியாக இயங்கி வருகிறது.

இப்பள்ளி மாணவர்களைக் கண்காணிக்கவும், பராமரிக்கவும் ஒரு காப்பாளர், இராக்காவலர் மற்றும் 2 ஆயாக்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

உயர் கல்வி நிலையங்கள்

1. அருள்மிகு பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி, பழனி.
2. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி.
3. அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி, பழனி.
4. அருள்மிகு பழனியாண்டவர் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி, பழனி.



மருத்துவமனை :

திருக்கோயில் நிர்வாகத்தால் 14.02.1972 ல் இம்மருத்துவமனை தொடங்கப்பட்டது. இம்மருத்துவமனையில் பெண் மருத்துவர், செவிலியர், உதவி செவிலியர், பெண் செவிலி உதவியாளர், மருந்தாளுனர் மற்றும் உதவி மருந்தாளுனர் பணி புரிந்து வருகின்றனர்.

சாதாரண நாட்களிலும் மற்றும் திருவிழாக்காலங்களிலும் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நாள் முழுவதும் முதலுதவி சிகிச்சை மையங்கள் கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

1. மின் இழுவை இரயில் நிலையம்
2. யானைப்பாதை - இடும்பன் கோயில் அருகில்
3. மலைக்கோயில்

ஆம்புலன்ஸ் வசதி :

அவசர கால ஆம்புலன்ஸ் வசதியும் திருக்கோயில் நிர்வாகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மின்கல மகிழுந்து (Battery Car):

இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்கள் பயன்பாட்டிற்காக 6 இருக்கைகள் கொண்ட மின்கல மகிழுந்து இத்திருக்கோயிலின் மலைக்கோயிலிலும், 11 இருக்கைகள் கொண்ட இரண்டு மின்கல மகிழுந்துகள் கிரி வீதியிலும் பக்தர்களுக்கு பயன்படும் வகையில் இயங்குகிறது.

திருக்கோயில் ஆண்டவர் நூலகம் :

11.03.1965 அன்று தொடங்கப்பட்டது தமிழ் ஆராய்ச்சி, வரலாற்று ஆராய்ச்சி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் சுமார் 5600 அரிய நூல்கள் இந்நூலகத்திலுள்ளது. நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் ஆகியவற்றை பக்தர்கள் படிக்கும் வகையில் அமைந்துள்ளது.

யானைகள் :

திருக்கோயிலில் கஸ்தூரி (வயது 49) என்ற ஒரு பெண் யானை உள்ளது. பழனி நகர் அருள்மிகு பெரியநாயகி அம்மன் திருக்கோயில் வளாகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் கஜபூஜை நடத்தப்பட்டு வருகிறது. தைப்பூசம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் போன்ற தேர்த்திருவிழாவில் யானை திருவுலா வருவது கண்கொள்ளாக்காட்சியாகும்.

கந்தர் சஷ்டித் திருவிழாவின் போது யானைப் பாதையின் வழியாக மலைக்கோயிலுக்கு வந்து கந்தர் சஷ்டி நோன்பு திருக்காப்பணிந்து சூரசம்ஹார விழாவில் உலாவருவது பக்தர்களுக்கு பரவசம் அளிக்கும் ஒன்றாகும். உரிய மருத்துவர், பாகன்கள் கண்காணிப்பில் பேணப்பட்டு வரும் யானை கஸ்தூரி திருக்கோயிலுக்கு பெருமை சேர்க்கிறது.

திருக்கோயிலைச் சார்ந்த காரமடைத் தோட்டத்தில் ஓய்வெடுக்கும் யானை கஸ்தூரிக்கு திருக்கோயில் நிர்வாகம் சார்பாக நீச்சல் குளம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கோசாலை :

பழனித் திருக்கோயிலைச் சார்ந்த ஒருங்கிணைந்த கோசாலை பழனியில் இருந்து 38 கிலோ மீட்டர் தொலைவில் ஈசக்காம்பட்டி கிராமம் அருகில் சுமார் 219 ஏக்கர் 85 செண்டில் 2008 ஆம் ஆண்டு சூன் மாதம் தொடங்கப்பட்டு சிறந்த முறையில் கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கோசாலைக்கு பழனித் திருக்கோயிலுக்கு உபயமாக வரப்பெறும் கால்நடைகள் மட்டுமல்லாது தமிழ்நாட்டில் உள்ள பிற திருக்கோயிலில் இருந்தும் உபயமாகப் பெறப்படும் கால்நடைகள் கொண்டு வரப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

காரமடைத் தோட்டம் :

பழனித் திருக்கோயிலைச் சார்ந்த காரமடைத் திருக்கோயில் யானைக்குத் தேவையான பச்சைப்புல், சோளம், கரும்பு ஆகியவை பயிரிடப்பட்டு தீவனமாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தைக்கால் தோட்டத்தில் கால்நடைகளுக்குத் தேவையான பச்சைப்புல் 3.88 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டு கால்நடைகளுக்குத் தீவனமாக வழங்கப்படுகிறது.

சுற்றுலாப்பேருந்து நிலையம் :

பழனிக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கிழக்கு கிரி வீதியில் (ரோப் கார் நிலையம் அருகில்) சுற்றுலாப்பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் கட்டணமில்லா குளியலறை மற்றும் கழிப்பறை போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மலைக்கோயில் செல்ல மின் இழுவை இரயில் (WINCH STATION)

பக்தர்கள் இறைவனைத் தரிசிப்பதற்கென்றே மலைமீது ஏற முதன் முதல் மின்இழுவை இரயில் விடப்பட்டது பழநியில் தான் என்பது குறிப்பிடத்தக்கது. மின்சாரத்தின் உதவியால் இயங்கும் இந்த மின் இழுவை இரயில் வயது முதிர்ந்தவர்களுக்கும், நடக்க இயலாதவர்களுக்கும், உடல் நலம் இல்லாதவர்களுக்கும் குழந்தைகளுக்கும் மலை மீது சென்று ஆண்டவனைத் தரிசித்துவர மிகவும் வசதியாக இருக்கிறது.

மூன்று மின்இழுவை இரயில்கள் இயங்குகின்றன. இந்த இரயில்கள் எட்டு நிமிடங்களில் மலையின் உச்சியைச் சென்றடைந்து அங்கிருந்து புறப்பட்ட எட்டு நிமிடங்களில் அடிவாரத்தை வந்தடைகின்றன. இந்த மின் இழுவை இரயில்கள் **காலை 5 மணி முதல் இரவு 9 மணி** வரை இயங்குகின்றன. இந்த இரயிலில் பயணம் செய்ய ஒரு தடவைக்கு பெரியவர்களுக்கு தலா ரூ.10/-. 10 வயதுக்குட்பட்டவர்களுக்கு தலா ரூ.5/- கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது.

கம்பி வட ஊர்தி (ROPE CAR)

பழனித் திருக்கோயில் நிர்வாகம் பக்தர்களின் வசதிக்காகவும், பக்தர்கள் விரைவில் மலைக்கோவிலுக்குச் சென்று பழனி முருகனைத் தரிசனம் செய்வதற்கும் கம்பி வட ஊர்தித்திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. ரூபாய் நான்கு கோடி செலவில், பக்தர்கள் மிகவும் பாதுகாப்பான முறையில் மலைக்குச் செல்வதற்கு இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெட்டியிலும் 4 பேர் வீதம் அமர்ந்து செல்லும் வகையில் மொத்தம் 20 பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. கம்பி வட ஊர்தி மூலமாக ஒரு மணி நேரத்திற்குள் 800 பக்தர்கள் மலைக்கோயிலுக்குச் செல்லலாம். அதே சமயத்தில் 800 பக்தர்கள் மலைக்கோயிலிருந்து கீழே இறங்கலாம்.

கட்டண விபரம்

1. கீழ் தளத்திலிருந்து மலைக்கோவில் செல்வதற்கு (நபர் 1-க்கு) ரூ.15.00 மட்டும்.
2. மலைக்கோவிலிருந்து கீழ் தளம் வருவதற்கு (நபர் 1-க்கு) ரூ. 15.00 மட்டும்.

நவீன இரண்டாவது கம்பிட ஊர்தித் திட்டம்

திருவிழாக்காலங்களில் பழனி மலைக்கு தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் மலைக்கோயிலுக்கு விரைவாகச் சென்று தரிசனம் செய்து திரும்புவதற்கு ஏற்ற வகையிலும், குறிப்பிட்ட நேரத்திலும் அதிக எண்ணிக்கையில் பயணிக்கும் வகையில் நவீன இரண்டவது கம்பிவட ஊர்த்தித் திட்டம் (Multi Cable Fixed Grip Jig Back Type Passenger Ropeway) சுமார் 74 கோடி மதிப்பீட்டில் M/s. Shriram, EPC Limited, POMA SAS Consortium என்றகுழுமத்தின் திட்ட அடிப்படையில் இவ்வாண்டில் 2017 அமைக்கப்பட உள்ளது.

19. வழிபாட்டுப்பாடல்கள்

திருப்புகழ் : விநாயகர் :

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுகத் துணர்வூதி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் கா[illegible]வனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே

திருவாவினன்குடி :

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுந் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே

பழனி மலை :

உலகபசு பாத தொந்த மதுவான
உறவுகிளை தாயர்தந்தை மனைபாலர்
மலசலசு வாச சஞ்ச லமதாலென்
மதிநிலைகெ டாம லுன்ற னருள்தாராய்
சலமறுகு பூளை தும்பை யணிசேயே
சரவணப வாமு குந்தன் மருகோனே
பலகலைசி வாக மங்கள் பயில்வோனே
பழநிமலை வாழ வந்த பெருமாளே

வசனமிக வேற்றி மறவாதே
மனதுதுய ராற்றி லுழ்தாதே
இசைபயில்ச டாக்ஷ ரமதாலே
இகபரசெள பாக்ய மருள்வாயே
பசுபதிசி வாக்ய முணர்வோனே
பழநிமலை வீற்ற ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே

கருவினுரு வாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து
கலைகள்பல வேதெ ரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்க ளடிசுவடு மார்பு தைந்து
கவலைபெரி தாகி நொந்து மிகவாடி
அரகரசி வாய வென்று தினமுநினை யாமல் நன்று
அறுசமய நீதி யொன்று மறியாமல்
அசன்மிடு வார்கள் தங்கள் மனைகள்தலை வாசல் நின்று
அநுதினமு நாண மின்றி மழிவேனே
உரகபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாள ரங்க
ருலகளவு மால்ய கிழ்ந்த மருகோனே
உபயகுல தீப துங்க விருதுகவி ராஜ சிங்க
உறை புகலி யூரி லன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒரு பொழுது தூது சென்ற
பரமனரு ளால்வ ளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர் சிறை மீள வென்று
பழநிமலை மீதில் நின்ற பெருமாளே

கந்தர் அலங்காரம்

விழிக்குத் துணை திருமென்மலர்ப பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை முருகாஎனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே

திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம் பூடுருவப்
பொருவடி வேலும் கடம்பும் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடிவான வதனங்கள் ஆறும் மலர்க் கண்களும்
குருவடிவாய் வந்தென் உள்ளம் குளிரக் குதிகொண்டவே

கந்தர் அனுபூதி :

ஆடும் பரிவேல் அணி சேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானைச் சகோதரனே

எம்தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ.
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்
கந்தா! கதிர் வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே!

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் :

பண்டுவிண் ணோர்குலம் வாழப் புரந்து பழனியிலோர்
தண்டுடன் நின்று விளையாடு மாண்புடைச் சற்குரவற்
கண்டு தொழுது துதிபாடி நெஞ்சிற் கருதும் உண்மைத்
தொண்டு செய் வார்க்கவன் வேலும் மயிலும் துணை செய்யுமே.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் :

மாதா பிதா குரு தெய்வங்களெலாம் இங்கெனக்கு
நீதான் எனை விலக்கல் நீதியன்றால் - ஆதாரம்
வேறு உணர்கிலேன் பழனி வித்தகா வெவ்வினையை
நீறு செயல் வேண்டுமின்றே நேர்ந்து

முருகன் திருமேனிகளின் மூல கிரந்த சுலோகங்கள்

1. கந்தசுவாமி

கல்பத்ருமம் ப்ரணமதாம் கமலாருணாபம் ஸ்கந்தம் புஜத்வய !
மநாமயம் ஏகவக்த்ரம் !
காத்யாயநீ சுதம் அஹம் கடிபத்த வாமம் கௌபீந தாண்டதரம்
தட்சிணஹஸ்தம் ஈடே !
- குமாரதந்திரம்

சதுர்புஜம் த்விநேத்ரம் ச ச்வேத பத்மாஸநஸ்திதம்!
குக்குடாபய வஜ்ராணி தததம் வரதம் கரே!!
கிஞ்சித் கேச சிகாபத்த புஷ்ப மாலாபி ராவ்ருதம்!
தாம்ர வர்ணப்ரபம் ஸ்கந்தம் பிரபாமண்டல மண்டிதம்!!
- ஸ்ரீ தத்வநிதி

2. சுப்பிரமணியர்

சிந்தூராருணம் இந்து காந்தி வதநம் கேயூர ஹாராதிபி :
திவ்யை : ஆபரணை : விபூஷித தநும் ஸ்வர்காதி சௌக்யப்ரதம்!
அம்போஜாபய சக்திகுக்குடதரம் ரக்தாங்க ராகாம் சுகம்
ஸுப்ரம்ஹண்யம் உபாஸ்மஹே ப்ரணமதோ பீதிப்ரணா சோத்யதம்!!

ஏகவக்த்ரம் த்வர்தோர் தண்டம் கடிபத்தாபயான்விதம்!
தருணருண ஸங்காசம் ஸுபரய்மண்யம் உபாஸ்மஹோ!
- குமாரதந்திரம்

3. சண்முகர்

வந்தே சிந்தூர காந்திம் சரவிபிநபவம் ஸ்ரீமயூராதிரூடம்
ஷட்வக்த்ரம் தைவசைந்தம் மதுரிபுதநயா வல்லபம் த்வர்தசஷம்!
சக்திம் பாணம் க்ரபாணம் த்வஜமபிச கதாஞ்சாபயம் ஸவ்யஹஸ்தே!
சாபம் வஜ்ரம் ஸ்ரோஜம் கடகம்ஷீவரம் சூலமன்னயர் ததாநம்!!
- குமாரதந்திரம்

4. முருகன் போற்றி

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற வீராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி!

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி!

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியாரெல்லாம் !

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

திருச்சிற்றம்பலம்.

